[இஃது உலகு இயல்பு கூறினவர் ''இவர் அவளை (தலைவியை) வளர்த்த செவிலித்தாய் போலும்'' என்று தம்முள் கூறி அவர்கள் (தலைவன், தலைவி) தில்லையைச் சேர்ந்திருப்பார் கள் என்று சொல்லிச் செவிலியை மீட்டுக்கொண்டு போயினர்.]

2. செவிலி தன்னைக் குறிப்பது

அருவினையேன் 228
முன் செய்வினையேன் 237
வினையேன் 238

செவிலியைக் கண்டோர் (உடன்போக்கில்) குறிப்பது

அன்னை 244, 246, 247
ஆண்டில் எடுத்தவராம் இவர்தாம் 249

3. செவிலியும் எதிரில் வந்தவரும் சிவனும்

1. செவிலி—என் நெஞ்சகத்தே பயிலெனப் பேர்ந்தறியாதவன் தில்லை 224
2. எதிரில் வந்தவர்—புலியூர் எனை நின் றுண்டான் 244

VI. நற்றாய்

1. நற்றாய் கொடிக்குறி பார்த்தல்

(காகத்தை நயந்து வேண்டியது)

தில்லையன்ன மணங் கொளஞ் சாயலும் மன்னனும் இன்னே வரக்கரைந்தால் உணங்கலஞ்சாது உண்ணலாம் ஒரு நாள் நிணப்பலி யோக்குவல், மாக்*குணங்க ளஞ்சாற் பொலியுந் நலசேட்டைக் குலக் கொடியே 235

2. நற்றாயும் சிவனும்

காலன் புகுந்து அவியக் கழல் வைத்து எழில் தில்லை நின்ற மேலன் புகுந்து என்கண் நின்றான் இருந்த வெண்காடு 236
பிறவி பெருமற் செய்தோன் 322

---

*காக்கையின் குணம் ஐந்து :

காலை எழுந்திருத்தல், காணாமலே புணர்தல்
மாலை குளித்து மனைபுகுதல்—சாலவே
உற்றாரோ டுண்ணல், உறவாடல் இவ் ஐந்து
கற்றாயோ காக்கைக் குணம். —தனிப்பாடல்.

சேட்டை ‧ மூதேவி ; கொடி-காக்கை; மூதேவியின் கொடி காக்கை.

3. நற்றாயைச் செவிலி விளித்தல்

வேயின தோளி 234

நற்றாய்க்குச் செவிலி கூறுதல்

வேயின தோளிமெலியல்...தாம் போயின எல்லையெல்லாம் புக்கு நாடுவன் பொன்னினையே 234

[இது தலைவன், தலைவி சென்ற இடமெல்லாம் நான்போய்த் தேடி வருவேன் என்று செவிலி நற்றாய்க்கு உரைத்தது.]

இளையாள், இவளை என் சொல்லிப் பரவுதும், ஈரெயிறு, முளையா அளவில் முதுக்குறைந்தாள் கயிலைப் பயில் செல்வியையே 294

தில்லைத் தொல்நகரிற், கண்ட இல் மேவுநம் இல், நீ அவள், நின் கொழுநன்......திண் தோளவன், யான் அவள் தற் பணி வோள், வண்டினம் மேவும் குழலாய் அயல் மன்னும் இவ்வயலே 302

[இது தலைவியின் வாழ்க்கை நலத்தை நற்றாய்க்குச் செவிலி கூறினது.]

* பொட்டணியான்......தன் காதலனே 303

[இது செவிலி நற்றாய்க்குத் தலைவன் உடைய காதல் மிகுதியைக் கட்டுரைத்தது]

தெய்வம் பணிகழலோன் தில்லைச் சிற்றம்பலம் அனையாள், தெய்வம் பணிந்து அறியாள் என்று நின்று திறைவழங்காத் தெவ்வம் பணியச் சென்றாலும் மன் வந்தன்றிச் சேர்ந் தறியான், பௌவம் பணிமணி அன்னார் பரிசு இன்ன பான்மைகளே 304

[இது தலைவியின் கற்பை அறிவித்தது.]

பூவணம் அன்ன பொன்னின் கற்(பு) அந்தி வாய்வட மீனும் கடக்கும் படி கடந்தும், இற்பந்தி வாயன்றி வைதல் செல்லாது அவன் ஈர்ங்களிறே 305

தான் (தலைவி) இருந்த தேசத்தில் அரசனுக்கு வெற்றியுண் டாம். ஆதலால் தன் கணவனுக்குப் படிகடந்து செல்ல வேண்டா என்பது கருத்து.] (இது பழைய உரை)

மன்னவன் தெம்முனை மேற் செல்லுமாயினும் மால் அரியேறு அன்னவன் தேர் புறத்து அல்கல் செல்லாது...மூவல அன்னாளும் மற்றோர் தெய்வ முன்னலளே 306

* முழுப்பாட்டை பக்கம் 150ல் பார்க்க.

தலைவி தன் கணவனாகிய தெய்வத்தை அன்றிப் பிறிதொரு தெய்வத்தைத் தெய்வமாக நினையாள்
[இது பெருநில மன்னன் ஏவிவிட சிங்க ஏற்றை ஒப்பானுடைய தேர் பிறிதோரிடத்து தங்காது.]

(இது பழைய உரை)

ஆனந்த......அணி நலமே 307

முழுப்பாட்டை பக்கம் 159 பார்க்க

4. நற்றாயைத் தலைவி குறிப்பது

சுற்றின வீழ்பனி தூங்கத் துவண்டு துயர்க வென்று, பெற்றவளே யெனைப் பெற்றாள் 320

தாயர் ஐவர் :—1. பாராட்டுந் தாய், 2. ஊட்டுந் தாய். 3. முலைத்தாய். 4. கைத்தாய் 5. செவிலித் தாய். செவிலித் தாய் - வளர்ப்புத் தாய்; ஈன்ற தாய் - (நற்றாய்)

5. நற்றாயைத் தோழி குறிப்பது

அன்னை என்னின் மகிழும் 135
எம் அ(ன்)னையே 132
போய் விளையாடல் என்றாள் அன்னை 133
முனிதரும் அன்னையும் 98

6. நற்றாயைத் தோழி குறிக்கும் சொற்கள்

அன்னை 256 யாய் 291

VII. தலைவனும் தலைவியும் தோழியும்

1. தலைவன் பிரிவால் தலைவிக்கு நேர்ந்தவை

எழுதிற் கரப்பதற்கே, அறிவாள் ஒழிகுவது அஞ்சனம் 334
[இஃது அஞ்சன மெழுதின் எழுதுகின்ற காலமத் துணையுங் காதலர் தோன்றாமையான் அவ்வஞ்சனத்தை யொழிவதறிவாள். ஆதலால் அஞ்சனம் எழுதுவதில்லை என்றபடி, இது தலைவன் பொருள்வயிற் பிரியும்போது நிகழ்ந்தது.]

ஒளிமேகலை உகளும் வீழும் வரிவளை மெல்லியல் ஆவி செல்லாத முன்னே சூழுந் தொகு நிதி அன்பர் தேர் வந்து தோன்றியதே 350

[இதுவும் பொருள்வயிற் பிரியும்போது நிகழ்ந்தது.]

கானக் கடஞ் செல்வர் காதல ரென்னக் கதிர் முலைகள், மானக் கனகந் தரும் மலர்க் கண்கள் முத்தம் வளர்க்கும் 335

[இது தலைவர் பொருள் தேடப் பிரிய நினைக்கின்றனர் என்று சொன்னவுடன் தலைவிக்கு நேர்ந்தது.]

சேர்ப்பர் திங்கள் வாணிகர் வெள்வளை கொண்டு அகன்றூர் 183

[இது தலைவன் ஒருவழித் தணந்தபோது தலைவிக்கு நேர்ந்தது.]

2. தலைவி தலைவனுடைய பிரிவை ஆற்றுது உரைத்தது

நீத்த கன்றூர் வருகென், ஆழி திருத்திச் சுழிக்கணக் கோதி நையாமல் ஐய, வாழி திருத்தித் தரக்கிற்றியோ வுள்ளம் வள்ளலையே 186

[இது தலைவன் ஒருவழித் தணந்தபோது தலைவி கூடல் இழைத்து வேண்டுதல்.]

துறைவர் தம் போக்கும் மிக்க தீர்த்தர் அங்கன் தில்லைப் பல் பூம் பொழிலிற் செப்பும் வஞ்சினமும். ஆர்த்தர் அங்கம் செய்யும்...உய்யுமாறென் கொல் ஆழ்சுடரே 187

[இது தலைவி சுடரொடு (சூரியனேடு) புலம்பி நின்றது.]

பகலோன் கரந்தனன், காப்பவர், சேயர்...தில்லைப் பைம் பொழிற் சேக்கைகள் நோக்கின வால், அகலோங் கிருங்கழி வாய்கொழு மீனுண்ட அன்னங்களே 188

[இது பொழுது போனதைக் கண்டு தலைவி கவலையுற்றது]

உளநோய் இன்னும் அறிகிலவால் என்னை பாவம் இருங்கழிவாய் மன்னும் பகலே மகிழ்ந்திரை தேரும் வண்டானங்களே 189

[இது வண்டானப் பறவையொடு (நீர்க்கோழிகளுடன்) தலைவி வருந்தினள்!]

சிலை சூழ்ந்து அருங்கழி காதம் அகலும் என்றாழ் என்று அலந்து கண்ணீர், வரும் கழி காதல் வனசங்கள் கூப்பும் மலர்க் கைகளே 190

[இது பங்கயத்தோடு தலைவி பரிவுற்று உரைத்தது.]

இந் நாளிலம் துஞ்சும் நயந்த இன்பச் சேவல் தழீஇச் சென்று தான் துஞ்சும், யான் துயிலாச் செயிர் எங்காவல் தழீஇய வர்க்கு ஓதாது அளிய களியன்னமே 191
[இது "தன் சேவலைப் பொருந்திக் கவலையின்றித் துயில் கின்றது." என அன்னத்தொடு அழிந்து தலைவி கூறினள்.]

தலைவன் தலைவி தோழி இவர்களைப் பற்றியவை

அம்பலம் போல் மின்நிற நுண்ணிடைப் பேரெழில் வெண் நகைப் பைந்தொடியீர் 58
ஆவியன்னாய் கவலேல் அகலேம் என்று அளித் தொளித்த, ஆவி அன்னார் மிக்க வாவினராய் கெழுமற் கழிவுற்று ஆவி அன்னார் மன்னி ஆடிடம் சேர்வர்கொல்? 53
ஆனந்த வெள்ளத் தழுந்து மொர் ஆருயிர் ஈருருக் கொண், டானந்த வெள்ளத் திடைத் திளைத்தா லொக்கும் அம்பலஞ்சேர் ஆனந்த வெள்ளத் திறைகழலோ னருள் பெற்றவரின் ஆனந்த வெள்ளம்வற் றுதுமுற் றுதிவ் வணிநலமே 307
[இது தலைவன் தலைவி இருவருடைய காதலைக் குறிக்கின்றது.]
என்கண் தெளிசென்ற வேற்கண் வருவித்த செல்லல் எல்லாம் 56
கழுநீர் மலரிவள் யானதன் கண் மருவிப் பிரியாக் கொழுநீர் நறப்பருகும் பெரு நீர்மை அளி குலமே 123
காகத் திரு கண்ணிற் கொன்றே மணி கலந்தாங்கு இருவர், ஆகத்துள் ஓர் உயிர் கண்டனம் யாம் இன்று...... தோகைக்குந் தோன்றற்கு மொன்றாய் வரும் இன்பத் துன்பங்களே 71
காம்பிணையால், களிமாமயிலால், கதிர் மாமணியால், வாம் பிணையால் வல்லி ஒல்குதலால்...கயிலைப் பயில் புனமுந் தேம்பிணை வார்குழலாள் எனத் தோன்றும் என் சிந்தனைக்கே 38
காயமும் ஆவியும் நீங்கள் 207
குறப்பாவை நின் குழல் வேங்கையம் போதொடு கோங்கம் விராய் நறப்பாடலம் புனைவார், நினைவார்......சென்று சென்று, பிறப்பான் அடுப்பினும் பின்னுந் துன்னத் தகும் பெற்றியரே 305
கொழுந்தேன் மலர்வாய்க் குமுத மிவள் யான்குழூஉச் சுடர் கொண்டெழுந் தாங்கது மலர்த் தும்முயர் வானத் திள மதியே 166

சிற்றம்பலம் அனையாள, தெய்வம் பணிந்தறியா ளென்று நின்று திறைவழங்காத் தெவ்வம் பணியச் சென்றுலுமன் வந்தன்றிச் சேர்ந்தறியான், பௌவம் பணிமணி யன்னார் பரிசின்ன பான்மைகளே 304

[தலைவன் தலைவி இவர்களுடைய தன்மை இவ்வாறென விளக்குதல்.]

சிறப்பு இவட்கு என்னொடென்று கண்கள் சென்று பயில்கின்ற 18

சீரியல் ஆவியும் யாக்கையும் என்னச் சிறந்தமையாற், காரியல் வாட்கண்ணி யெண் அகலார் கமலங் கலந்த, வேரியுஞ் சந்தும் வியல் தந்தெனக் கற்பின் நிற்பரனே, காரியல் கண்டர் வண்தில்லை வணங்குமெங் காவலரே 301

[தலைவன், தலைவி ஒற்றுமை பற்றிக் கூறுதல்.]

சொற்பால் அமுதிவள் யான் சுவை என்ன

தழுவிம் முழுவிச், சுவலங்கிருந்த நம் தோன்றல் துணையெனத் தோன்றுதலால், அவலங் களைந்து பணி செயற்பாலை யரசனுக்கே 389

தன் பாவைக்கு மேவி...ஒருவர் குரூஉ மலர்த்தார் வாளரிக் கண்ணி கொண்டாள் வண்டல் ஆயத்தெம் வாணுதலே 225

தில்லைப்பன் மலர்கேழ் கிளர மடுத்தான் குடைந்தன் றழுங்க அழுங்கித் தழீஇ மகிழ்வுற் றெடுத்தாற் கினியன வேயினி யாவன எம்மனைக்கே 226

தில்லையன்னுய்க் காளா யொழிந்த என் ஆருயிர் 4F

நேயத்ததாய்...ஆயத்ததாய் அமிழ்தாய். அணங்காய் அரன் அம்பலம் போல் தேயத்ததாய்...இதோ வந்து நின்றது என் மன்னுயிரே 33

படமா சுணப் பள்ளி இக் குவடாக்கி அப்பங் கயற்கண் நெடு மால் என என்னை நீ நினைந்தோ நெஞ்சத் தாமரையை இடமா இருக்கலுற்றோ வடமார் மூலை மடவாய் வந்துவை கிற்றிவ் வார் பொழிற்கே 120

பிரியாமையு முயிரொன்றுவதும் பிரியிற் பெரிதுந் தரியாமையு மொருங்கே நின்று சாற்றினர்...பேரியலூரன்ன 311

பொட்டணியான் நுதல் போயிறும் பொய் போலிடை யெனப் பூண், இட்டணி (பான் தவிசின் மலரன்றி மிதிப்பக் கொடான், மட்டணி வார்குழல் வையான் மலர் வண்டுறு தலஞ்சிக், கட்ட வார்சடை யோன்தில்லை போலிதன் சூாதல்னே 303

[தலைவனுக்குத் தலைவிமேலுள்ள காதல்]

பொழிற்கு எழிலாம் என் குலதெய்வமே 29

மன்னவன் தெம்முனை மேற்செல்லு மாயினும் மாலரியே,
நன்னவன் தேர்புறத் தல்கல் செல்லாது...முன்னவன்
மூவலன்ஞளும் மற்றோர் தெய்வ முன்னலளே 306

மின்தொத் திடுகழல் நூபுரம் வெள்ளை செம்பட்டு மின்ன,
ஒன்றொத் திடவுடையா ளொடொன்றும் புலியூர
னென்றே நன்றொத் தெழிலைத் தொழவுற்றனம் 246

[தலைவன், தலைவி தோற்றம்.]

வருட்டின் திகைக்கும், வசிக்கின் துளங்கும், மன மகிழ்ந்து
தெருட்டின் தெளியலள், செப்பும் வகையில்லை...புரி
குழலாட் கெங்ஙனே சொல்லி யேகுவனே 270

[தலைவியின் நிலையைத் தலைவன் கூறுதல்.]

விரையீர்ங் குழற் பேதையரே 56

கோலித் திகழ் சிற கொன்றின் ஒடுக்கிப் பெடைக் குருகு,
பாலித்து இரும்பனி பார்ப்பொடு சேவல் பயிலிரவின்......
இத்திரு நுதலாட்கு என தாங்கொல் என் போதரவே 318

[இஃது இரவில்பெடைக்கு உருகும் தன் சிறகால் அதைப் பனிக் குளிரில் இருந்தும் பாதுகாக்கின்ற சேவலைக் கண்ட தலைவன் ''எனது போதரவு அவளுக்கு (தலைவிக்கு) என்னாங் கொல்லோ'' என்று அவளது வடிவை நினைந்து வானை நோக்கித் தலைவன் வருந்தியது.]

தில்லை மன்னன் கண்ணார் அருளால் விருப்பினம் மேவச்
சென்றார்க்குஞ் சென்றல்குங்கொல் வீழ் பனிவாய்
நெருப்பினம் மேய் நெடுமால் எழில் தோன்றச் சென்றங்கு
நின்ற, பொருப்பினம் ஏறித் தமியரைப் பார்க்கும்
புயலினமே 319

[இது விழா நின்ற பனியில் எல்லாரும் நெருப்புத்திரளை மேவி நிற்ப, புயலினம் நமக்கே அன்றித் தம்மை அடைந் தார்க்கு உதவி செய்யச் சென்றார்க்கு (தலைவர்க்கும்) சென்று பொருந்துமோ? என்று கூதிர் கண்டு தலைவி தலைவனைப் பற்றி கவலை உற்றது.]

கற்றின வீழ் பனி தாங்கத் துவண்டு துயர்க வென்று
பெற்றவளே எனைப் பெற்றாள் 320

[இது முன்பனிக்கு ஆற்றாது தலைவி தன்னைப் பெற்றவளை நொந்து உரைத்தது.]

சிற்றம்பலம் அனையாள் பரமன்(று) இரும்பனி பாரித்தவா
பரந்தெங்கும் வையஞ் சதமன்றி வான்தரு மேல் ஒக்கும்
மிக்கீ தமியருக்கே 321

[இப் பின்பனி தனிமையை உடையார்க்குச் சரத்தைத் தரு

மாயின் தலைவன் பொறுக்கும் அளவன்று எனக்கும் (தலைவிக்கும்) ஆற்றுதல் அரிது என்று தலைவி தன்னுள் நினைந்து இரங்கினள்.]

வாழும் படியொன்றுங் கண்டிலம் வாழியிம் மாம்பொழில்
தேன், சூழும் முகச் சுற்றும் பற்றினவால்......கூழின் மலி
மனம் போன்றிருளா நின்ற கோகிலமே 322

[இது குயில்கள் மாம்பொழிலைச் சுற்றும் வந்து பற்றின. இனி உயிர் வாழுமாறு ஒன்றுங் கண்டிலேன் எனத் தலைவி * இளவேனில் கண்டு துன்ப முற்றது]

வரகுணன் வெற்பின் வைத்த கயலோங்கு இருஞ்சிலை கொண்டு
மன் கோபமுங் காட்டி வரும் செயல் ஓங்கு எயில் எரி
செய்த பின் இன்றோர் திருமுகமே 327

[இது வேந்தற் குற்றுழிப் பிரிந்த தலைவன் (வினைமுற்றிய பின்னர்) "கயலையும் வில்லையுங் கொண்டு கோபமுங் காட்டி ஒரு திருமுகம் வந்துள்ளது இனிக் கடிது போதும்" எனத் தேர்ப்பாகன் கேட்ப உரைத்தது சிலேடை வகையான் ஒருமுகம் கயல் போன்ற கண்ணையும், வில்போன்ற புருவத்தையும் இந்திர கோபம் போல் வாயையும் காட்டுகின்றது எனத் தலைவியைக் குறிக்கும் உட்பொருள் தோன்றும்.]

சிற்றம் பலஞ்சென்று சேர்ந்தவர் நம் பிறப்பின் துனைந்து
பெருகுக தேர் மட நடைப்புள் இறப்பின் துயின்று
முற்றத்து கரைதேரும் எழில் நகர்க்கே 328

[விரைந்து முடுவதாக இத் தேர் என்று தலைவியின் தோள் முயங்குவல் என்னும் கருத்தால் தலைவன் தேர்ப்பாகனுக்கு (கூறியது) புறக்களின் இந்நிலைமை தனக்கு இல்லையே என்று தலைவி நினைப்பாள் என்று தலைவன் நினைத்துக் கூறியதாகும்.]

அம்பலத் தோன் மலர்த்தாள் வணங்கலர்போல் திருந்(து) ஏர்
அழிந்து பழங் கண்தரும் செல்வி சீர் நகர்க்கு என் வரும்
தேர் இதன் முன் வழங்கேல் முழங்கேல் வளமுகிலே 329

[இது பிரிதலால், அழகு அழிந்து துன்புறுகின்ற தலைவியின் நகர்க்கு இத் தேர் சென்று சேர்வதற்கு முன் முகிலே! நீ வழங்கேல் முழங்கேல் என்று தலைவன் முகிலொடு கூறினது]

உயிரொன்று உளமும் ஒன்று ஒன்றே சிறப்பு இவட்கு
என்னொடு என்ன 18

* இளவேனில்—சித்திரை - வைகாசி.

எழிற்கொம்பர் அன்னீர் 55
கொடிச்சியர் 92
சிறுவாள் உகிஉற்று உருமுன்னம் சின்னப் படுங்குவளைக், கெறி வாள் கழித்தனள் தோழி எழுதிற் காப்பதற்கே அறிவாள் ஒழிகுவது அஞ்சனம் அம்பலவர்ப் பணியார் குறிவாழ் நெறி செல்வர் அன்பர் என்றம்ம கொடியவளே 334
[பொருள் தரப் பிரியும் அருள்தருபவன் எனப் பாங்கி பகரப் பூங்கொடி புலம்பியது.]
தில்லை அன்னவர் இப்புனத்தார் விரதமுடையர், விருந்தொடு பேச்சின்மை மீட்ட தன்றேல் சரதம் உடையர் மணிவாய் திறக்கிற் சலக்கென்பவே 57
[தேமொழியவர் வாய்மொழி பெறாது தலைவன் கட்டுரைத்தது]
நைந்தும் ஒன்றும் இவட்கு மொழிதல் கில்லேன் மொழியாது முய்யேன் குன்றூர் துறைவர்க்கு உறுவேன் உரைப்பனிக் கூர் மறையே 288
புலியூர் மணந்த பொன் இம் மெய்ந்நாண் முதுதிரை வாய்யான் அழுந்தினும் என்னின் முன்னும் இந் நாளிது மதுவார் குழலார்க்கு என்கண் இன்னருளே 81
பைந்தொடியீர் 58
பொருப்பன் விருப்பில் தினைவித்திக் காத்துச் சிறந்து நின்றே முக்குச் சென்று சென்று வினை வித்திக் காத்து விளைவு உண்டதாகி விளைந்ததுவே 140
[புனத்தோடு தளர்வுற்று உரைத்தது]
மின்நிற நுண்இடைப் பேர்எழில் வெண்நகைப் பைந்தொடியீர் பொன் நிறவல் குலுக்காமோ மணிநிறப் பூந்தழையே 58
மைந்நிற வார்குழல் மாலையுந் தாதும் வளாய் மதஞ்சேர் இந்நிறமும் பெறின் யானும் குடைவன் இருஞ்சுனையே 69
[நாண நாட்டி நகை செய்தது.]
மைவார் கருங் கண்ணி செங்கரம் கூப்பு.........வெள்ளைச் சிறு பிறைக்கே 67
[பிறைதொழு சென்று நாண நாட்டியது.]
வள இளவல்லி அன்னீர் 53
விரை ஈர்ங் குழற் பேதையரே 56
பிரியார் என இகழ்ந்தேன் முன்னம் யான் பின்னை எற்பிரியின், தரியாளென இகழ்ந்தார் பின்னர் தாம்......அன்ன என்னை அறிவித்தவே 340
[இது சொல்லாது பிரிந்தார் தலைவர் என்று தலைவி வாடியது]

உலகின் எல்லாம் காணுந் திசைதொறும் கார் கயலுஞ் செங் கனியொடு பைம்பூணும் புணர் முலையுங்கொண்டு தோன்றும் ஓர் பூங்கொடியே 341

[இது பிரிந்தமை யுட்கொண்டு கலங்கின நெஞ்சொடு சென்ற தலைவனுக்குத் தலைவியின் உருவம் வெளிப்பட்டு நின்றது.]

இவளைப் பையுள் எய்தப் பனித் தடங்கண்ணுள் நீர் உக ஒளி வாடிட நீடு சென்றார் சென்ற நாள் எண் நீர்மையின் நிலனுங் குழியும் விரலிட்டறவே 345

[இது தலைவன் சென்ற நாளை எண்ணும் தன்மையால் பல கால் இடுதலின் நிலனும் குழிந்து, விரலும் தேய்ந்தது தலைவிக்கு என எண்ணித் தோழி வாடியது.]

தலைவி தலைவன் இவர்களைப் பரத்தையர் குறிப்பது

புனலூரனைப் பிரியும் புனல் ஊர் கண் அப்பூங்கொடி 372

பூங்கொடி 372

VIII. தலைவியும் தோழியும்

தலைவியும் தோழியும் விளையாடுதல் குளித்தல் முதலிய

புயல் வளர் ஊசல் முன் அடி 117

பின்னைப்போய் அம்பலத்தான் வரைத் தண்புனத்தே அயல் பொலியும் வளர்குன்றில் நின்று அருவி எற்றும் 117

தினைவளங் காத்துச், சிலம்பெதிர் கூய்ச் சிற்றின் முற்றிழைத்துச் சுனைவளம் பாய்ந்து, துணைமலர் கொய்து......புனைவளர் கொம்பர் அன்னார் பின்ன காண்டும் புனமயிலே 118

[ஊசலாடுதல், அருவி நீரில் குளித்தல்; தினைவளம் காத்தல், சிலம்பு எதிர் கூவுதல், சிற்றில் இழைத்தல், சுனை நீரில் பாய்தல், மலர்கொய்தல் ஆகிய இவை தலைவி தோழி இவர்களுடைய விளையாட்டாகும்.]

IX. பரத்தையர்

1. பரத்தையர் தலைவி ஏனைய பரத்தையரைக் குறிப்பது

அமரப்புல்லும் மினலூர் நகையவர் 372

2. பரத்தையர் வர்ணனை

அடி

வியே என அடியீர் 370

அழகு

இளமயில் ஏர் கடுத்து 352

இடை

அராப் பயில் நுண் இடையார் 362

பணியுறத் தோன்றும் நுடங்கு இடையார்கள் 359

ஒளி

வாள் இளையோர் மகளிர் 352

கண்

கண்மலர் அம்பு அடுத்து 352

மான்முதிர் நோக்கின் நல்லார் 369

வேல்தான் திகழ் கண் (இளையார்) 390

கரம்

ஓங்கு வளைக் கரம் 357

கொங்கை

செப்புற்ற கொங்கை 354

நகை (பல்)

கதிர்த்த நகை 396

மினலூர் நகை 372

நுதல் (நெற்றி)

சிலைமலி வாணுதல் 397

புருவம்

அணிகாமர் கரும் புருவச்சிலை 352

வளை

எடுத்தணி கைஏறு இனவளை ஆர்ப்ப 352

விரல்

பந்து ஆர் விரலி 391

பிற

அமரப் புல்லும் மினலூர் நகையவர் 372

சேயிழையார் நவம் செய்த புல்லங்கள் 358

தில்லைத் தேற்றூர் 382

தேற்றூர் 382

நகையவர் 372

மான்முதிர் நோக்கினல்லார் 369

மென்தோகை அன்னார் 385

வடியீர் (பழைய உரை) 370

3. பரத்தையரும் தலைவனும்

[தலைவனும் பரத்தையரும் I - 19 பார்க்க.]

4. பரத்தையரைக் குறிக்கும் சொற்கள்

அணிவாள் இளையோர்	352	சேயிழையார்	358
இளையோர்	352	தில்லை நகர் வாய் இளையர்	390
ஓங்குவளைக் கரத்தார்	357	தில்லையூர நின் சேயிழையார்	358
செப்புற்ற கொங்கையர்	354	நுடங் கிடையார்கள்	359

X. பிற

1. அலர் (பழிச்சொல், இழிவுச்சொல்)

அலர் 180, 260, 284, 291

அலராய் விளைகின்றது அம்பல் கைம்மிக்கு ஐய 180

அன்று ஏர் குழலார் மொழியாதன 284

குடிக்கு அலர் கூறினும் இவை என் நாம் மறைக்கும் பரிசுகளே 291

படிக்கல ராமிவை என்நாம் மறைக்கும் பரிசுகளே 291

மேகலை யாட்கு அலராம் பகல் உன்னருளே 260

2. கட்டுவித்தியும் வெறி ஆட்டும்

(1) செவிலியும், தலைவியும்

வேயின மென்தோள் மெலிந்தொளி வாடிவிழி பிறிதாய்ப், பாயின மேகலை பண்டையள் அல்லள்......சேயினது ஆட்சியிற் பட்டனளாம் இத்திருந் திழையே 282

[இஃது ஏதிலார் தூது கண்டு அழுங்கிய தலைவியைச் செவிலி பார்த்து இவள் முன் மாதிரி இல்லை, இவ்வாறு மெலிதற்குச் சேயினது ஆட்சியிற் பட்டனள் போலும் என்று தலைவியின் மெலிவைக் கண்டு செவிலி கூறினள்.]

(2) செவிலியும் கட்டுவித்தியும்

சுணங்குற்ற கொங்கைகள் சூதுற்றில, சொல் தெளிவுற்றில, குணம் குற்றம் கொள்ளும் பருவம் முருள்...அணங்குற்ற நோய் அறிவுற்று உரை யாடுமின் அன்னையரே 283

[இது தலைவியின் மெலிவு கண்டு செவிலி தலைவியின் நோயைத் தெரிந்து சொல்லுமின் எனக் கட்டுவித்திக்கு உரைத்தது.]

(3) தோழியும் கட்டுவித்தியும்

மாட்டி அன்றே எம் வயின் பெரும்நாண் இனி மாக்குடி மா(சு) ஊட்டியன்றே நிற்பது 284

[இஃது "எம்மிடத்தில் உண்டாகிய நாணினையுந்தள்ளி, எங் குடியினையுங் குற்றப் படுத்த அல்லவே? இக் கட்டு வித்தி நிற்கப் புகுகின்றது." என்று தோழி கலக்க முற்று நின்றாள்.]

(4) கட்டுவித்தி நெற்குறி விளக்கியது

சேய்கடவும் மயிலி தன்றே, கொடி வாரணங் காண்க, அவன் சூர் தடிந்த அயில் இதன்றே, இதன்றே நெல்லில் தோன்றும் அவன் வடிவே 285

[மயில், சேவல், வேல் இவை நெல்லின் வடிவில் தோன்றி உள்ளபடியால் முருகனங்கு ஒழியப் பிறிதொன்று மில்லை எனக் கட்டுவித்தி நெற்குறி காட்டிக் கூறினள்.]

(5) வெறி ஆட்டு

வேலன் புகுந்து வெறி ஆடுக, வெண் மறியறுக்க......வெண் காடனைய பாலன் புகுந்து இப் பரிசினன் நிற்பித்த பண்பினுக்கே 286

[கட்டுவித்தி முருகணங் கென்று கூறக் கேட்டு "இப்பிள்ளை இக்குடியில் பிறந்து நம்மை இவ்வாறு நிற்பித்த பண்பினுக்கு வேலன் புகுந்து வெறியாடுக" என்று தாயர் வேலனை அழைத்தார்.]

(6) வெறி ஆட்டுக்கு தலைவி அஞ்சி வருந்தியது

அயர்ந்தும் வெறிமறி ஆவி செகுத்தும் விளர்ப்பு அயலார், பெயர்ந்தும் ஒழியா விடின் என்னை பேசுவ...பிறிதின் ஒழியின் என் ஆதுந் துறைவனுக்கே 287

வெறி ஆடி விளர்ப்பு போகா விட்டால் அயலார் என்ன சொல்லுவார்கள் விளர்ப்பு ஒழிந்தால் தலைவனுக்கு நாம் என்ன சொல்லுவது. இருவாற்றாலும் உயிர் வாழ்தல் அரிது" என்று நினைந்து தலைவி வருந்தினள்.]

(7) தலைவி வெறி விலக்குவிக்க நினைத்தல்

ஒன்றும் "இவட்கு மொழிதல் கில்லேன், மொழியாதும் உய்யேன் குன்றூர் துறைவர்க்கு உறுவேன் உரைப்பன் இக்கூர் மறையே 288

[இங்ஙனம் நினைத்த தலைவி நாண் துறந்தும் வெறிவிலக்கு விப்பேன் என்று தோழியைக் கொண்டு வெறிவிலக்கு விக்க நினைத்தது.]

(8) i. அறத்தொடு நிற்றலைத் தலைவி தோழிக்கு உரைத்தல்

நிகழ்ந்தது கூறுவல்... தூயன் நினக்குக் கடுஞ்சூள் தருவன் சுடர்க் குழையே 289

[வெறிவிலக்கை நினைத்த தலைவி தோழியிடம் "நான் சொல்லுவதைக் கேட்பாயாக, நான் சூளுற்றுக் கூறுவேன்" என்று கூறினள்.]

ii. அறத்தொடு நிற்றல்

வண்டல் உற்றேம் எங்கண் வந்து ஒரு தோன்றல் வரி வளையீர், உண்டல் உற்றேம் என்று நின்றதோர் பொழுது... ஏறுங் கடல் வர எம் உயிர் கொண்டு தந்து...சேரிச் சென்றான் ஓர் கழலவனே 290

["நாங்கள் வண்டல் செய்து விளையாடிக் கொண்டிருந்த போது, யான் விருந்து என்று கூறி ஒரு தோன்றல் வந்து நின்ற பொழுது, கடல்அலை வந்து என்னைக் கொண்டுபோக அவன் அலையினின்று என்னை எடுத்து மீட்டான்." என்று தலைவி தோழியிடம் கூறி அறத் தோடு நின்றாள்.]

(9) தோழி ஐயந்தீரக் குறித்தல்

வேற்கண்ணி வந்தன சென்று நம்யாய் அறியும் படிக்கு, அலராம் இவை என் நாம் மறைக்கும் பரிசுகளே 291

[தலைவியின் குறிப்பை அறிந்த தோழி தலைவனுக்குப் பழி வராமல் மறைத்துக் கூறுமாறு என்னோ எனத் தான் தலைவியைப் பாதுகாத்தல் தோன்றக் கூறியது.]

(10) வெறிவிலக்கல்

விதியுடையார் உண்கவேரி விலக்கலம்......புனல்யாம் ஒழுகக் கதியுடையான் கதிர்த்தோள் நிற்க வேறு கருதி நின்னின் மதியுடையார் தெய்வமே இல்லை கொல் இனி வையகத்தே 292

[வெறிக் களத்தே சென்று வேலனை நோக்கிப் "புனலிடை வீழ்ந்து கெடப் புக, பாய்ந்தெடுத்து உய்த்தவன் நிற்கப் பிறிதோர் உபாயத்தைக் கருதும் நின்னைப்போல இவ் வுலகத்தில் இல்லை" என்று கூறித் தோழி வெறி விலக்கினள்.]

(11) செவிலிக்குத் தோழி அறத்தொடு நிற்றல்

கயிலைச் சினக்களி யானை கடிந்தார் ஒருவர்...புனங்கிளி யாங் கடியும் வரைச் சாரற் பொருப்பிடத்தே 293

[''நாங்கள் புனங்காத்த போது ஒரு யானை வந்து உன் மகளை ஏதம் செய்யப் புக்கது, அது கண்டு அருளுடையான் ஒருவன் ஓடிவந்து யானையைக் கடிந்து அவள் உயிரைப் பாதுகாத்துப் போயினன்'' என்று தோழி செவிலியிடம் கூறி இனி அடுப்பது செய்வாயக என்றனள்.]

(12) நற்றாய்க்குச் செவிலி அறத்தொடு நிற்றல்

இளையாள் இவளை என் சொல்லிப் பரவுதும் ஈரெயிறு முளையா அளவின் முதுக்குறைந்தாள்......கயிலைப் பயில் செல்வியையே 294

[''இளையவளாகிய இவளை என் சொல்லிப் புகழுவோம்! இளமைப் பருவத்தே அறிவு முதிர்ந்தாள்'' என்று தலைவியின் கற்புத் தோன்ற நற்றாயிடம் செவிலி அறத்தொடு நின்றாள்]

(13 தேர்வரவு கூறல்

வலம் புரியின், வெள்ளின மார்ப்ப வரும் பெருந்தேர் இன்று மெல்லியலே 295

[நற்றாய்க்குச் செவிலி அறத்தொடு நின்றபொழுது தலைவனுடைய தேர் ஒலி கேட்ட தோழி உவகையோடு சென்று தலைவியிடம் தேர்வரவு கூறினள்.]

(14) வெறியாட்டின்போது வாத்தியம்

முருகியம் 299

3. குறிஇடம் கூறல்

தேன் நுழை நாகம் மலர்ந்து திகழ் பளிங்கால் மதியோன் கான் உழை வாழ்வு பெற்றாங்கு எழில் காட்டும் ஓர் கார்ப் பொழிலே 116

[இது தோழி தலைவனுக்குப் (பகற்)குறி இடம் கூறினது.]

பொதியின் மலைப்பொலி சந்தணிந்து சுனைவளர் காவிகள் சூடிப் பைந்தோகை துயில்பயிலும் சினைவளர் வேங்கைகள் யாங்கணின் றூடும் செழும் பொழிலே 154

[இஃது இரவுக்குறி இன்ன இடத்தது என்று தோழி தலைவனுக்கு உரைத்தது.]

பொன்னார் மணிமகிழ்ப் பூவிழயாம் விழை பொங்கிருளே 210

[இது "நான் தலைவியைக் கொண்டு வருவேன் நீ குறியிடத்து வந்து நில்" என்று தோழி தலைவனுக்குக் குறி இடம் கூறினது. (உடன்போக்காக.)]

4. தழையும், தோழியும், தலைவனும், தலைவியும்

பைந்தொடியீர், பொன்நிற அல்குலுக்கு ஆமோ மணி நிறப் பூந்தழையே 58

[தலைவன் தனது கருத்தை அறிவித்தது.]

வில்லிலன் நாகத் தழைகையில் வேட்டை கொண்டாட்டம் மெய்யோர் சொல்லிலனு கற்றவாகட வானிச் சுனைப் புனமே 60

[பாங்கி ஐயம் உற்றது.]

வேழ முன்னைக் கலையாய்ப், பிறவாய்ப், பின்னும் மென் தழையாய், மாழை மென் நோக்கி இடையாய்க் கழிந்தது வந்துவந்தே 61

[பாங்கி அறிவு நாடியது.]

ஒண்ணுதல் மாந்தழை கொண்டு ஒருவன் என்னு முன்ன உள்ளம் தழைத்திடுமே 65

[தலைவியின் குறிப்பு பாங்கி பகர்ந்தது.]

எரிசேர் தளிரன்ன மேனியன், ஈர்ந்தழையன், புலியூர்ப் புரிசேர் சடையோன் புதல்வன் கொல், பூங்கணை வேள் கொலென்னத் தெரியேம், உரையாண் பிரியான் ஒருவனித் தேம்புவனமே 83

[தலைவன் தளர்வுறுகின்றமை தலைவிக்குத் தோழி உரைத்தது]

பூமென் தழையும் அப்போதுங் கொள்ளீர் தமியேன் புலம்ப 90

[கையுறையோடு தலைவன் எதிர்சென்றது.]

அவள் அல்குற் கண்டால் ஆரத்தழை கொடு வந்தார் என வரும் ஐயுறவே 91

[இது தலைவனைச் சேட்படுத்தத் (வியக்க) தோழி கூறியது.]

அம்பலவன் குன்றகத்து இல்லாத்தழை அண்ணல் தந்தாற்
கொடிச்சியருக்கு இன்றகத்து இல்லாப் பழிவந்து மூடும்
என்று எள்குதுமே 92
[தோழி நிலத்திண்மை கூறி, தம் குலத்தாருக்கு ஏலாது
என்றது]

நவ்வி சொல் அறிந்தால் தாழாது எதிர் வந்து கோடுஞ் சிலம்ப
தருந்தழையே 93
[தலைவியின் மனம் அறிந்து அல்லது தழை கொள்ளேம்
என்றது.]

குற்றாலத்துக் கோலப் பிண்டிப் பொழில்வாய் தடவரை
வாயல்ல தில்லை இப் பூந்தழையே 94
[இளவஞ்சியும் விரும்பும் தழை வாங்காது விலக்கப் பாங்கி
சொல்லியது.]

கைத்தழை ஏந்திக், கடமா வினைக் கையில் வில்லின்றியே
பித்தழையா நிற்பரால் என்ன பாவம் பெரியவரே 102
[இரக்கத்துள் மறுத்தல்.]

தோலாக் கரிவென்ற தற்கும், துவள்விற்கும், இல்லின்
தொன்மைக்கு ஏலாப் பரிசுளவே அன்றி ஏலேம்... ஐய நீ
தந்த கொய்தழையே 110
[தலைவனுடைய ஆற்றாமை கண்ட தோழி கையுறை ஏற்றது.]

யானை அன்னான் கரத்தில் தழை காண்டலும் பொய் தழைப்ப
முன் காண்பன் 111
[தழை வாங்காதிருப்பதற்கு ஒரு வார்த்தையும் அறியேன்
என்று தோழி தலைவிக்கு உரைத்தது.]

யானை கடிந்தார் கரத்த கண்ணார் தழையும் துவளத்
தகுவனவோ சுரும்பார் குழல் தூமொழியே 112
[தலைவியிடம் பாங்கி தழையைக் கொண்டு உரைத்தது.]

ஏறும் பழிதழை ஏற்பின் மற்று ஏலாவிடின் மடல்மா ஏறும்
அவன்... நம் ஈங்கோய் மலை இரும்புனங் காய்ந்து ஏறும்
மலை தொலைத்தாற்கு என்னை யாம் செய்வது ஏந்திழையே 113
[தோழி தழையை வாங்கக் காரணங் கூறியது.]

கயிலை அவ்வரை மேலன்றி இல்லை கண்டாய்......சிலம்பன்
எளிதில் தந்த ஈர்ந் தழையே 114
[தழையை ஏற்றுக்கொள் என்று தோழி தலைவிக்கு
உரைத்தது.]

செம்மல் நீ தந்தன சென்று யான் கொடுத்தேன் பேசிற்
பெருகும் சுருங்கும் மருங்குல் பெயர்ந்து அரைத்துப்
பூசிற்றிலளன்றிச் செய்யாதன வில்லை பூந்தழையே 115
[தலைவி தழையை விருப்புடன் ஏற்றதைத் தோழி தலைவ
னுக்கு உரைத்தது.]

இருந்து திவண்டனவால், எரிமுன் வலஞ்செய் திடப்பால்
அருந்துதி காணும் அளவுஞ் சிலம்பன் அருந்தழையே 300

[அருந்ததி காணும் அளவும் தழையை வாடாமல் வைத்து அத்தழையைப் பற்றுக் கோடாகத் தலைவி ஆற்றியிருந்தாள் என மண முரசொலி கேட்ட தோழி தலைவியைத் தன் உள்ளே மகிழ்ந்து கூறினாள்.]

மஞ்சார் புனத்தன்று மாந்தழை ஏந்தி வந்தார் அவர் என்
நெஞ்சார் விலக்கினும் நீங்கார் 378

[தலைவி தலைவனுடைய ஒழுக்கத்தைச் சிறப்பித்துக் கூறியது]

5. தழையும் மடலும்

1. தழை

அம்பலவன் குன்றத்து
இல்லாத்தழை 92
அருந்தழை 300
ஆரத்தழை 91
ஈர்ந்தழை 83, 114
கண்ணார் தழை 112
கணமயில் தொக்கு என்னுழையாத் * தழை கோலி நின்றாலும் 347
பொய்தனிழப்பமுன் காண்பன் 177
கைத்தழை ஏந்தி 102
கொய்தழை 110
தரும்தழை 93
தழை 347
நாகத்தழை (சுரபுன்னைத்தழை) 60
நிறப்பூந்தழை 58
பூந்தழை 58, 94, 115
பூமென்தழை 90
(பைந்தொடியீர்) பொன் நிற அல்குலுக்கு ஆமோ மணி நிறப் பூந்தழையே 58
மணிநிறப் பூந்தழை 58
மாந்தழை 65, 378
மாமலயத்து ஆரத்தழை 90
மென்தழை 61, 91

2. மடல்

பனைமடல் 74
பனைமாமடல் 88

மடல் எழுதலும் ஏறுதலும்

• ஈசன சாந்தும் எருக்கும் அணிந்து ஓர் கிழி பிடித்துப் பாய்
சினமா என ஏறுவர்...பனைமடலே 74

ஊர்வாய் ஒழிவாய் உயிர் பெண்ணைத் திண்மடல் 80

ஏறும்பழி தழை ஏற்பின் மற்று ஏலா விடின் மடல்மா ஏறும்
அவன் 113

: கடிச்சந்த யாழ் கற்ற மென்மொழிக்கன்னி அ(ன்)ன நடைக்குப்
படிச்சந்தமாக்கும் படமுளவோ நும் பரிசகத்தே 78

* தழை - மயிற்பீலி -

கழிகின்ற என்னையும் நின்றநின் கார்மயில் தன்னையும் யான், கிழி ஒன்ற நாடி எழுதிக் கைக்கொண்டு என் பிறவி கெட்டு இன்று அழிகின்றதாக்கிய தாள் அம்பலவன் கயிலையந்தேன், பொழிகின்ற சாரல் நும் சீறூர்த் தெரு விடைப் போதுவனே 76

காய்சினவேல் அன்ன மின்னியல் கண்ணின் வலை கலந்து வீசின போது உள்ள மீன் இழந்தார்...ஈசன சாந்தும் எருக்கும் அணிந்தோர் கிழி பிடித்துப் பாய் சினமா என ஏறுவர் சீறூர்ப்பனை மடலே 74

தில்லை...பெண்ணை உடனும் பெடையொடு ஒண் சேவலும் முட்டையும் கட்டழித்து, மடல் நாம் புனைதரின் யார் கண்ணதோ மன்ன இன்னருளே 77

தில்லையான் பொடிமெய்யிற் கையில் ஓவியந் தோன்றுங் கிழி நின் எழில் என்று உரையுளதால், தூவியந் தோகை அன்னாய் என்னபாவம் சொல்லாடல் செய்யான். பாவி அந்தோ பனைமாமடல் ஏறக்கொல் பாவித்ததே 88

யாழும் எழுதி, எழின் முத்து எழுதி, இருளின் மென்பூச், சூழும் எழுதி யொர் தொண்டையும் தீட்டி......புலியூர் இளமாம் போழும் எழுதிற்று ஓர் கொம்பர் உண்டேற் கொண்டு போதுகவே 79

6. தூது

நம் அகன்று சென்றவர் தூது கொல்லோ இருந்தேமையுஞ் செல்லல் செப்பா நின்றவர் தூது கொல்லோ வந்து தோன்றும் நிரைவளையே 280

[ஒரு தூது வந்து தோன்றுகின்றது. அஃது இன்னார் தூது என்று தெரியாது. என்று தலைவிக்குத் தோழி கூறினள்.]

வருவன செல்வன தூதுகள் ஏதில...இன்பக் கலவிகள் உள் மருகத் தருவன செய்து எனது ஆவி கொண்டேகி என் நெஞ்சில் தம்மை இருவின காதலர் ஏது செய்வான் இன்று இருக்கின்றதே 281

[இஃது "அயலார் தூது, காதலர் தூது, வரவில்லை. அவர் செய்யக் கருதியுள்ளார்" என்று கூறித் தலைவி கவலை உற்றது]

7. பாணரும் விறலியும்

விறலியும் பாணனும் (துயில் எழுமங்கலம் பாடுதல்)

விறலியும் பாணனும் வேந்தற்குத் தில்லை இறை அமைத்த திறலியல் யாழ் கொண்டு வந்து நின்றார்...தமியோமை அறிந்திலரே 375

பாணனோடு தலைவி வெகுளுதல்

ஆத்தின்னி 386

தில்லை மல்கு ஊரர் நின்வாய் மெய்கொண்ட அன்பினர் என்பது என் விள்ளா அருள் பெரியர் வைகொண்ட ஊசிகொல் சேரியின் விற்று எம் இல் வண்ண வண்ணப் பொய் கொண்டு நிற்கலுற்றோ புலை ஆத்தின்னி போந்ததுவே 386

புலை ஆத்தின்னி 386

வைகொண்ட ஊசி கொல் சேரியின் விற்று எம் இல் வண்ண வண்ணப் பொய் கொண்டு நிற்கலுற்றோ புலை ஆத்தின்னி போந்ததுவே 386

[ஊசியின் கூர்மை சொல்லுவாள் போன்று இவள் சொற் கூர்மை சொன்னபடி - 386 பழைய உரைக் குறிப்பு.]

பாணன் தலைவியிடம் வெகுளற்க என்றதும் பாணனுடைய பொறுமையும்

தில்லை அன்னாய் வில்லாண்டு இலங்கு புருவம் நெரியச், செவ்வாய் துடிப்பக், கல்லாண்டு எடேல் கருங்கண் சிவப்பாற்று, கறுப்பதன்று, பல்லாண்டு அடியேன் அடிவலங் கொள்வன் பணிமொழியே 387

பாணனும் விறலியும்

பாணர் 400

பாணன் 375

விறலி 375

விறலியும் பாணனும் வேந்தற்குத்...திறலியல் யாழ்கொண்டு வந்து நின்றார் 375

[துயில் எழு மங்கலம் பாடுதல்.]

௪. பிறபொருட் பகுதி

1. அக்கினி

எரி 168
எரிதரு நாட்டத்தன் 168
அக்நி (சிவன் கண்)

[“சிவனும் அக்கினியும்” என்னும் தலைப்புப் பார்க்க.]

2. அக்கினியும் சிவனும்

[சிவனும் அக்கினியும் பார்க்க.]

3. அசுரர் அரக்கர்

(1.) சிறப்பு

குண்டாசுரன்

கொக்கின் இறகு அணிந்து நின்றாடி 376

[இவனது கொடுமை ஆற்றாது தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட, அவர் இவனது இறகை வெட்டிக்கொன்றார். அந்த நினைவுக்குத் திருமால் முதலானவர் வேண்டக் கொக்கின் இறகை இறைவன் திருமுடியில் சூடி அருளினர்.]

“சென்னமா ஓர் சிறையை வாங்கி அணிந்த அருள்”
—கந்தபுராணம்

“பகாசுரன் உயிர் மாட்டி வார் இறகு கொண்டு வேணியில் செருகின” —சிதம்பர மான்மியம்

(“குரண்டப் பெயரானைச் செருவில் படுத்த வெள்ளிறகு செருகும் திருமுடி” —காஞ்சிப் புராணம்
[சிவ பராக்கிரமம்—குரண்டாசுரன் சங்கார பராக்கிரமம் பக்கம் 121.])

2. சலந்தரன்

கம்பஞ் சிவந்த சலந்தரன் ஆகங் கறுத்த தில்லை நம்பன் 209

3. சூரன்

சூர் தடிந்த அயில் 285

4. திரிபுராதிகள்—தனித் தலைப்புப் பார்க்க.

5. ராவணன்—தனித் தலைப்புப் பார்க்க.

(2.) பொது

அசுரர்

''தேவா சுரர் இறைஞ்சுங் கழலோன்'' 355

குறுகா அசுரர் நிணங்குற்ற வேற் சிவன் 283

4. அடியார்

அடியார் 377

அம்பலத்து அடியார் 377

அம்பலத்து அனலாடி அன்பர் 91

அம்பலம் சேர் ஆனந்த வெள்ளத்து அறைகழலோன் அருள் பெற்றவர் 307

அம்பலவர்க்கு அன்பர் 143

அம்பலவர்க்கு உற்றபத்தியர் 242

அம்பலவன் கழற்கே மெய்த் தமையா நின்ற அன்பினர் 102

அருள் பெற்றவர் 307

அன்பர் 155, 297, 393

அனலூர் சடையோன் அருள் பெற்றவர் 372

கூம்பலம் கைத்தலத்தன்பர் 11

சிற்றம்பலம் சென்று சேர்ந்தவர் 328

சீரடியார் 54

சோத்து உன்னடியம் என்றோர் 173

தாழச் செய்தார் முடி 43

தில்லைப் பொலிசிவன் சிற்றம்பலம் சிந்தை செய்பவர் 368

தில்லை மிக்கோன் கழற்கே காதலுற்றோர் 309

தில்லையோன் அடிப்போது சென்னித் திகழும் அவர் 181

தில்லை வழுத்துநர் 212

தில்லை வாழ்த்தினர் 300

தில்லை வாழ்த்துநர் 289

தென்புலியூர்ப் புகழ்வார் 217

தொண்டினம் 302
தொழுதெழுவார் 118
தொழுவார் 142
நீடு அம்பலவர்க்கு அன்பர் 143
பணிவோர் 52
புகுநர் 188
புலியூர் ஒருவனது அன்பர் 281
மிக்க விருப்புறுவோர் 315

5. அடியாரும் சிவனும்

[சிவனும் அடியாரும் பக்கம் 33 பார்க்க.]

6. அடியார்களும் தேவர்களும்

[தேவர்களும் அடியார்களும் என்னும் தலைப்புப் பார்க்க.]

7. அடுக்குச் சொற்கள், இரட்டைக் கிளவி

அணியணி 122
இதன்றே இதன்றே 285
என்ன என்னவும் 56
செல்லல் செல்லல் 274
சென்று சென்று 140, 205
திசை திசை 128, 234
துணி துணி(யேல்) 87
துறை துறை 221
படும் படும் 258
பிறழப் பிறழ 5
மதியே மதியே 171
மேல் மேல் 24, 195
வண்ண வண்ணப் (பொய்) 386
வந்து வந்தே 61
விம்மி விம்மி 198
இரட்டைக் கிளவி
விதிர் விதிர்த்து 102

8. அந்தணர், மறையோர், வேதியர்

[மக்கள் என்னும் தலைப்புப் பார்க்க.]

கடிமலர்க் கூந்தலைத் தான் பெறுமாறும் உண்டேல், உன்னுங்கள் தீதின்றி ஓதுங்கள் நான்மறை உத்தமரே 236
நான்மறை உத்தமர் 236
பொய்குன்ற வேதியர் ஓதிடம் உந்திடம் 223
பொழிலவை ஞாங்கரெங்கும் பொய் குன்ற வேதியர் ஓதிடம் உந்திடம் 223
வெதிரேய் கரத்து மென்தோலேய் சுவல் வெள்ளை நூலிற் கொண்மூ அதிரேய் மறையின் இவ்வாறு செல்வீர் 243

12. அரசாட்சி

அரச சின்னம்
குடை
விண்தோய் குடை 383
வியந்து அலைநீர் வையம் மெய்யே இறைஞ்ச விண் தோய் குடைக்கீழ் 383

13. அருள்

[சிவபிரான் அருள் என்னும் தலைப்பும் பக்கம் 9 பார்க்க.]

அருள் 75, 180
அருள் தரும் இன்சொற்கள் 336
அருளாசை 210
அலராய் விளைகின்றது அம்பல் கைம்மிக்கு 180
அறம் திருந்து உன்னருள் 213
அன்பு அருள் 91
ஆரருள் 267
இசைத்த அருள்தரும் இன் சொற்கள் 336
இரவின் நின் ஆரருள் 267
இன்றுன் திருவருள் இத்துணை ஆளுமன் எங்களுக்கே 392
இன்னருள் 77, 81
உன்னருள் 213, 260
கண்ணனின் இன்னோக்கு அருளி 394
சிற்றம்பலத்தார் தரும் பேரருள் 160
தில்லைத் தொல்லோன் அருள் 121
தில்லை முன்னோன் அருள் 236
தில்லையான் அருள் 180
நின்னருள் தோன்றுவதே 253
நின்னருள் மேல் நிற்கல் 159
நின்னருள் வகை 250
நின்னருளே 107
நின்னாரருள் 267
நீ செய்யும் மெய்யருளே 254
பகல் நீசெய்யும் மெய் யருளே 254
பேரருள் 160
மின் அனையான் அருள் 125
முன்னோன் அருள் 217, 236
மூவல் தழீஇய அருள் முதலோன் 191
மெய்யருளே 180, 254
விள்ளா அருள் 386

14. அன்பு

அரிய அரிவைக்கு நீ வைத்த அன்பினுக்கே 150
அன்பு 275
அன்பு அனைத்து 219
அன்பு அருளி 91
அன்பு செய்யில் 65
அன்புடை நெஞ்சத் திவள் 377
ஆய் தீந்த அன்பு 130
இயல் மன்னும் அன்பு 395
ஈசற்கு யான் வைத்த அன்பு 109
தின்வாய் மெய் கொண்ட அன்பினர் என்பதென் 386
வில்லிகைப் போதின் விரும்பா அரும் பாவியர்கள் அன்பு 364

15. ஆடை, உடை

*அம்செம் மலர்ப் பட்டு 361
கலிங்கம் 365
செம்பட்டு 224
செம்மலர்ப்பட்டு 361
வெள்ளைப்பட்டு 246

16. ஆதிசேடன்

படமாசுணம் (படமாசுணப் பள்ளி) 120

17. ஆயுத எழுத்து

அஃதே 45
எஃகம் 163
எஃகு 216
(பாண்டில் எடுத்த)
பஃறுமரை 249

18. ஆவா

ஆவா (இரங்கற் குறிப்பு) 72 (உரை)

19 இசை

ஏழிசைச் சூழல் புக்கோ இறைவா தடவரைத் தோட்கு என்
கொலாம் புகுந்து எய்தியதே 20
இசை - ஏழ்இசைச் சூழல் 20
குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், என்பன
தொல் - பொருள் - மெய்ப்பாட்டியல் : 8.

20. இந்திரன்

புரந்தரன் 73

21. இந்திரனும் சிவனும்

['சிவனும் இந்திரனும்' என்னும் தலைப்பைப் பக்கம் 37 பார்க்க.]

* அம் செம்மலர்ப்பட்டு - அழகிய செய்ய பூத்தொழிற் பட்டு.

22. இரவு

அரை இரவு 256
இரவரினும் 269
இராத்திசை போம் வாவல் 375
இரவு அணையும் மதி 360
இரவு ஏதும் பயனில்லையே 261
இருள் தூங்கி புலரா இரவும் 259
ஈசர் சிற்றம்பலந் தாம் பணியார்க்கு அடுத்தன தாம் வரில் பொல்லாது இரவில் நின் ஆரருளே 267
எல்லீ...வயலூரரற்கு எதிர் கொண்டதே 364
கங்குல் சிறு துயிலே 398
கழிகட்டிரவின் வரல் 255
குழிகட் களிறு வெரீஇ அரியாளி குழீஇ வழங்காக் கழிகட்டிரவின் வரல் 255
கோலித் திகழ் சிறகு ஒன்றின் ஒடுக்கிப் பெடைக் குருகு பாலித்து இரும்பனி பார்ப்பொடு சேவல் பயில் இரவு 318
பெடைக் குருகு பாலித்து இரும்பனி பார்ப்பொடு சேவல் பயில் இரவு 318
பொல்லாது இரவின் நின் ஆரருளே 267

23. இருவர்

இருவர் 107, 287
மிக்கார் இருவர் 107
வின் இறந்தார், நிலம், விண்டவர் என்று மிக்கார் இருவர் 107

24. இருள்

அற்படுகாடு (இருள் உண்டாகா நின்ற காடு) 348
இருட்டு 270
இருள் சூழ்ந்து 363
இருள் சேர் குழல் 163
இருள் தரு பூம்பொழில் 336
இருள் தூங்கி 259
இருள் தூங்கும் புனை இறும்பு 148
இருள் தூங்கும் முழுதும் 212
இருள் முகம் கிழும் நெடுஞ்சுடர் 356
இருளா நின்ற கோகிலமே 322
கன்னகள் கோள் இழித்தால் போல்தான் செறி இருள் 382
செறி இருள் 382
தூங்கிருள் 176
நள்ளிருள் 156, 171
நாட்டம் புதைத்தன்ன நள்ளிருள் 156
பல்விளக்கு இருளின் துன் அற உய்க்கும் 175
புள்ளுந்தன் பிள்ளைதழீஇ மற்றினஞ் சூழ்ந்து துயிலப் பெறுமிம் மயங்கிருளே 330
பொங்கிருள் 210
பொம்மென் இருள் 395
பொன்னுர் மணிமகிழ்ப் பூவிழயாம் விழை பொங்கிருள் 210
மகிழ்ப்பூ விழ யாம் விழை பொங்கிருள் 210
மழை குழுமி நாட்டம் புதைத்தன்ன நள்ளிருள் 156
மயங்கிருள் 320
மல்கும் இருள் 264
மொய் இருள் 157
யாம் விழை பொங்கிருள் 210
வினை போல் இருள் 259
வெய்யோன் தான் நுழையா இருள் 116

25. இலக்குமி

கமலத்தவள் 33
கமலத்தேவி 41
திரு - கடலில் தோன்றியது 173
பூமேவிய பொன் 344
மலர்ப்பாவை 275
மன்னும் திரு 131
மொய்வார் கமலத்து முற்றிழை 169

26. இன்பம்

இறுமாப்ப இன்பம் அளியா 52
இன்பக் கலவிகள் 281
இன்பத் தேன் 66
இன்ப துன்பங்கள் 71
இன்பம் 160
எல்லைதீர் இன்பம் 214
நயந்த இன்பம் 191

27. இனச் சொற்கள்

ஆவியும் யாக்கையும் 301
காயமும் ஆவியும் 207

28. உடல் (யாக்கை) உயிர்

(1) உடல் (யாக்கை)
காயமும் ஆவியும் 207
சீரியல் ஆவியும் யாக்கையும் 301
மலவன் குரம்பை 155
(2) உயிர் - ஆவி
(1) ஆவி
அரும்பெறல் ஆவியன்னாய் 210
ஆவி செல்லாத முன்னே 350
ஆவியை வெல்ல 349
என் ஆவி 41, 353
என் ஆவியும் ஆயவன் 5
என் ஆவியும் தேய்வுற்று அழிகின்றது 353
எனது ஆவி 281
காயமும் ஆவியும் 207
சீரியல் ஆவியும் யாக்கையும் 301
வெறிமறி ஆவி செகுத்து 287
(2) உயிர்
ஆருயிர் 26, 47, 73, 307
ஆருயிர் தேய்பவரை 354
ஆனந்த வெள்ளத்து அழுந்தும் ஓர் ஆருயிர் 307
ஆனந்த வெள்ளத்து அழுந்தும் ஓர் ஆருயிர் ஈருருக் கொண்(டு) ஆனந்த வெள்ளத்திடைத் திளைத்தார் ஒக்கும் 307
இன் உயிர் 169, 278, 336
இன் உயிரும்...தில்லையுறுநீற் பொறை அரிதாம்... 278
உயிர் ஒன்றுவது... 311
உயிர் ஒன்று... 18
உயிரிற் பழகி... 44
எம் உயிர் 290
என் (எனது) ஆருயிர் 26, 47 73
எனது இன் உயிர்... 278
எனதுயிர் 42, 210
ஓர் ஆருயிர் 307
ஓர் உயிர் 71
தனதுயிர் 51
மன் னுயிர் 36

29. உலகம்

அகலிடம் 42
அண்டர் அண்டம் 398
அம்பலத்து அண்டரண்டம் 398
அலைநீர் வையம் 383
ஆழி (ஆழி சூழ்ந்த உலகம்) 186
இச் சேணிலம் 213
இந் நானிலம் 191
இரும் பொழில் மூன்று 160
இவ்வியலிடம் 277
உலகம் 132, 312
உலகினெல்லாம் 341
எழு (ஏழ்) பொழில் 93
ஏழ் பொழில் 7, 31, 266
கடிபொழில் ஏழினும் 393
கற்பக நாடு 40
சிற்றம்பலம் வழுத்தும் வான் 380
சேணிலம் 213
தெண்கடல் வையம் 46
நஞ்சூணுந்திருத்து மொருவன் திருத்தும் உலகி னெல்லாம் 341
நாவல் (நாவலந் தீவு) 191
நாவல் தழீஇய இந்நானிலம் 191
நானிலம் 191
நெடு விசும்பு 46
படி (உலகம்) 291
பணிகள் அதுபதியோ (நாகர் உலகம்) 2
பாதலம் 162
பார் 105, 251
புவி 86
பொழில் ஏழ் 7, 31, 266, 393
பொழில் ஏழு 93
பொழில் மூன்று 160
போதிவர் கற்பக நாடு 40
மண் 162, 347
முந்நீர் நாவல் தழீஇய இந் நானிலம் 191
வாங்கிருந் தெண்கடல் வையம் 46
வான் (தெய்வலோகம்) - சிற்றம்பலம் வழுத்தும் வான் - வானிடம் 380
வானகம் 251
வானம் (வானுலகு) 201
விசும்பு 2, 28, 251
விண்(கள்) (விண்ணுலகங்கள்) 162, 177, 220
விண்ணினின்ற கற்பகச்சோலை 168
வியலிடம் 277
வியன்பாதலம் 162
விரிநீர் உடுத்த மண் 162
விரிநீர் உலகம் 312
வையகம் 292
வையம் 46, 321, 383

30. உலோகம்

[பொன், மணி முதலிய என்னும் தலைப்புப் பார்க்க]

இரும்பு 167
பொன் 167
(தனித் தலைப்புப் பார்க்க)
வெள்ளி 128, 167, 280

31. உவமை உருபு தொக்கது

கரும்புதோள் 23
கனிவாய் 50, 70
கிளி மொழி 29
குவளைக் கருங்கண் 51
தடவரைத் தோள் 26
துடி இடை 21
பிணை விழி 29
மயில் இயல் 29
வஞ்சி மருங்குல் 22
வேற்கண் 43, 50

32. உவமைச் சொற்கள்

(1) அமர்

தேன் அமர் சொல்லி 274
மான் அமர் நோக்கியர் 274

(2) அன்ன

அழல் பழுத்த கனிச் செந்திர வன்ன கற்கடம் 211
இடை மருது ஏகம்பம், வாஞ்சியம் அன்ன பொன்னை 268
உருப்பணை அன்ன கைக்குன்று 137
எரிசேர் தளிர் அன்ன மேனியன் 83
ஓவியம் கண்டன்ன ஒண்ணுதலாள் 384
கணை அன்ன கண் 59
காய்சின வேலன்ன மின் இயல் கண் 74
கிள்ளை அன்ன யாழேர் மொழியாள் 269
குன்று அன்ன மா பதைப்ப 100
கூடல் அன்ன அக்கின் நகை இவள் 376
கெண்டை அன்ன நீள்வது செய்த கண் 247
சிற்றம்பலம் அன்ன சின்மொழி 343
சிற்றம்பலம் அன்ன பொன் 147
திருப்பூவணம் அன்ன பொன் 338
தில்லை அன்ன...நவ்வி 93
தில்லை அன்ன நின் ஊர் விரையென்ன 152
தில்லை அன்ன வார் அணவும் முலை 296
தில்லை அன்ன விற்பகைத் தோங்கும் புருவத்து இவள் 168
தில்லைப் பேரியல் ஊரர் அன்ன ப்ரியாமையும் இதுவே 311
தில்லையான் அன்று உரித்த(து) அன்ன கவளத்த யானை 112
தில்லை வளர் நகர் அன்ன அன நடையாள் 342
தென்கூடல் அன்ன அக்கின் நகை இவள் 349
நாட்டம் புதைத்தன்ன நன்னிருள் 156
புலியூர் அன்ன ஒண்ணுதல் 126, 193
புலியூர் அன்ன காரிகை 399
புலியூர் அன்ன பூங்கொடி 97
பூவணம் அன்ன பொன் 305, 338
பொற்பந்தி அன்ன சடையவன் 305
பொன்பணைத் தன்ன இறை 219
வஞ்சி அன்ன வாமேகலை 344
வாஞ்சியம் அன்ன பொன்னை 268
விசும்பினுக்கேணி நெறி அன்ன சின்னெறி 149
வீயின் அன்ன சிற்றம்பலம் அனையாள் 374
வெள்ளி மலை அன்ன மால் விடை 128
வேயாது செப்பின் அடைத்துத் தமிவைகும் வீயினன்ன சிற்றம்பலம் அனையாள் 374
வேல் அன்ன கண்ணி 250

அன்னன்

எனதுயிரே அன்னள் 210

(3) அன

கரும்பு அ(ன்)ன மென்மொழி 248

(4) அனைய, அனையாள்(ய்)

சிற்றம்பலம் அனைய கரும்பென மென்மொழி 248
சிற்றம்பலம் அனைய திருநுதல் 333
சிற்றம்பலம் அனையாளை 108, 374
திருச்சிற்றம்பலம் அனைய பூ மேவிய பொன்னை 34

திருச்சிற்றம்பலம் அனையாய் 332
தில்லைச்சிற்றம்பலம் அனையான் 321
நரகம் அனைய புனை அழற்கான் 337
புலியூர் அனைய என்பாவை 241
வெண்காடு அனைய பாலன் 286

(5) ஆங்கு

கொற்பா இலங்கிலைவேல் குளித்(து) ஆங்கு குறுகியதே 310
வாழ்வு பெற்(று) ஆங்கு எழில் காட்டும் 116

(6) ஆர்

படை ஆர் கருங்கண்ணி 136
பொன் ஆர் சடையோன் 89
யாழ் ஆர் மொழி மங்கை 93

(7) இல், இன்

அம்பலவற் றொழாரில் குன்றம் கொடியோன் 231
திருவார்த்தையில் பெரு நீளம் பெருங்கண்களே 109
தில்லை உறாரில் பொறை அரிதாம் 278
தில்லைத் தொல்லோன் அருள்கள் இல்லாரிற் சென்றார் 192
பாசத்தில் காரென்று 109
பிரான் அருள் பெற்றவரில் துயர்தீர 299
பிரியாது உயிரில் பழகி 44
மறையோன் அடி வாழ்த்தலரில் பிணியும் 5

(8) இன்

அப்புற்ற சென்னியன் தில்லை உறாரின் 354
அம்பலம் உன்னலரின் 313
அம்பலம் உன்னலரின் துயர்ந்தும் 287
அம்பலம் பணியாரின் சென்றாள் அருஞ்சுரமே 230
அம்பலம் பாடலரின் தேம் பலஞ் சிற்றிடை 11
அம்பலவர்க்கு அடலை உற்றாரின் எறிப் பொழிந்து 218
அன்பரின் இன்பக் கலவிகள் 281
ஈசற்கு யான் வைத்த அன்பின் அகன்று 109
சடையோன் அருள் பெற்றவரின் 372
சடையோன் அருளின் மயங்கி 366
சிற்றம்பலம் சிந்தை செய்பவரின் மல்லைப் பொலி 368
சிற்றம்பலம் சென்று சேர்ந்தவர் தம் பிறப்பின் துனைந்து பெருகுக தேர் 328
சிற்றம்பலம் வழுத்தாப் புரமங்கையரின் நையாது 371
சிற்றம்பலவற் றொழாது தொல்சீர் கற்றும் அறியலரிற் சிலம்பா இடை நைவது 134
தில்லைத் தொல்லோன் அருள்கள் இல்லாரின் சென்றார் 192
தில்லை வாழ்த்தார் மனத்தின் இருள் தூங்கும் முழுதும் 212

(9) உற்ற

செப்புற்ற கொங்கையர் 354

(9 A) எடுத்த

* பாண்டில் எடுத்த பல் தாமரை 249

(10) என்ன

அம்பலத்தோன் அடித்தேரலர் என்ன அஞ்சுவன் 216

(11) என

அரமங்கையர் என வந்து 371
கன்று அகன்ற புனிற்று ஈற்று ஆ என நீர் வருவது 382

* பாண்டில் - கிண்ணம்.

சடையோன் கரமான் என ஒரு மான் 243
சேயே என 370
திருநீறு என வெளுத்து 109
தீயே என 370
நெருப்புறு வெண்ணெயும் நீருறும் உப்பும் என 315
நேர்கழி கோத்தென 6
முழவம் கார்என ஆர்த்தன 324
வீயே என அடியீர் 370
வேரியுஞ் சந்தும் வியல் தந்தெனக் கற்பின் நிற்பரன் 301

(11 A) ஏய்

கோங்கிற் பொலி அரும்பு ஏய் கொங்கை 13

(12) ஒக்கும்

ஆனந்த வெள்ளத் திடைத் திளைத்தா லொக்கும் அம்பலம் 307
இரும்பனி பாரித்தவா பரந்தெங்கும் வையஞ் சரமன்றி வான் தருமேல் ஒக்கும் மிக்க தமியருக்கே 321

(12 A) ஒத்த

பாலொத்த நீறு 238
வேலொத்த வெம்பரல் 238

(12 B) ஒத்த நேர்

நூல் ஒத்த நேரிடை 45

(13) ஒத்து

அழல் சேர் மெழுகொத்து அழிகின்றதே 44

(14) ஒப்பான்

எனைப் பிரிந்தால் உவதைக்கு அலமரும் வல்லி ஒப்பான் 239

(15) ஒப்புற்ற

தில்லை யுறுரினவர் உறுநோய் ஒப்புற்றெழில் நலமூரன் 354

(16) ஒன்று

சிலை ஒன்று வாணுதல் பங்கன் 101
மலை ஒன்று மா 101

(17) செய்த

பொன் செய்த மேனியன் 278

(18) தங்கு

மின் தங்கு இடை 221

(19) திகழ்

வேல் தான் திகழ்கண் இளையார் 390

(20) நிகர்

கோளரிக்கும் நிகர் அன்னார் ஒருவர் 225
பாண்நிகர் வண்டினம் பாட 183

(21) நிகர் அன்னார்

கோளரிக்கும் நிகர் அன்னார் ஒருவர் 225

(22) நேர்

மின் நேர் இடை 201

(23) படு

வில் படு வாள் நுதலாள் 348

(24) பயில்

அராப் பயில் நுண்ணிடையார் 362

(25) பாரித்து

காந்தளும் பாந்தளைப் பாரித்து அலர்ந்தனவே 324

(26) புரை

மின்னும் பனியும் புரை (மருங்குல்) 5
வரை புரை யானை 299

(27) புரையும்

அரவம் புரையும் அல்குல் 199
புலியூர் புரையும்...மென்மொழிக் கன்னி 78
புலியூர் புரையும் மாணத் திருத்திய வான்பதி 215
பை தயங்கும் அரவம் புரையும் அல்குற் பைந்தொடி 199

(28) பொலி

வில்லைப் பொலி நுதல் 368
வேல் பொலி கண்ணி 368

(29) போல்

அம்பலத்தோன் ...அருளிலர் போல் அன்ன என்னை அழிவித்தவே 340
அம்பலத்தோன்...கழற்கு அன்பிலராயினர் வினை போல் இருள் 259
அம்பலத்தோன் மலர்த்தாள் வணங்கலர் போல் 329
அம்பலம் தம்முடி தாழ்த்து உண்ணுதவர் வினைபோல் பரந்தோங்கும் 210
அம்பலம் போல் படிச்சந்தமும் இதுவே 32
அம்பலமே போல் இத்திரு நுதலாள் 318
அயில் போல் செறி பரல் 228
ஒருவன் இருங்கழல் உன்னினர் போல் ஏரள வில்லா அளவினர் ஆகுவர் 308
கண்கள் கோள் இழித்தால் போல் தான் செறியிருட் பொக்கம் எண்ணீர் 382
கூத்தயர்வோன் கழல் ஏத்தலர் போல் 157
கையனல் போல் தோன்றிக்கடி மலரும் 325
சடையோனை வணங்கலர் போல் துன்னி வளைத்த நந்தோன்றற்கு 317
சிற்றம்பலத்தார் தரும் பேரருள் போல் துன்னும் ஓர் இன்பம் 160
சிற்றம்பலம் நெஞ்சு உறுதவர் போல் அணங்குற்ற நோய் 283
சிற்றம்பலம் நெஞ்சுறுதவர் போல் உற 260
சிற்றம்பலம் நெஞ்சுறுதவர் போல் வெளிறுற்ற வான்பழியாம் 254
சிற்றம்பலவரைச் சேரலர் போல் 264
சீரளவு இல்லாத் திகழ்தரு கல்விச்செம் பொன்வரையின் ஆரள வில்லா அளவுசென் றுார்அம் பலத்துள்நின்ற ஓரள வில்லா ஒருவன் இருங்கழல் உன்னினர்போல் ஏரள வில்லா அளவினர் ஆகுவர் ஏந்திழையே 308
* தண்கடம் பைத்தடம் போல் கடுங்கானகம் தண்ணென 220

* கடம்பை - கடம்பூர்.

தாரகை போல் தேன் 116
திருச்சிற்றம்பலவரை உன்னலர் போல் அழுங்குலே வேலன்ன கண்ணி 250
தில்லை அம்பலத்தான் கழல்தலை வைத்துக் கைப்போதுகள் கூப்பக் கல்லாதவர் போல் 206
தில்லை அம்பலம் போல் அந்நிற மேனி 69
தில்லை அம்பலம் போல் கோலத்தினள் 27
தில்லை அம்பலம் போல் வளவிய வான் கொங்கை 10
தில்லைக் கூத்தன் ஏத்தலர் போல் நாண் அழிகின்றது 44
தில்லை சேரலர் போல் ஆவா கனவும் இழந்தேன் 355
தில்லைத் தொல்லோனைக் கல்லாதவர் போல் வாட்டி 284
தில்லை தொழார் குழுப்போல் சிந்தா குலமுற்று 276
தில்லை நோக்கலர் போல் என்னே வந்தவாறு 275
தில்லை பாடலர் போல் எல்லிலன் 60
தில்லை மன்னனது இன் அருள் போல் 347
தில்லையான் அருளே போல் பொய்கையிற் பாய்ந்தது புதுப் புனலே 369
தில்லையின் மன்னை வணங்கலர் போல் செல்லல் செல்லல் 274
தில்லையெங் கூத்தனை ஏத்தலர் போல்...கடம் செல்வர் 335
தில்லை வழுத்துநர் போல் மொய்வந்த வாவி தெளியும் தில்லை வாழ்த்தார் மனத்தின் இருள் தூங்கும் 212
தில்லை வாழ்த்துநர் போல் தூயன் 289
நின் போல் நடை அன்னம் 222
புலியூர் கருதாதவர் போல் வெரீஇ 255
புலியூர் மின்போல் சூலத்தவாய் 222
புலியூர் மன்போல் பிறையணி மாளிகை சூலத்தவாய் 222
பொட்டணியான் நுதல் போயிறும் பொய் போல் இடை 303
பொருப்பரசி பயலன்தனை பணியாதவர் போல் மிகுபாவம் செய்தேற்கு 240
பொன் போல் புரிசை வடவரை காட்டப் பொலி புலியூர் 222
மயில் போல் எதிரே வருமே சுரமே 243
மின் போல் கொடி நெடுவானக் கடலுள் திரை விரிப்ப 222
வண்புலியூர்...குழை எழிலோனைக் காதலர் போல் ஏது கொலாம் விளைகின்றது இன்று ஒன்னார் இடுமதிலே 316
வார் சடையோன் தில்லை போல் தன் காதலனே 303
வினைபோல் இருள் 259

(30) போல

அம்பலவர்க்கு உற்ற பத்தியர் போலப் பணைத்து இறுமாந்த பயோதர(ம்) 222

அன்பினர் போல விதிர் விதிர்த்து 102
இன்னுயிர் போலக் கலந்து இசைத்த அருள் தரும் இன் சொற்கள் 336
விற்பா விலங்கல் எங்கோனை விரும்பலர் போல 310

(31) போலும்
தில்லை மாநகர் போலும் வரி வளையே 257
மாமதி வேண்டி அழும் மழப் போலும் 147
மாமரம் போலும் 375

(32) போன்ற
வள்ளி மருங்குல் வருத்துவ போன்ற வனமுலையே 128

(33) போன்று
அம்பலத்து நின்றோன் அருள் போன்று உலவியலாத் தனம் 365
உள்ளுதொறும் பள்ளம் புகும் புனல் போன்று அகத்தே வரும் பான்மையளே 379
என் கண்மணி போன்று ஒருநாள் பிரியாது உயிரிற் பழகி உடன் வளர்ந்த அருநாண் 44
ஒளியமர்ந்தாங்கு ஒன்று போன்று ஒன்று தோன்றும் ஒளிமுகத்தே 64
குழல் போன்று அளிதர 324
கூழின் மலிமனம் போன்று இருளாநின்ற கோகிலமே 322
கொடி போன்று ஒளிர்கின்றதே 1
கொண்டல் கண்டன் குழையெழில் நாண் போன்று இக்கடி மலர்க் காந்தளும் போந்த 325
சிற்றம்பலம் ஆதரியாக் கூழின் மலிமனம் போன்று இருளா நின்ற கோகிலமே 322
தில்லையின் ஒளி போன்று 109
நான் மதி போன்று 108
புலியூர் குறுகார் மனம் போன்று இருட்டு 270
பொலிமலர் மேல்...தண் நறவு உண் அளி போன்று ஒளிர் நாடகமே 219
பொன்னும் மணியும் பவளமும் போன்று பொலிந்திலங்கி 189
விசும்புற்ற திங்கட்கு அழும் மழப் போன்று 198

(34) மலி
சிலை மலி வாணுதல் 397
மலை மலி மார்பு 397

(35) மன்னு
குயில் மன்னு சொல்லி 351
மயில் மன்னு சாயல் இம்மான் 351

(36) மானும்

மீன் எறிவோர் போர்த்தரங்
கந்துறை மானும் துறைவர் 187

வானகம் மானும் சிலம்ப 130

(37) வந்த

கயல் வந்த கண்ணியர் 381

(38) வளர்

கயல் வளர் வாட்கண்ணி 117

33. உவமை கொண்ட பாடற் பகுதிகள்

அம்பலவன் அருள் இலர்போல் பெண்ணை மடல்மிசையான் வரப் பண்ணிற்று ஓர் பெண் கொடியே 75

காகத்து இரு கண்ணிற்கு ஒன்றே மணிகலந் தாங்கு, இருவர், ஆகத்து ஓர் உயிர் கண்டனம் 71

கோலத்தனிக் கொம்பர் உம்பர்புக்கு அஃதே குறைப்பவர் தஞ் சீலத்தன கொங்கை தேற்றகிலேம்... நூலொத்த நேரிடை நொய்ம்மை எண்ணாது நுண் தேன் நசையாற், சாலத் தகாது கண்டீர் வண்டுகாள் கொண்டை சார்வதுவே 45

சிற்றம்பலத்தான் அருள் இலர் போல் துவளத் தலை வந்த இன்னல் 51

சிற்றம்பலம் எனலாஞ்......துடி இடையீர் 73

வளைபயில் கீழ்கடல் நின்றிட மேல்கடல் வான் நுகத்தின், துளை வழி நேர்கழி கோத்தெனத் தில்லைத் தொல்லோன் கயிலைக் கிளைவயின் நீக்கியிக் கெண்டையங் கண்ணியைக் கொண்டு தந்த விளைவையல் லால்வியவேன் நயவேன் தெய்வ மிக்கனவே 6

34. உவமை தெய்விகம் *

அம்பலத்தான் உழை காண்டறும் நினைப்பாகு [மென்நோக்கி மன்நோக்கம் 111

ஈசற்கு யான் வைத்த அன்பின் அகன்று, அவன் வாங்கிய என் பாசத்தின் கார் என்று அவன் தில்லையின் ஒளிபோன்று அவன் தோள்,பூசத் திருநீறு என வெளுத்து ஆங்கு அவன் பூங்கழல் யாம், பேசத்திரு வார்த்தையில் பெருநீளம் பெருங்கண்களே 109

சிற்றம்பலத்தான் மிடற்றின் மூற்படு நீள்முகில் 348

தில்லை அம்பலம் பாடலரின் தேம்பல் அம் சிற்றிடை 11

* ஆசிரியர் கூறும் உவமைகள் பலவும் தெய்வீக உவமைகள் ஆகும். இவற்றுள் சில இங்குக் காட்டப்பட்டுள.

தில்லை அம்பலம் போல் வளவிய வான் கொங்கை 10
நெடுமால் எழில் தோன்றச் சென்று...பார்க்கும் புயலினம் 319
புலியூர் அரன் மிடற்றின் மாண்பதென்றே யெ(ண)...எழில்
வாய்த்த பனி முகிலே (வானின் மலரும்) 328
விடை உடையோன் கண்டம் போல் கொண்டல் 326

35. உவமை * நிறைந்த பாடல்

குவவின கொங்கை குரும்பை, குழல் கொன்றை கொவ்வை செவ்வாய்
கவவின வாள்நகை வெண்முத்தங் கண்மலர் செங்கழுநீர்
தவவினை தீர்ப்பவன் தாழ்பொழிற் சிற்றம்பல மனையாட்கு
உவவின நாண்மதி போன்றொளிர் கின்றதொளி முகமே 102

36. உவமைப் பொருளும் உவமையும்

	பொருள்	உவமை	இடக்குறிப்பு
1.	கடல்	போர்க்களம்	187
	அலை (கார்த்தரங்கம்)	குதிரைத்திரள்	187
	சுறுமீன்	யானை	187
	தோணி	தேர்	187
	மீன் எறிவோர்	காலாள்	187
2.	காடு		
	கற்கடம் (காடு)	அழல் பழுத்த கனிச் செந்திரள்	211
3.	காந்தள்	பாந்தள்	324
4.	சிவபிரான்		
	சடை	செவ்வான்	67
	மிடறு (தில்லை நின்றோன்)	குவளை	162
	அம்பரம் சிந்தியார் இனம்	முள்வன் பரல் முரம்பு	237
	தில்லை வாழ்த்தார் மனம்	இருள்	212
	தில்லை வாழ்த்துநர் மனம்	தெளிந்த வாவி	212
	புலியூரை நினையாதவர்	பிறர் இடுக்கண் கண்டு வினவாதிருக்கை	189
5.	தலைவன் மார்பு	மலை	397
6.	தலைவி (ஒண்ணுதலாள்)	ஓவியம்	384
	கண்	கெண்டை	247
	,,	வேல்	250, 291, 368
	,,	கயல்	312
	,,	காவி (மலர்)	384

பொருள்	உவமை	இடக்குறிப்பு
குழல்	காந்தள்	324
,,	பாந்தள்	324
சாயல்	மயில்	351
நுதல்	வில்	348, 368
மொழி	குயில்	351
7. தோள்	(சிவன்) கை அனல்	325
8. பரல்	அயில்	228
9. பார்வதி நெற்றி	சிலை (வில்)	101
மொழி	யாழ்	93
,,	குழல்	94
வாய்	தொண்டையங்கனி (கோவைப்பழம்)	322
10. மாதர் (1) அடி (பரத்தையர்)	வீ (பூ)	370
(2) இடை	அரவு	198
	மின்	5, 201
	அரா	362
	பணி	5
	கொடி	9, 51
	துடி	21, 73
	வஞ்சி	22
(3) கண்	அம்பு	352
	சிலைக்கீழ் வைத்த கணை	59
	கயல்	117, 327, 381
	கார்க்கயல்	341
	குவளை	51, 66, 121, 162
	கெண்டை	6
	மைவார் குவளை	170
	காவி	384
	தாமரை	184
	மான்	21
	மின்	74
	வண்டினம்	66
	வாள்	117, 162
	,, சினவாள்	162
	வேல்	74, 390
	,, காய்சின வேல்	74
கண்ணீர்	நீள்முத்துமாலை	170
கண்மலர்	செங்கழுநீர்	108

(4) கரம்	காந்தள்	121
(5) குழல்	கொன்றைப்(பழம்)	108
(6) கொங்கை	குரும்பை	108
	செப்பு	254
	கோங்கிற் பொலி அரும்பு	13
(7) நுதல்	சிலை	397
(8) பல் (வாணகை)	வெண்முத்தம்	108
(9) புருவம்	இருஞ்சிலை	327
	சிலை	59, 352
(10) மருங்குல்	இடை பார்க்க	
(11) மார்பு (தலைவன்)	மலை	397
(12) முகம் (ஒளிமுகம்)	நாண்மதி	108
,,	செந்தாமரை	66
(13) மொழி	கரும்பு	248
,,	குழல்	198
,,	நற்றேன்	232
(14) வளை (வெள் வளை)	திங்கள்	183
(15) வாய்	கொவ்வை	9, 108
,,	கொவ்வைக்கனி (செவ்வாய்)	200
,,	செங்கனி	341
(16) முழவம்	கார்	324

37. உள்ளுறையும், உள்ளுறை உவமமும் உள்ள பாடல்கள்

1. உள்ளுறை......

(1) "ஏனற் பசுங்கதிர் என்றாழ்க் கழிய எழிலை யுன்னிக், குறவர்கள் கம்பலை செய்யும் சிலம்பா"— 159

கானக் குறவர்கள் தமக்கு உணவாகிய தினைக்கதிர் கோடையா லழியத், தெய்வத்தைப் பராவி மழை பெய்விக்க முயன்றாற் போல, நினக்குத் துப்பாகிய இவள் நலம் அலர் முதலா யனவற்றால் தொலையும்வழி அது தொலையாமல் முயன்று பாதுகாப்பாயென உள்ளுறை யாமாறு காண்க.

(2) வெற்பகச் சோலையின் வேய்வளர் தீச்சென்று விண்ணினின்ற கற்பகச் சோலை கதுவும் 168

வேயிற் பிறந்த தீ ஆண்டு அடங்காது சென்று தேவருலகத்தி னின்ற கற்பகச் சோலையைக் கதுவினாற்போல நின் வரவி னால் அயலாரிடத்துப் பிறந்த அலர் பெருகி நின்னூரு மறியப் பரந்து நின் பெருமையைச் சிதைக்குமென, உள் ளுறை வகையான் அலரறிவுறுத்தவாறு கண்டு கொள்க.

(3) வளருங்கறி அறியா மந்தி தின்று மம்மர்க்கு இடமாய்த் தளரும் தடவரைத் தண் சிலம்பா 193

வளரும் இளங்கறி கண்ணிற்கு இனிதாயிருத்தலின் இது நமக்குத் துய்க்கப்படாது என்று உணராத இளமந்தி அதனைத் தின்று வருந்துமாறு போலக் கண்ணும் மனமும் மகிழும் உருவினையாகிய நின்னை நின் பெருமை உணராது எதிர்ப்பட்டு வருந்தா நின்றாளென உள்ளுறை காண்க.

(அம்மிளகுக் கொடியை (மந்தி) தின்று வருந்தினாற்போல, இவளும் தன் பேதைமையினாலே உன்னுடனே புணர்ந்து வருத்தமாகி விட்டனள் என்று படும்.)

(4) எழுங்குலை வாழையின் இன்கனி தின்று இளமந்தி வாழை நிழலில் துயில் சிலம்பா 250

வண் தாரகை போல் தேன் நுழை நாகம் மலர் 116

6. மதுகரம்
மதுகரம் ஆர்ப்ப 295
7. வண்டு
அம் சிறை வண்டு 82
கடிவார் களி வண்டு 139
கள்ளினம் ஆர்த்துண்ணும் வண் கொன்றை 295
களி வண்டு 139
களியா வண்டறை பொழில் 297
களி வண்டு நின்று அலர் தூற்ற 139
சிறை வண்டு 82
தாதேய் மலர்க்குஞ்சியஞ் சிறை வண்டு தண் தேன் பருகித், தேதே யெனுந் தில்லை 82
தேன் வண்டு உறை தரு கொன்றை 380
நாலொாத்த நேரிடை நொய்ம்மை யெண்ணுது நுண் தேன் நசையாற் சாலத் தகாது கண்டூர் வண்டுகாள் கொண்டை சார்வதுவே 45
பாண்நிகர் வண்டினம் பாடப் பைம் பொன் தரு வெண் கிழி தஞ்சேண் நிகர் காவின் வழங்கும் புன்னை 183
மல்லிகைப் போதின் வெண் சங்கம் வண்டு ஊத 364
மலயத்து நின்றும் வருதேன் கடிவார் களிவண்டு 139
மலர் வண்டு உறுதல் அஞ்சி 303
மையேர் குவளைக்கண் வண் டினம் வாழுஞ்செந் தாமரை வாய், குடைந்தின்பத்தேன் உண்டெழில் தருமே 66
வண்டினம் மேவும் குழலாள் 302
வண்டினம் வாழும் செந் தாமரை 66
வண்டு அனையதொர் நாவற் கனி 84
வண்டு ஆல் இயலும் வளர் பூந் துறைவ 105
வண்டு ஒல் உறுத்த 241
வண்டுகாள் 45
வண்டு நீல மணி 184
வண்டு வாழுங் கருங்குழல் 162
வருங்கள் நனைய வண்டாடும் வளர் இள வல்லி 53
*வெளவால் (வாவல்)
இராத்திரை போம், பறலியல் வாவல் பகலுறை மாமரம் 375
பறவியல் வாவல் 375
வாவலுகக்கு மாலை—ஐங் - 339 - 3, 378 - 1 - 2.

சீவராசிகள் (4) மக்கள்

(தனித் தலைப்பு 134 பார்க்க)

5. விலங்குகள்

1 அரி - (சிங்கம் பார்க்க)
2. ஆ (பசு), கன்று, நாகு
ஆ - ஆத் தின்னி 386
கன்று 382

* 'விளவினை வாவல் குறுகா'—நாலடியார் 261.

கன்று அகன்ற புனிற்றீற்று 382
நன்னு கொடும் பொன்னூர் மணிபுலம்பக் கொற்றம் மருவு கொல் ஏறு 346
புனிற்றீற்று 382

3. ஆடு (மறி)

வெறி மறி ஆவி செகுத்து 287
வேலன் புகுந்து வெறியாடுக வெண்மறி யறுக்க 286
(வெண்மறி - வெள்ளாட்டு மறி)

4. ஆளி

அருவரை ஆளி 214
ஆளி நிரைத்து அடல் ஆனைகள் தேரும் இரவு 151
குழிகட் களிறு வெரீஇ அரி ஆளி குழீஇ வழங்காக் கழி கட்டு இரவு 255
கூற்றுயின சின ஆளி 382
சின ஆளி 382

5. கரடி (எண்கு)

எண்கு 264
வல்சியின் எண்கு வளர்புற்று அகழ மல்கும் இருள்வாய் செல்வரிதன்று 264

(கரடி குரும்பியாகிய உணவின் பொருட்டு உயர்ந்த புற்றை அகழா நிற்ப (குரும்பி - புற்றுஞ் சோறு) (குரும்பி - செல்லு) கரடி உணவு காரணமாக இரவு இருட்டில் செல்லும் ஆதலால் அவ்வழி செல்வார் இல்லை

6. குதிரை

மா

ஆலிக்கும் மா 330
பாய்சின மா 74
பாய்சின மா வென ஏறுவர் சீறூர்ப் பனைமடலே 74
மடல் மா 113
மா (குதிரை) 74

7. குரங்கு

கடுவனும் மந்தியும்

1. கடுவன்

பந்தியின் வாய்ப் பலவின் சுளை பைந்தேனொடும் கடுவன் மந்தியின் வாய்க் கொடுத்து ஓம்பும் சிலம்ப ௰

வான்தோய் பொழில் எழில் மாங்கனி மந்தியின் வாய்க் கடுவன் தேன் தோய்த்து அருத்தி மகிழ்வ கண்டாள் 257

2. மந்தி

இளமந்தி(கள்) 95, 250, 262
இளைய மந்தி 276
எழுங்குலை வாழையின் இன் கனி தின்றிள மந்தி யந்தண் செழுங்குலை வாழை நிழலில் துயில் சிலம்பா 250
நாகத்து ஒண் பூண் குறுங்கண்ணி வேய்ந்து இளமந்திகள் நாணும் இக் குன்றிடத்தே 95
மையார் கதலி வனத்து வருக்கைப் பழம் விழுதேன் எய்யாது அயின்று இளமந்திகள் சோரும் இருஞ்சிலம்பா 262
வந்து ஆய்பவரை இல்லா மயில் முட்டை இளைய மந்தி பந்து ஆடு இரும் பொழில் பல் வரை நாடன் 276
வளரும் கறி அறியா மந்தி தின்று மம்மர்க்கு இடமாய்த் தளரும் தடவரைத் தண் சிலம்பா 193

8. சிங்கம்

1. அரி

அயன் மன்னும் யானை துரந்து அரிதேரும் அதரகத்தே 395
ஆளரி 225
குழிகட் களிறு வெரீஇ அரி ஆளி குழீஇ வழங்காக் கழிகட் டிரவு 255
கோளரி 225
மாலரியேறு அன்னவன் 306
முழங்காரரி 157
முழங்காரரி முரண் வாரண வேட்டை செய் மொய் இருள் 157

2. சிங்கம்

குன்று அன்ன மா பதைப்பச் சிங்கம் திரிதரு சீறூர் 100
சிங்கம் திரிதரு சீறூர் 100
நாகம் நடுங்கச் சிங்கம் வேட்டந் திரிசரி 156
மழை குழுமி நாட்டம் புதைத்து அன்ன நள் இருள் நாகம் நடுங்கச் சிங்கம் வேட்டந் திரிசரி 156

3. சீயம்

கடந்தொறும் வாரண வல்சியின் நாடிப்பல் சீயம் கங்குல் இடந்தொறும் பார்க்கும் இயவு 253
கொல்கரி சீயங் குறுகா வகைபிடி தானிடைச் செல் கல்லதர் 264

சீயமும் மாவும் வெரீஇ வரல் என்பல் 207
வாரணம் வல்சியின் நாடிப் பல் சீயம் கங்குல் இடந்தொறும் பார்க்கும் இயவு 253

(4) மடங்கல்

மடங்கல் அதள் அம்பலவன் 75

9. நரி

ஓரி

கானகம் ஓரி கத்தும் 206
நீரில்லை கானகம் ஓரிகத்தும் 206

10. நாய்

ஞாளி 175
ஞாளி குரைதருமே 175
துறைவர் மிக்க கொன்நிற வேலொடு வந்திடின் ஞாளி குரை தருமே 175
நாய் வயி னுள்ள குணமு மில்லேனை 343

11. பன்றி (ஏனம்)

ஏனம் 60
நாகத்தொடு ஏனம் விளு இவன் 60

12. புலி

(1) உழுவை - தீவாய் உழுவை 72

(2) புலி

புலிப்பல் 239
போதிற் பொலியுந் தொழிற் புலிப் பல் குரல் பொற் றொடியே 239

(3) வேங்கை

எதிர்ந்த வேங்கையின் வாயின் வியன் கைம் மடுத்துக் கிடந்தலற ஆங்கு அயிலாற் பணி கொண்டது திண் திறல் ஆண்டகையே 245
நிறமனை வேங்கை அதள் அம் பலவன் 96
மறமனை வேங்கை 96

13. மா

(1) மா (யானை பார்க்க)
(2) மா (குதிரை பார்க்க)
(3) மா (மான், பார்க்க)
மா (விலங்கின் பொது)

சீயமும் மாவும் வெரீஇ 207

14. மான்

(1) உழை

அம்புலத்தான் உழை கண்டலும் நினைப்பாகு மென் னோக்கி மன் நோக்கம் 111
உழை கொண்டு ஒருங்கு இரு நோக்கம் பயின்ற எம் மொண்ணுதல் 65

(2) கலை

கலை 61
கலை ஒன்று வெங்கணையோடு கடுகிட்டது 101
பிணையும் கலையும் வன் பேய்த் தேரினைப் பெருநீர் நசையால் அணையும் முரம்பு 202
வான் கலை 5

(3) நவ்வி 93

(4) பிணை

கண்மலர் நோக்கருளப் பெற் றில மென் பிணை 97
பிணை 47
பிணையும் கலையும் வன் பேய்த் தேரினைப் பெருநீர் நசையால் அணையும் முரம்பு 202
மென் பிணை 97
வாம்பிணை 38
விழியாற் பிணையாம் 29

(5) மரை

சீறூர் மரையதளின் தங்கு கங்குற் சிறு துயிலே 398

(6) மறி

கையுறு மான் மறியோன் 399

(7) மா

மா இயன்றன்ன மென்னேக்கி 41
மாவை வந்தாண்ட மென் நோக்கி 200

(8) மான்

சடையோன் கர மான் என வொரு மான் 243
சிற்றம்பலவன் கரந் தரு மான் விழியா வரும் புரி மென் குழலாள் 261
சிறுமான் 25, 373
மடமான் 12
மான் 351, 367
மான் அமர் நோக்கு 274
மான் மட நோக்கி 21
மான் மறி 399
மான் முதிர் நோக்கு 369
மென் மான் விழித்து 224

14. யானை

(1) ஆனை

அடல் ஆனைகள் 151
ஆளி நிரைத்து அடல் ஆனைகள் தேரும் இரவு 151

(2) கரி

கரி மருப்பு 128
கருங்கடம் மூன்றுகு நால் வாய்க் கரி 55
கொடித்தேர் மறவர் குழாம் வெங்கரிநிரை கூடின் என் கை 216
கொல்கரி 264
கோடார் கரி 161
சிறு கண் பெரு வெண் கோடார் கரி 161
தறுகண் கரி மருப்பு 128
தோலாக் கரி 110
நால்வாய்க் கரி 55
புணர்ந்தாங்கு அகன்ற பொரு கரி 34
பெருவெண் கோடார் கரி 161
பொரு கரி 34
வெங்கரி நிரை 216
வெண் கோடார் கரி 161

(3) களிறு

ஈர்ங் களிறு 305
கவளக் களிறு 33
களிற்றின் மருப்புகு முத்தம் 265
களிறுற்ற செல்லல் 254
குழிகட் களிறு வெரீஇ அரியாளி குழீஇ வழங்காக் கழி கட்டிரவின் வரல் 255
மாக்களிறு 338
வன் மாக் களிறு 338
வாரிக் களிற்றின் மருப்பு உகு முத்தம் வரை மகளிர் வேரிக் களிக்கும் விழுமலை நாட 265

(4) குஞ்சரம்

குஞ்சரம் கோள் இழைக்கும் பாம்பு 21

(5) குன்றம், குன்று - மலை

1 குன்று, குன்றம்

உருப்பனை அன்ன கைக்குன்று 137
குன்றன்ன மா 100
கைக்குன்று 137
பனை அன்ன கைக்குன்று 137
வருங் குன்றம் 15

மலை

ஏறும் மலை 113

நம் இரும்புனம் காய்ந்து ஏறும் மலை 113
மலை ஒன்று மா 101

(6) நாகம்

நறமனை வேங்கையின் பூப் பயில் பாறையை நாகம் நண்ணி மறமனை வேங்கையென நனி அஞ்சும் 96
நாகத்தொடு ஏனம் வினை 60
நாகம் நண்ணி மறமனை வேங்கையென நனி அஞ்சும் 96
நால்வாய்க் கரி 55
மழை குழுமி நாட்டம் புதைத்து அன்ன நள்ளிருள் நாகம் நடுங்கச் சிங்கம் வேட்டந் திரிசரி 156

(7) பிடி (பெண் யானை)

பிடி 264
பெண் 254
மடப்பிடி 34

பிடியும் யானையும்

களிறுற்ற செல்லல் களைவயின் பெண் மரங்கைஞ் ஞெமிர்த்துப், பிளிறுற்ற வானப் பெருவரை நாட 254
கொல்கரி சீயம் குறுகா வகை பிடிதான் இடைச் செல்கல் அதர் 264

(8) மா

ஆலிக்கும் மா 330
கடம் மா 102, 247
கயிலை மலை ஒன்று மா 101
குழை செவிச் செம் முகமா 313
குன்றன்ன மா 100
கைம்மா 154
சிறுகண் பெருங்கைத் திண் கோட்டுக் குழைச் செவிச் செம்முக மா 313
செம்முக மா 313
திண் கோட்டுக் குழை செவிச் செம்முக மா 313
பனை வளர் கைம்மா 154
பெருங்கைத் திண் கோட்டுக் குழைசெவிச் செம்முக மா 313
மலை ஒன்று மா 101

(9) யானை

அயல் மன்னும் யானை துரந்து அரிதேரும் 395
இருங் களி யானை 327
ஒருங்களி யார்ப்ப உமிழ் மும் மதத்திரு கோட்டொரு நீள் கருங்களி யார் மதயானை 52
கடக்களி யானை 297
கயந்தலை யானை 383
கயிலைச்சினக் களி யானை 293
கவளத்த யானை 112
கழை காண்டலும் சுளியுங் களி யானை 111
களி யானை 111, 293, 297, 327
சினக்களி யானை 293
தில்லையான் அன்று உரித்தது அன்ன கவளத்த யானை 112
மயலோங்கு இருங்களி யானை 327
வரை புரை யானை 299

(10) வாரணம்

கடந்தொறும் வாரண வல்சி யின் நாடிப்பல் சீயம் கங்குல் இடந்தொறும் பார்க்கும் இயவு 253
முரண் வாரணம் 157
முழங்காரரி முரண் வாரண வேட்டை செய் மொய் யிருள்வாய் வழங்கா அதர் 157
வாரண வல்சியின் நாடிப்பல் சீயம் கங்குல் இடந் தொறும் பார்க்கும் இயவு 253

(11) வேழம்

வேழத்தின் என்பு நட்ட குரம்பையர் 251
வேழம் 61

யானையின் செயல்

களிறுற்ற செல்லல் களைவயின் பெண் மரங்கைஞ் ஞெமிர்த் துப்பிளிறுற்ற வானப் பெரு வரை 254

சிறுகட் பெருவெண் கோடார் கரிகுரு மாமணி யூசலைக் கோப்பழித்துத், தோடார் மது மலர் நாகத்தை நூக்கும் நஞ்சூழ் பொழிற்கே 161

(விடை - ஏறு - இடபம் சிவபிரான் வாகனம் பார்க்க)

1. இடபம்

இடபங் கொடி 113

2. ஏறு

கொல் லேறு 346
கொற்றம் மருவு கொல்லேறு 346
திண் கோட்டின் வண்ணப் புற்றங் குதர்ந்து நன்று கொடும் பொன்னூர் மணி புலம்பக் கொற்றம் மருவு கொல்லேறு செல்லா நின்ற கூர்ஞ் செக்கரே 346

3. விடை

இகலிடந் தாவிடை ஈசன் 42
தா விடை 42
பாயும் விடை 3, 241
* மழ விடை 398
விடையார் மருப்புத் திருத்தி விட்டார் 136

மழவிடை-இளஏறு-புதல்வன்.

ரு. இலக்கணப் பகுதி

---

1. அசைநிலை

(1) அம்ம

அன்பர் என்று அம்ம கொடியவளே 334

(2) அரோ

1. கூத்தனை ஏத்தலர் போல் வருநாள் பிறவற்க வாழியரோ 44
2. பொழில் ஏழினும் வாழியரோ 393

(3) ஆங்கு

இங்ஙனே இருந்தால் ஆங்கு இல் பழியாம் 13
செறிகடலே ஆங்கு அணைந்தார் நின்னையும் உளரோ 179

(4) ஆம்

என் கொலாம் புகுந்து எய்தியதே 20

(5) ஆல்

ஆர்த்தர் அங்கம் செய்யுமால் 187
இன்னும் அறிகில வால் 189
பொங்கைகள் தாங்கித் தளர் மருங்குல் பிணியுறப் பேதை
சென்று இன்று எய்துமால் 359
கொண்டல் எண் திசையும் வருமால் 321
சேக்கைகள் நோக்கின வால் 188
தில்லை வாழ்த்தினர் போல் இருந்து திவண்டன வால் 300

(6) உம்

கிழவோனொடும் 247

(7) ஏ

என்னோ ஐய ஓதுவதே 104

(8) ஐ

கருங் கண்ணனை அறியாமை நின்றோன் 53
கண்டலையே கரியா 177

குறவரை ஆர்க்கும் குளிர்வரை 260
நடுங்காதவனை நடுங்க 31
நிறமனை வேங்கை அதள் 96
மண்ணை மடங்க விரிநீர் பரந்து 75
விண்ணை மடங்க வரும் ஒரு காலத்தும் 75

(9) ஓ

ஆழ மன்றோ உடைத்து இவ் ஐயர் வார்த்தை 61
இவளோ தீதுற்றது என்னுக்கு 174
பறவியல் வாவல் பகலுறை மாமரம் போலு மன்றோ 375
பொதியில் நன்றும் சிறியவர் இல் எமது இல்லம் நல்லூர மன்றோ 392
மாமதி வேண்டி அழும் மழப் போலு மன்றோ 147

(10) கண்டாய்

கயிலை அவ்வரை மேலன்றி இல்லை கண்டாய் 114
தேர்வழி தூரல் கண்டாய் 185

(11) கண்டீர்

சாலத் தகாது கண்டீர்... 45

(12) கொல் (தலைப்பு 13 பார்க்க)

ஏது கொலாய் விளைகின்றது 316

(13) தான்

என்னதோர் நன்மைதான்... 246
கண்கள் கோள் இழித்தால் போல் தான் செறியிருட் பொக்கம் 382
கால் தான் தொடல் 390
சேல் தான் திகழ்வயல் 390
பால் தான் திகழும் பரிசினம் 390
வேல் தான் திகழ்கண் 390

(14) போல்

பொன் போல் புரிசை 222

(15) மற்று

குற்றேவல் மற்று என் மைம்மலர் வாட் கண்ணி வல்லள் கொல்லாம் 233
புள்ளும் தம் பிள்ளை தழீஇ மற்று இனம் சூழ்ந்து துயில்ப் பெறும் 320
பணி கண்டேன் மற்று அண்டர்க் கெல்லாம் மருந்து 272

மதுவினில் கைப்பு வைத்தால் ஒத்தவா மற்று இவ்வான் புனமே 146
மலர் சூட்டவற்றோ மற்று அவ்வான் சுனையே 70
மற்று என் கண்மணி போன்று 44
மறந்தும் மற்று அப்பொய் வானவரிற் புகாது 67

(16) மன்

ஆழ மன்னோ உடைத்து இவ் ஐயர் வார்த்தை 61
என்னளாங் கொல் மன் பாவியற்கே 347
திருவருள் இத்துணை சாலுமன் எங்களுக்கே 392
நன்றும் சிறியவர் இல் எமது இல்லம் நல்லூர மன்னோ 392
பறலியல் வாவல் பகலுறை மாமரம் போலு மன்னோ 375
மாமதி வேண்டி அழும் மழப்போலு மன்னோ 147
வளைக் கரத்தார்க்கு அடுத்தோம் மன் உருவரையே 357
விரலிசைப் பாய்புனலாட்டி மன் 391

(மன் - ஒழியிசைக் கண் வந்தது; அசைநிலை
யெனினும் அமையும்) (உரை)

(17) மன்னும்

அயல் மன்னும் இவ்வயலே 302
இருங்கழிவாய் மன்னும் பகலே மகிழ்ந்து இரைதேரும்
வண்டானங்களே 189
ஏதற்று அழிதி என்னீர் மன்னும் ஈர்ந்துறைவர்க்கு 174

(18) மன்னே (மன் - ஓ - அசைநிலை)

ஆழ மன்னே உடைத்து இவ்ஐயர் வார்த்தை... 61
சிறியவர் இல் எமது இல்லம் நல்லூர மன்னோ 392
மாமதி வேண்டி அழும் மழப்போலு மன்னே 147
வாவல் பகலுறை மாமரம் போலு மன்னே 375

(19) மோ

துயில் பயின் மோ 167

(20) வாழி

இற்பாற் பிறவற்க ஏழையர் வாழி எழுமையுமே 208
திரிந்திளைத்து வாழியன்றே அருக்கன் 339
தோழிக்கு வாழி அறிவிப்பனே 50
பொழில் ஏழினும் வாழியரோ 393
வாழியம் மூதூர் 230

(21) வாழியரோ

பொழில் ஏழினும் வாழியரோ 393

2. அவாய்நிலை

மன்னுங்கடி என்பதற்கு வண்டு என ஒரு சொல் வருவித்து உரைக்க 216

3. அன்மொழித் தொகை

குரை கழல் (ஒலிக்குங் கழலை உடைய திருவடி) 151
செறிகழல் (செறிந்த கழலை உடையவன்) 273
நடை மணி (குழந்தை புதல்வனைக் குறிக்கின்றது) 385
பொன்னங்கழல்......(பொன்னினால் இயன்ற கழலை உடைய திருவடி) 131
முத்த மணல்...(முத்துப் போலும் மணலை உடைய இடம்) 273

4. ஆகுபெயர்

ஆழி திருத்தும் புலியூர் உடையான் ஆழி - ஆழி சூழ்ந்த மண்ணுலகம்... 186

2. இடை மின் தங்கு இடை—மின் போலும் இடையை உடையாள் 221

3. எற்றுந் திரை கடல்—சினையாகிய தன் பொருட்கு ஏற்ற அடை அடுத்து நின்றதோர் ஆகுபெயர் (அடை அடுத்த ஆகுபெயர்) 134

4. குழல்—குழல் வாடினள் - குழலை உடையாள் வாடினள்' 218

5 சாரல் (துளி வளர் சாரல்)—சாரல் - சாரற் பொதும்பர்—சாரல் என்பது ஆகுபெயர் 16

6. நவ்வி—நவ்வி போல்வாள் - மானின் கண் போன்ற கண்ணை உடையாள்... 98

7. பாயின மேகலை—மேகலை உடையாள் 282

8. வருத்தம் ''வருத்தம் பயின்று கொல்லோ''
[வருத்தம் - வருத்தத்தைத் தரும் விளையாட்டு] 62

9. வினை:

வினை—வினை இலன்—வினை—வினைவப்படுகின்றன (வினை—வினை ஆகுபெயர்) 60

5. இரட்டிப்பு

என் எங்கை—எங்கை என் தங்கை இயைபு மிகுதி கூறியதால் வந்தது இரட்டிப்பு 373 (உரையும் பழையவுரையும்)

6. உடம்படு மெய்

செல்வரிது-செல்வரிது என்பது செல்வுழிக் கண் என்பது போல மெய்யீற்றுடம்படுமெய்... 264

(நன். சூ: 163 சங். நம)

7. உம்

தழையும் - உம்மை - சிறப்பும்மை	112
வழியும் - உம் : எச்ச உம்மை	135

8. எதுகையில் வந்துள்ள சொற்கள் (1)

அணி	303, 352, 400	உற்ற, உற்று	74, 254, 354
அணியும்	360	உற்றூர்	218, 309
அயர்	274	உற	359
அலர்	180	உறு	176 315
அளவில்லா	308	ஊர்	372, 398
அன்னார்	37	எடுத்த	249
அன்றே	284	என்பதே	277
ஆண்டு	387	என்ன	56
ஆம்	22	என	224
ஆர்	136, 378	ஏய்	243
ஆரத்தழை	91	ஒன்று	101, 178
ஆவி அன்னாய்	37	ஓங்கு	327
ஆழிதிருத்து	186	கடைக்கண்	298
ஆனந்த வெள்ளம்	307	கண்	70, 258
இடம்	42	கழி	190
இடம் கொண்ட	138	களி	52
இதன்றே	285	காண்டலும்	111
இவர்	10	கால்	126
இனம்	295, 302, 319	கீழ்	59
உடையர்	57	குலம்	36
உடையார் (ன்)	7, 48, 292	குலாய	316
உடாவே	35	குன்றம்	15

கைப்போது	364	படு	348
கொண்ட	386	பயில்	362
கொண்டு	65	புகுந்து	286
சந்தம்	78	பெற்ற	14
சிவந்த	361	பொலி	368
செய்	43, 129	பொரு	367
செய்த, செய்து	144, 278, 358	போல்	222
சென்ற	50	மணி	385
சேர்	83	மலர்	153
தணித்தற்கு	314	மலி	397
தந்த	130	மன்னு(ம்)	351, 395
தயங்கும்	199	மனை	96
தர - தரல்	324	முகம்	356
தரு	98	முதிர்	369
தலை	206	வந்த	212, 381
தழீஇ	196	வயின்	343
தாழ்	34	வரும்	332
தான்	390	வளர்	1, 16, 117, 154
திருத்திய	215	வளைத்த	317
திருத்தும்	186	வாய்	94
தோய்	257	விளையாட	133
நாகம்	171	வினை	26
நிகர்	183	வேய்	119
நிறம்	58, 69	8. (2) எதுகை வேறுபடல்	198
நுழையா	347	(விசும்—அசும்—குயம்—நயம்)	

9. ஏகாரம்

உளவே—ஏ : எதிர்மறை	110
திருக்கடலே—ஏ : ஏகாரம் பிரிநிலை	123
பொன்னே—ஏ : ஏகாரம் பிரிநிலை	122
மாதே—ஏ : விளி உருபு	82
யாதே—ஏ : வினா	82

10. ஒருமை பன்மை மயக்கமும் பன்மை ஒருமை மயக்கமும்

(1) 'உவவின நாண்மதி'

''உவவின நாண்மதி' என்றது 'காலகுருகு' (குறுந்தொகை, 26) என்பது போலப் பன்மை ஒருமை மயக்கம் 108 உரை

2. கவளத்த யானை பன்மை ஒருமை மயக்கம் 112 உரை

3. கள்ளகத்த கழுநீர் மலர்

இது 'காலகுருகு' (குறுந்தொகை 26) என்பது போல் பன்மை ஒருமை மயக்கம் 123

4. 'தவளத்த நீறு' பன்மை ஒருமை மயக்கம் 112 உரை

5. "நினமொழியின் வழிநிற்கும் உம்மவே"

நின்மொழி என்று உம்மவே என்றது, என்னீர் அறியாதீர்... நின்னீர வல்ல நெடுந்தகாய்" (கலித்தொகை - பாலை - 5) என்பது போல ஈண்டும் பன்மையும் ஒருமையும் மயங்கி நின்றன 135 உரை

6. விழுமிய அல்ல கொல்லோ இன்னவாறு விரும்புவதே 'விரும்புவது'

என்புழி இன்னவாறு விரும்புவ போல்வன என்பது கருத்தாகலின் ஒருமை பன்மை மயக்கம் 393 உரை

7. வெஞ்சுரஞ் சென்ற சேர்லாம் 'எல்லாம்'

என்பது பன்மை ஒருமை மயக்கம் 351 உரை

11. ஓகாரம்

வருந்தேல் அது அன்று இதுவோ வருவது ஓர் வஞ்சனையே' ஓகாரம் ஒழியிசைக்கண் வந்தது 394 உரை

12. குறை (1)

இடைக்குறை

அனை - அ(ன்)னை 26 132, 228, 231
ஆம்...ஆ(கு)ம்... 8, 77
இ(ல்)லா 245
உட(ன்)(கு)ம் 77
எ(வ்)வம் 358
எ(ண்)ண 323
எ(ன்)ன 324
என்(னை) ஆண்டு 73
ஒறு(க்கு)ம் 253
தந்தென...தந்(த) தென 124
தாவிடை...தா(வும்) விடை 42
த(ண்)ணி 342
ந(ல்)ல 235
நான் இவளா(கு)ம் பகுதி 8
ப(ண்)ணை 219
பறல் - பற(த்த)ல்...பறலியல் வாவல் 375 உரை
பாமரை - பா(வு)ம் அரை பாமரை மேகலை 164 (உரை)
போரும்...போ(த)ரும் 182
வ(ல்)ல 227
வாம்...வா(வு)ம் 38, 263

12 (2) கடைக்குறை

(1) ஆக என்பது ஆ என்று குறைகிற்று.

இடமா(க) இருக்க லுற்றே 120
தாமா(க) அறிகிலர் 263
துணையா (க) 7, 354 395
நன்று(க) அழிகிது 288
பொருளா (க) எனை...ஆண்டி 73
மலரா(க) வரும்... 259
முன்னு(க) 215, 330
மெய்யா(க) அரியது 262

(2) 'த' விட்டிருப்பன

அகற்று (த) விரதம் 381
அருளா (த) அரன் 87
அழுந்தா (த) வகை 124
அளவா (த) ஒருவன் 16
அறியா (த) அடி 72
அறியா (த) அளவு 333
அறியா (த) கட 77
அறியா (த) கழல் 256
அறியா (த) செறிகழல் 326
அறியா (த) தில்லை வானவன் 251
அறியா (த) மந்தி 193
அறியா (த) மறையோன் 318
ஆகா (த) இறை 285
இல்லா (த) அளவினர் 308
இல்லா (த) அளவு 308
இல்லா (த) இறையோன் 202
இல்லா (த ஒருவன் 308
இல்லா (த) கண்ணுதல் 203
இல்லா (த) கல்வி 308
இல்லா (த) சுரம் 207
இல்லா (த) தழை 92
இல்லா (த) பழி 92
இல்லா (த) மயில் முட்டை 276
இல்லா (த) வகை 92
இலா (த) சிறியான் 245
உலவியலா (த) தனம் 365
உன்னு (த) வினை 217
கலரைப் பொரு (த) சிறியாள் 367
கழியா (த) அருள் 261
கழியா (த) கழல் 29
காணு (த) இறை 379
குறுகா (த) அசுரர் 283
குன்று (த) அருள் 280
செல்லா (த) அழற்கடம் 271
தவலங் கிலா (த) சிவன் 389
திருமாலறியா (த) செறிகழல் 326
துயிலா (த) செயிர் 191
தோலா (த) கரி 110
நினையா (த) தில்லை 259
நுழையா (த) இருள் 116
பிரியா (த) இறை 289
பிரியா (த) கொழுநீர் 123
புலரா (த) இரவு 289
பொழியா (த) மழை 289
பொரு (த) அடி 367
பொரு (த) சிறியான் 367
மலரைப் பொரு (த) அடி 367
மால் அறியா (த) மணி கண்டர் 385
மாறு (த) கவிகை 27
முனையா (த) அளவு 294
முன்னு (த) வினை 217
மேயா (த) மஞ்ஞை 21
வணங்கா (த) கலர் 367
வழங்கா(த) அதர் 157
வழங்கா(த) கழிகட்டிரவு 255
வழங்கா(த) தெய்வம் 304
வழுத்தா (த) பாவர் 337
வழுத்தா(த) புரமங்கையர் 371
வழுவா(த) இயல் 142
வாடா(த) வகை 268
விடா(த) அடி 32
விரும்பா(த) அரும்பாவியர் 364
விள்ளா(த) அருள் 386

(3) ஆறு...ஆ எனக் குறுகியது
(கற்றவாறு) - கற்றவா 60
('ஆ' வியப்பின் கட் குறிப்பு)
60 உரை

(4) உடைய - உடை எனக் குறுகியது

என்னுடை(ய) நீர்மை 28
என்னுடை(ய) மன்னுயிர் 36

சூழுடை(ய) ஆயத்தை 7
நின்னுடை(ய) நீர்மை 28
பையுடை(ய) வாளரவு 48
முக்கண் மன்னுடை(ய) மால் வரையோ 28
மூலைப்பங்குடை(ய) தில்லை முன்னோன் 156
மையுடை(ய) வாட்கண் 48

5. பிற

செல்வரிது - செல்ல அரிது, கடைக்குறை 264 உரை
5. 'உடம்படுமெய்' என்பதின் கீழ்ப் பார்க்க
சோத்து (சோத்தம்) என்பதன் கடைக்குறை 173
மல் - மல்லல் 178, 208
(மல்லல் - மல்லெனக் கடைக் குறை)
ஏழியன்றுழ் கடல்) என்பதில் (இயன்ற) என்பது கடைக் குறை 339
கண்டின மேவு மில்...
(கண்ட இல் நம்மேவு இல்) என்பதில் 'கண்ட' என்பது கண்டு+அ எனக் கடைக் குறைந்து நின்றது 302 உரை
மிக்க வாவினர் - மிக்க அவா வினர் மிக்க என்பது கடைக் குறைந்து நின்றது 37 உரை

12. (3) முதல் குறை

கலை - மேகலை
கலைக்கீழ் அகல் அல்குல் 59
தொடல் விடுநர் கலையே 358
வாமாண் கலை 263
வருங்கள் (வாருங்கள்) 55

13. கொல், கொலோ, கொலாம்

அல்குங் கொல் 319
இருந்தேமையுஞ் செல்லல் செப்பா நின்றவர் தூது கொல்லோ 280
இல்லை கொலாம் 277
இவன் யாவன் கொலாம் 60
உய்யுமாறு என்கொல் 187
எவ்வாறு கொல் 380
என்கொலாம் இன்று அயர் கின்றதே 224
என் கொலாம் இன்று செய் கின்றதே 273
என் கொலாம் புகுந்து எய்தி யதே 20
என் கொலாம் புகுந்து எய்து விதே 211
என்னதாங் கொல் 155, 318
என்னளாங் கொல் 347
என்னைக் கண்டால் இயலும் கடனில்லை கொல்லோ கருதியதே 105
என்னை கொல்லோ கருதி யதே 367
என்ன மாயங்கொலோ 83
ஏது கொலாய் விளைகின்றது 316
ஒழிவர் கொல்லோ 184
காலத்து நீர்மைகொல் 278
சடையோன் புதல்வன் கொல் பூங்கணை வேள் கொல் என்னத் தெரியேம் 83
சிலம் பெதிர் கூய் வருத்தம் பயின்று கொல்லோ வல்லி மெல்லியல் வாடியதே 62
செப்புற்ற கொங்கையர் யாவர் கொல் ஆருயிர் தேய்பவரே 354

நம் அகன்று சென்றவர் தூது கொல்லோ இருந்தேமை யுஞ் செல்லல் செப்பா நின்றவர் தூது கொல்லோ 280
நின்னின் மதியுடையார் தெய்வமே யில்லை கொல் இனி வையகத்தே 292
பனைமாமடல் ஏறக்கொல் பாவித்ததே 88
பாசறைத் தோன்றுங் கொலோ . 317
புதல்வன் கொல்... 83
பூங்கணை வேள்கொல் 83
மாமடல் ஏறுங்கொல் பாவித் ததே 88
மூன்செய்த தீங்கு கொல் காலத்து நீர்மை கொல் மொய் குழலே 278
யாவர் கொல் ஆருயிர் 354
வாட் கண்ணி வல்லள் கொல் 233
விழுமிய அல்ல கொல்லோ இன்னவாறு விரும்புவதே 393
வேள் கொல் 83

14. சாதிப்பெயர்

திருக்கணி - இந்தத் திருவாகிய கணி. திரு என்பது சாதிப் பெயர், கணி என்பது தொழிற் பெயர் 141 உரை

15. சாதியடை

நற்றுண்டு 343 உரை
(நற்றுண்டு என்புழி நன்மை சாதியடை)

16. சாரியை

பாட்டு 11

(கூம்பலம்) - இப்பாட்டில் அல்லும், அம்மும் அல்வழிச் சாரியை.

68, 74. அக்கின் தவாமணி - கண்ணின் வலை 'இன்' அல்வழிச் சாரியை.

198. 'குழல் மொழியின் நயம் - குழன் மொழியி னென்னும் இன் பல பெயரும்மைத் தொகை இறுதிக்கண் வந்த சாரியை இன்

265. 'விரிதிரையின் நாரி' விரிதிரையினென்பது அல்வழிச் சாரியை.

17. செயப்படு பொருள்

பாட்டு

287. "இருவர் உயர்ந்தும் பணிந்தும் உணரான்'— 'உணரான் என்றது 'உணரப்படாதவன்' எனச் செயப்படு பொருட்கண் வந்தது.

18. தன்மை முன்னிலைப் பொருளில் வந்தது

பாட்டு

164. 'நாம் அரையாமத்து என்றோ வந்து வைகி நயந்ததுவே' — நாம் என்னும் முன்னிலை உளப்பாட்டுத் தன்மை உயர்வு தோன்ற முன்னிலைக்கண் வந்தது.

19. தான்

பாட்டு

382. 'கண்கள் கோளிழித்தால் போல் தான் செறி இருள் பொக்கம்'—

'இழித்தல்' என்பது கண்மணியை வாங்குதல் 'தான்' என்பது அதுவன்றி இதுவொன்றென்பது பட நின்றதோர் இடைச் சொல்.

20. துணைச்சொல்

அது

எங்கை அது ஆகம்	397
சிற்றம்பலம் அது காதல் செய்த	310
பணிகள் அது பதியோ	3

21. தொழிற் பெயர்

பாட்டு

151. 'இரவில் வந்து மீளி யுரைத்தி - மீடல் என்பது மீளியென நின்றது. (மருடல், வெருடல், என்பன மருளி, வெருளி என நின்றாற் போல)

22. தொறும்

உம்

புணருந் தொறும்	9

(நன் - சூ - 421)

23. போலி, மரூ

தயல் - தையல் 117
மரூ - அருந்ததி - அருந்துதி 300

24. மன்

பாட்டு

264. உரை 'செல்வரி தன்று மன்' மன் - ஒழியிசைக்கண் வந்தது.

பாட்டு

391. உரை 'பந்தார் விரலியைப் பாய்புன லாட்டிமன்' மன் ஒழியிசைக்கண் வந்தது.

25. முதல்நிலைத் தொழிற் பெயர்

கலையார் புனல் (கலை - கலைதல்) 19
சூழுடை ஆயம் (சூழ் - சூழ்தல்) 7

26. வழூவமைதி

பாட்டு

373. 'இறுமாப்பு ஒழிய இறுமாப்பு ஒழிந்த இணை முலையே' ஒழிந்த என்னும் இறந்த காலம் விரைவு பற்றி வந்தது.

27. விகாரம்

17. 'புகுந்தது வே'-என்பதில் வகாரம் விகார வகையான் வந்தது.
83. மருங்கு என்பது மருங்கண் என ஈறு திரிந்து நின்றது. அணித்தாக என்னும் பொருட்டாய். அணி அண் ணெனக் குறைந்து நின்ற தெனினு மமையும்.
55. 'வாருங் கள்' என்பது வருங்கள் எனக் குறுகியது.
115, 287. 'பெயர்த்து' என்பது பெயர்ந்து என மெலிந்து நின்றது.
123. நரூ - நற குறுக்கல் விகாரம்
135. 'கெழீஇய' என்பது 'கெழி' எனக் குறைந்து நின்றது. 'குழீஇ' என்பது 'குழி' யெனக் குறுகிநின்றது.
162. 'பாதாலம்' பாதலம் எனக் குறுகி நின்றது.

269, 270. 'வருடி' - 'வருட்டி' என மிக்கு நின்றது.

304. 'தெவ்வு' தெவ்வம் என விரிந்து நின்றது.

342. 'ஓட்டந்தரும்' என்பது 'ஓட்டரும்' எனக் குறுகி நின்றது.

358. புல் என்பது புல்லம் என விரிந்து நின்றது.

362. 'கராம் பயில்' என்பது 'கராப்பயில்' என வலிந்து நின்றது.

370. 'கோலம்' என்பது 'கொலம்' எனக் குறுகி நின்றது.

381. 'பொலிபவர்க்கு' என்னும் நான்கன் உருபு விகார வகையால் 'பொலிபவர்' எனத் தொக்கது எனினும் அமையும்.

28. விகுதி

1. அர்

எழில் கொம்பர்	55
கோலத் தனிக் கொம்பர்	45
புனைவளர் கொம்பர்	118

2. ஆர்

(1) எரியார்... 340

'ஆர்' என்னும் கிளவி கொடுத்து இழித்துக் கூறினர்.

(2) மாலார்... 110

வழிபட்டுக் காணல் உருமையின் மாலார் என இழித்துக் கூறினர்.

(3) எதிர்மறை விகுதி

(1) அல்

கலங்கல் - கலங்காதே	222
கொய்யல் - கொய்யாதே	167
தீண்டல் - தீண்டாதே	390
தூரல் - தூர்க்காதே	185
தொடல் - தொடாதே	390
புலம்புறல் - புலம்புறாதே (தனிமை உறுதொழி	315
வரல் - வராதே	119, 207
விளையாடல் - விளையாடாதே	133

2. ஏல்

(1) தொடரேல் - தொடரவேண்டா...	390
பறியேல் - பறியாது ஒழிவாயாக......	125

(4) விகுதி மேல் விகுதி

உரைமின்கள் 54

(5) வினாப் பொருள்

ஓகாரம் வினா

உண்டோ 53

பேர் என்னவோ 56

29. வியங்கோள்

மறப்பது அறிவிலென் கூற்றுக்களே 87

(தக்கயாகப்பரணி பக்கம் 353 விசேடவுரை பார்க்க)

30. வினைத்தொகை

ஈவரன்... 16

கார் வாய் குழல் 80

சீர்வாய் சிலம்ப 80

31. வேற்றுமை உருபுகள்

6 ஆம் வேற்றுமை

1. அ

ஈசன சாந்தும் எருக்கும் 74

கூத்தன தாள் 291

(தக்கயாகப்பரணி பக்கம் 321)

2. அது

உணரானது அம்பலம் 287

7 ஆம் வேற்றுமை உருபுகள்

1. அகம்

அத்தர் அகத்தே 395

களவகத்தே 8

வெற்பகச் சோலை 168

2. இடை

அங்கத்திடைக் குளிப்ப 351

ஆனந்த வெள்ளத்திடை 307

என்பிடை வந்து 377

காட்டிடை ஆட்டு 389

காயும் கடத்திடை ஆடி 241

குன்றத்திடை 246

தெருவிடைப் போதுவின் 76

புனத்திடை 82

3. இல்

வாழை நிழலில் துயில் 250

4. இன்

பரிசினின் நிற்பித்த பண்பி னுக்கு 286

இன் உருபைப் புறனடையாற் கொள்ளலாம். உரை

5. உழை

மண் உழை யாவும்... 347

6. உள்

சிந்தையுள்... 20

7. கண்

எங்கண் வந்து ஒரு தோன்றல் 290

என்கண் இங்ஙனே மறைத்
தாள் 374
என்கண் இன்னருளே 81
என்கண் நின்றுன் 286
கடை எங்கண் 298
கறைக்கண் மலி கதிர்வேல் 258
சிறைக்கண் மலி புனல் 258
பறைக்கண் படும்படும் 258
பொழிற்கண் வடிக்கண் பரப்பி 34
மணந்தாழ் பொழிற்கண் 34

8. கீழ்

அடிக்கீழ் 43
கலைக்கீழ் அல்குல் 59
குரை கழற்கீழ்...சுடர்முடி 151
சிலைக்கீழ் 59
மலைக்கீழ் 59
முலைக்கீழ் 59

9. தலை

குழல் தலைச் சொல்லி 205
நிழல் தலை தீநெறி 206
விண்தலை யாவர்க்கும் 177

10. பால்

இற்பால் பிறவற்க 208
சொற்பால் அமுதிவள் 8
தன் பால் 51
நகையவர் தம்பால் 372
மால் அயன் பால் 73
விரும்பினர் பால் 248

11. மிசை

தேர் மிசை 382
பெண்ணை மடல்மிசை 75

12. மீது

அலர் மீது கனி 35

13. மேல்

அமளியின் மேல் 355
அவ்வரை மேல் 114
இவ்வரை மேல் 114
ஈர்ங்கொடி மேல் புயல் 35
எரியுந் தீமேல் அயில் 228
கொடுங் குன்றின் நீள்குடுமி
மேல் தேன் 150
சடைமுடி மேல் தனித் திங்கள் 56
சடைமேல் திங்கள் 98
சின்னெறி மேல் மழை 149
நீள்முடிமேல் 257
பூ அணைமேல் அணையாமுன் 351
பொலி மலர் மேல் நறவுண்
அளி 219
முலைமேல் சாந்தம் 361
முனைமேல் உழுங் கொலைவேல் 250
வன் பெடை மேல் துயிலும் 377

14. வயின்

அயல் வயி னச்சுதலால் 376
இருந்துதி என்வயின் கொண்
டவன் 300
எம்வயின் பெருநாண் 284
களை வயின் 254
கிளை வயின் நீக்கி 6
நாய் வயின் உள்ள குணம் 343

15 வாய்

அந்தி வாய் வடமீன் 305
இருங்கழி வாய்க் கொழுமீன் 188
இருள்வாய் அயன் மன்னும்
யானை 395
இருள்வாய்ச் செலவு 264
இற்பந்தி வாய் அன்றி...
செல்லாது 305
கடல்வாய்ப் புள்ளினம் 295
சிற்றம்பலத்து அயல்வாய் 357
சிற்றிலின் வாய் 95
சூழ்பொழில் வாய்முகை 314
செந்தாமரை வாய் 66
சோலையின் வாய் வரற்பாற்
றன்று 176
தடமால் வரைவாய் 70
தடவரைவாய் 158

தில்லைச் சூழ்பொழில் வாய் முகை 314
தில்லைநகர் வாய் அடியீர் 370
தில்லைந் நகர்வாய் இளையார் 390
தில்லை மாநகர் வாய் 214
தில்லையின் வாய் வண்டு 105
துறைவாய் 20, 49
பரம் குன்றின் வாய் அருவி 144
பொழில்வாய் இணர்ப்போது 17
பொழில் வாய் எழில் ஆயம் 47
பொழில் வாய் எழில் பூங் கொடி 42
பொழில் வாய்க் கார்ப்புன்னை 27
பொழில் வாய்ச் சூழுடை ஆயம்
பொழில் வாய்த் தடவரை 94
பொழில் வாய்ப் பூவர் 14
பொழில் வாய் முகை 314
பொழில் வாய் வரும் கள் 53
மங்குல் வாய் மண்டலம் 177
மலைவாய்...காந்தள் 238
முதுதிரை வாய் 81
வரைவாய்க் கடிதோட்ட 8
விண் வாய்ச் செயிர் 18
வெள்ளியின் வாய் 234

32. வேற்றுமை உருபு தொக்கது

குன்றதிடைக் கண்டனைய அன்னை நீ சொன்ன கொள்கையரே 246
(கொள்கையர் - கொள்கையரை. 2ஆம் வேற்றுமை உருபு தொக்கது)

சிறுதுயில் மாறு கண்டிலம் 398
(துயிற்கு என்னும் நான்கனுருபு விகார வகையால் தொக்கு நின்றது)

33. வேற்றுமை உருபு மயக்கம்

1. இருந்தேமையுஞ் செல்லல் செப்பா நின்றவர் 280
(2இன் உருபு—7இன் பொருளில் வந்தது)

2. ஒருவனது அன்பரின் இன்பக் கலவிகள் (ஒருவனது அன்பு - ஒருவன் கண் அன்பு)

ஆறன் உருபு ஏழின் பொருளில் வந்தது 281

சின்மொழியை அஞ்சத் தக்கது உன் - சிக்கவவே [சிலவாகிய மொழியை உடையாளிடத்து உன் சிக்கனவு (இரக்கமின்மை) அஞ்சத் தக்கது]

இரண்டன் உருபு ஏழின் பொருளில் வந்தது 343

சூழ் பொழிற்கே; துயில் பயின்மோ (சூழ்ந்த பொழிலிடத்து துயிலைப் பயில்வாயாக) நாலின் உருபு ஏழின் பொருளில் வந்தது 167

5. 'பரங் குன்றினிற் பாய்புனல்' (பரங் குன்றினிடத்துப் பரந்த புனல்) ஐந்தின் உருபு ஏழின் பொருளில் வந்தது 292
'பரிசினின் (286) போல'

6. 'பரிசினின் நிற்பித்த பண்பினுக்கே' (இம் முறைமைக்கண் எம்மை நிற்பித்த பண்பால்) ஐந்தின் உருபு ஏழின் பொருளில் வந்து, சிறு பான்மை இன் சாரியை பெற்று நின்றது 286

7. 'வடிக்கு அலர்வேற் கண்ணி' (வடு வகிரிற் பரந்த வேல் போலுங் கண்ணை யுடையாய்) வடிக்கு என்னும் நான்காவது ஐந்தாவதன் பொருட்கண் வந்தது 291

34. வேறு

(1) வில்லைப் பொலி - ஐகாரம் இசைநிறையாய் வந்தது 368

(2) மல்லைப் பொலி - மல்லல் கடைக்குறைந்து ஐகாரம் விரிந்து நின்றது.

247. கிழவோ னொடும்...கண்ணுள் இந் நெடுஞ்சுரம் நீந்தி எம்மை ஆள்வது செய்தவன் தில்லையின் எல்லை அணுகுவரே.

சுரங்கடத்தல் இருவர்க்கு மொக்கு மெனினும் நீள்வது செய்த கண்ணுள் நீந்தி யெனத் தலைமகள் மேற் கூறினார், வெஞ் சுரத்திற்கு அவள், பஞ்சின் மெல்லடி தகாவாக லின் அணுகுவர் என்புழித் தலைமகள் தொழிலும் உண்மையின் நீந்தி யென்னும் எச்சம், வினைமுதல் வினை கொண்டதாம்; கிழவோனொடும் என்றதனால் அவன் பற்றுக் கோடாக நீந்தினாளென்பது விளக்கினார்.

வினைமுதல் வினையென்னும் துணையே யாம் நிற்றலின் இவ்வாறு முடித்தார்.

கீழ்க்குறிப்பு பக்கம், 469. திருப்பனந்தாள் பதிப்பு...1960.

257. மந்தியின் வாய்க் கடுவன் தேன் தோய்த்து அருத்தி மகிழ்வ கடுவன் அருத்தி மகிழ்வ — பாட்டு 247க்கு எழுதியுள்ள குறிப்பை இதற்கும் கொள்க.

II. அணி, அலங்காரம்

1. இல் பொருள் உவமையணி

(1) தூண்டா விளக்கு 244 உரை

(2) அரவம் சடை மிடைந்த மின் 125 உரை

2. உயர்வு நவிற்சி அணி

(1) 'வெற்பகச் சோலையின் வேய்வளர் தீச் சென்று விண்ணின்ற கற்பகச் சோலை கதுவும்' 68

3. உருவக அணி

(1) தலைவியைத் தாமரை முதலிய மலர்களைக் கொண்ட ஒரு தெய்வ மாலைக்கு உருவகப்படுத்தியது. 'திருவளர் தாமரை ஓளிர்கின்றது' 1

(2) தெளிவளர் வான்சிலை செங்கனி வெண் முத்தம் திங்களின் வாய்ந்து அளிவளர் வல்லியன்னாய் 16

(3) மையேர் குவளைக்கண் வண்டினம் வாழும் செந்தாமரை வாய் 66

(4) மின்னியல் கண்ணின் வலை கலந்து வீசின போதுள்ள மீனிழந்தா 74

(5) கொழும் [illegible] முகை கொண்டலம் பாசடை விண் மடுவில் எழுந்தார் மதிக் கமலம் எழில் தந்தென 124

4. உவமை அணி

(1) சங்கந் தருமுத்து யாம் பெற வான் கழிதான் கெழுமிப், பொங்கும் புனற் கங்கை தாங்கிப் பொலிகலிப் பாறுலவு, துங்க மலிதலை ஏந்தலின் (ஏந்திழை) தொல்லைப் பன்மா, வங்கம் மலிகலிநீர் தில்லை வானவன் நேர் வருமே 85

(2) வேய் தந்த வெண்முத்தம் சிந்து பைங்கார் வரை மீன் பரப்பிச் சேய்தந்த வானகம் மானும் சிலம்ப 130

(3) சிற்றம்பல வற்றெழாது தொல்சீர் கற்றும் அறியலரின்... இடை நைவது 134

(4) அம்பலவருக்கு அன்பர் குலம் நிலத்துக் கருப்பற்று விட்டெனக் கொய்து அற்றது இன்று இக்கடிப் புனமே... 143

(5) மதுவினில் கைப்பு வைத்தால் ஒத்தவாம் மற்று இவ்வான் புனமே 146

(6) வான் உந்து மாமதி வேண்டி அழும் மழப்போலு மன்னே நானும் தளர்ந்தனன் நீயும் தளர்ந்தனை நல் நெஞ்சமே 147

(7) சிற்றம்பலம் ஆதரியாக் கூழின் மலிமனம் போன்று இருளார் நின்ற கோகிலமே 322

பரங் ...வியூர் அரன் மிடற்றின் மாண்பது என்றே எ(ண்)ண
வானின் மலரும் எழில் வாய்த்த பனிமுகில் 323

5. அணி

(1) நீங்கிற் புணர்வு அரிதென்றே நெடிது இங்ஙனே இருந்தால்
ஆங்கு இற்பழியாம் எனவோ அறியேன் அயர்கின்றதே 13

(2) பொன் அணி ஈட்டிய ஓட்டரும் நெஞ்சம் இப்பொங்கு
வெங்கானின் நனி நிற்குமிது என் என்பதே அன்னந்
நடையாள் மின்னனணி நுண்ணிடைக்கோ பொருட்கோ,
நீ விரைகின்றதே 342

6. ஓட்டணி

தில்லை அன்னாய் என் அங்கு அலமரல் எய்தியதோ எழில்
முத்தம் தொத்திப் பொன்னங்கலர் புன்னைச் சேக்கையின்
வாய்ப் புலம்புற்று முற்றும் அன்னம் புலரும் அளவும்
துயிலாது அழுங்கினவே 172

(இது அல்ல குறிப்பட்டமை தலைமகற் குணர்த்துதல்). ஓட்டணி
என்பது அடையும் பொருளும் அயல்பட (வேறுபட)
மொழிவது - தண்டியலங்காரம் பொருளணி. சூ. 53

7. சிலேடை அணி, வகை

காம்பிணையால் 38
சங்கந் தரும் முத்து 85
மாதிடம் 138
கருங்கழி காதல் 190
புய லோங்கு 327
வானக் கடிமதில் 335
கயல் வந்த 381

மேற்படி பாடல்களில் சிலேடை நயம் குறிக்கப் பட்டுள்ளன; அவை
தமை அப்பாடல்களின் உரைக்குறிப்பில் காணலாகும்.

குறிப்பு :—

38 1. காம்பு - வேய், தோள்,
2. மயில் - பறவை, மயில் போன்ற சாயல்

---

* "யாம் அது தெரிதல் தேற்றும்... இன்னகைச் சனகி என்னும்,
காமரு திருவை நீத்தோ, முகமதி காண்கி லாதோ,
தேமரு தெரியல் வீரன் கண்ணெனத் தெரிந்து செய்ய
தாமரை கங்குற் போதும் குவியிலாத் தன்மை என்னே."
—கம்ப - அயோ முகி......

3. மணி- நீலமணி, கூந்தல்
4. பிணை - மான், மான் போல் நோக்கம்
5. வல்லி - கொடி, இடை

85 சங்கந் தரும் முத்து :—
1. (A) சங்கு தரும் முத்துக்கள்
(B) திருவடிக் கண் உண்டாகிய பற்றுத் தரும் முத்து.
2. பாறு - பருந்து, படகு

138 1. பொன்னை ஒத்த மலர்களைச் சிதறித் தன்னுடைய தேன்னது இடமெல்லாம் சொரிய நின்று சோதிடத்தைச் சொல்லிற்று.
2. பொன்னையும் பிறர்க்குக் கொடுத்துத் தன் வாயாலே கள் பேசி நின்று இன்னுளைக் கெடுக்கலா மென்று அறிவு சொல்லி

190 கண்ணீர் வார்ந்து கை கூப்புதல் - அலருதலும் கள்ளாகிய நீர் வருதலும் சிலேடை வகையாற் கொள்ளப்படும்.

327 (1) ஓர் ஆணை ஒலை அரையன் பொறியாகிய கயலையும் வில்லையும் உடைத்தாய் மன்னன் முனிவையும் காட்டி வாரா நின்றது.
(2) திருவை உடைய ஒரு முகம் கயல் போலுங் கண்ணையும் மிகப் பெரிய வில் போலும் புருவத்தையும் உடைத்தாய், இந்திர கோபம் போலும் வாயையும் காட்டி வாரா நின்றது.

335 'கடம் செல்வர் காதலர் என்னக் கதிர் முலைகள், கனகந் தரும், மலர்க் கண்கள் முத்தம் வளர்க்கும்' மன்னன் என்னே இனிச் சென்று தேர் பொருளே (கனகம் - பொன், தேமல், பொன் நிறம். முத்தம் - முத்து, கண்ணீர்த் துளி.)

குறிப்பு இங்கேயே தலைவனுடைய பிரிவை நினைத்தவுடன் தலைவியின் கொங்கையே கனகத்தைத் தருதலானும், கண்களே முத்துத் தருதலானும் தலைவன் பொருள் தேடத் தலைவியை விட்டுப் பிரிய அவசியமில்லை.

381 மாமதியின் அயல் வந்த ஆட்ரவு ஆட வைத்தோன் தலைமகனையும் தலைமகளையும் மதிக்கும் அரவுக்கும் ஒப்பச் சிலேடை.

8. பரந்தூர்ந் வருநிலே

ஈந் தொழ எழில் அம்பலம் நண்ணி நடம் நவில்வோன்,
நாகம் இது மதியே மதியே நவில் வேற்கை எங்கள்
நாகம் வர எதிர்நாம் கொள்ளும் நள்ளிருள் வாய்நறவார்
நாகம்மலி பொழில் வாய் எழில் வாய்த்த நின் நாயகமே 171

9. தற்குறிப்பேற்ற அணி

1. அம்பலத்து அரன் குன்று என்று வட்கி வெய்யோன் தான்
நுழையா இருளாய் எழில் காட்டும் ஓர் கார்ப் பொழிலே 116

2. திகழ் பளிங்கால் மதியோன் கான் உழை வாழ்வு பெற்றுங்கு
எழில் காட்டும் ஓர் கார்ப் பொழிலே 116

3. நரல்வேய் இனம் நின்தோட் குடைந்து உக்க நன்முத்தம் சிந்தி...119

4. தேர்வழி தூரல் கண்டாய் புள்ளுந் திரையும் பொரச் சங்கம்
ஆர்க்கும் பொருகடலே...... 185

(இது அல் பொருள் தற்குறிப்பேற்றம்)

5. விசும்பு இயங்கி நைகின்ற திங்கள் எய்ப்பாறும் பொழில் அவை 223

10. மயக்க அணி

முழவம் துளிதரல் காரென ஆர்த்தன, ஆர்ப்பத் தொக்கு
உன் குழல் போன்று அளிதரக் காந்தளும் பாந்தளைப்
பாரித்து அலர்ந்தனவே 324

11. முரண் அணி

A. சொல் முரண்

1. கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுகம்... 15
2. செந்நிற மேனி வெண்ணீறு அணிவோன் 69
3. செவ்வாய்க் கருங்கண் 169
4. மென் மொழி வன் மனப் பேதை...... 230
5. சிறு கண் பெருங்கை : மா 313
6. நீள் கோட்டுக் குழை செவி : மா 313
7. கருங் குழல் வெண்ணகைச் செவ்வாய் 333

B. பொருள் முரண் - இல் குணம் அடுத்துவந்தது காந்தளைப் பாந்த
ளென்று எண்ணித் துண்ணென்று ஒளித்துக் கண்
புதைத்துப் பதைக்கும்எங் கார்மயிலே 233

12. வேற்றுப் பொருள் வைப்பணி

பிரிவு செய்தால் அரிதே கொள்க, பேயொடும் என்னும் பெற்றி ஒருவி செய்தாளின் இருந்து இன்று காரும் இளங்கிளியே 144

1. அலங்காரம்

எதிர் காலக் கூற்றிடத்துக் காரியத்தின்கண் வந்த இரங்கல் விலக்கு, உபாய விலக்கு

முழங்கார் அரி முரண் வாரண வேட்டை செய்மொய் இருள் வாய், வழங்கா அதரின் வழங்கென்றுமோ இன்று எம் வள்ளலையே 157

2. அலங்காரம்

கூற்றிடத்து இருபொருட்கண் வந்த உயர்ச்சி வேற்றுமை

முன்னேன் அருள் முன்னும் உன்ன வினையின் முனகர் துன்னும், இன்னைக் கடறு இது இப்பொழ்தே கடந்து இன்று காண்டும் சென்று; புலியூர்ப் புகழ்வார் தென்ன என உடையான் நடமாடு சிற்றம்பலமே 217.

3. அலங்காரம்: ஒற்றுமைக் கொளுவுதல்

தில்லை அன்னள் திறத்துத் துணியக் கருதுவது இன்றே துணி, துறைவா நிறை பொன் அணியக் கருதுகின்றார் பலர் மேல் மேல் அயலவரே 195

4. அலங்காரம்: நோக்கு

காந்தளைப் பாந்கள் என்று எண்ணித் துண்ணென்று ஒளித்துக் கண் புதைத்துப் பதைக்கும் எம் கார் மயிலே 233

(நோக்கு என்னும் அலங்காரமாய்ப் பாம்பிற்கு அஞ்சும் மயிலென இக்குணம் அடுத்து வந்தது)

5. அலங்காரம்: பரியாயம்

(1) பெருவெண் கோடார்கரி குருமாமணி ஊசலைக் கோப் பழித்துத் தோடார் மதுமலர் நாகத்தை நூக்கும் நம் சூழ் பொழிற்கே... 161

(இவ்வாறு கூறவும் வாளா கிடப்பின் தாய் துயின்றாள் ஆகிலீ குறியிடத்துச் செல்வாள் தலைவி)

(2) யாயுந் தெறுக, அயலவர் ஏசுக, ஊர் நகுக, நீயும் முனிக, நிகழ்ந்தது கூறுவல் என்னுடைய வாயும் மனமும் பிரியா இறை தில்லை வாழ்த்துநர்போல், தூயன் நிலக்குக் கடும் சூள் தருவன் சுடர்க் குழையே 289

(3) கருதியது கிளவாது அப்பொருள் தோன்றப் பிறிதொன்று உரைப்பது பரியாயம்மே (பரியாயம் - சாமர்த்தியமாக அறிவிக்கும் சொல்) தண்டியலங்காரம் சூ-72

6. அலங்காரம் : புகற் உவமை

தில்லை நின்றோன் மிடற்றின் வண்ணக் குவளை மலர்கின்றன, சினவாள், மிளிர் நின் கண் ஒக்குமேல் கண்டு காண வண்டு வாழும் கருங்குழலே... 162

7. அலங்காரம் : புகழாப் புகழ்ச்சி

முரம்பு நிரம்பிய அத்தமும் ஐய, மெய்யே தில்லைத் தண் பூம் பணையும் தடமும் அன்றே நின்னொடு ஏகின் எம் பைந்தொடிக்கே 202

(முரம்பு - கல் விரவி உயர்ந்திருக்கும் நிலம். அழல் தடம் நிழல் தடம் அவட்கு)

8. அலங்காரம் : முயற்சி விலக்கு

அம்பலத்தானைப் பழித்து மும்மைத தீயினது ஆற்றல் சிரம் கண் இழந்து திசை திசைதாம் போயின எல்லையெல்லாம் புக்கு நாடுவன் பொன்னினையே. 236

சா. திருக்கோவையார்
உரைநடைப் பகுதிச் சுருக்கம்*

தலைவனும் தலைவியும் பொழிலிடத்து எதிர்ப்பட்டுத் தெய்வம் இடைநிற்பத் தம்முள் ஒத்த அன்பினராகக் கூடுகின்றனர். அங்ஙனம் கூடின தலைவன் கலவி இன்பத்திற் களித்து, 'இவள் அமுது நான் அமுதின் சுவை' எனக் கூறி மகிழ்கின்றான். தலைவன் பிரிவான் எனக் கருதித் தலைவி வருந்தத் தலைவன், 'திருவே! தெய்வத்தின் அருள் தானே நம்மைக் கூட்டி வைத்தது, இனி வாடுதல் வேண்டாம். யான் இருக்கும் இடம் உன் ஊருக்கு அருகில் உள்ளது' என்று கூறித் தலைவியை விட்டு அகன்றான்.

அகன்ற தலைவன் தலைவியை இனி எப்படிச் சந்திப்பது? எனக் கவற்சி கொண்டு மறுமுறை தான் முன்பு தலைவியைச் சந்தித்த இடத்திற்குச் செல்லத் தலைவி அங்கு நிற்கக் கண்டு தந்த தெய்வம் மறுபடியும் உதவுகின்றது எனத் தெய்வத்தைப் போற்றித் தலைவன் தலைவியின் மருங்கு அணைந்தான்.

தலைவி ஆயத்துடன் இருப்பதால் தலைவியின் தோழியைக் கொண்டு தான் தலைவியை அடிக்கடி சந்திக்க முடியும் என அறிந்து அவர்கள் இருவரும் (தலைவியும் தோழியும்) உள்வழிச் சென்று கரந்த மொழியால் தன் கருத்தை அறிவிக்கத் தோழி அறிந்து இவனிடத்து இவள் நினைவே அன்றி இவளிடத்து இவன் நினைவும் உண்டு என அறிந்து இவர்கள் இருவரும் கூடியாயிற்று எனக் கண்டு கொண்டாள்.

தலைவியிடம் தலைவன் பகலில் வந்து கூடுதற்கும் இரவில் வந்து கூடுதற்கும் தோழி உதவியாய் நின்றவள் தலைவனிடம் நீ இவ்வாறு பகலில் வந்தால் ஊரில் பழிச் சொல்லுக்கு இடமாகும். இரவில் வந்தால் யானை சிங்கம் முதலிய விலங்குகளால் ஏதம் உண்டாகும். ஆதலின் களவு ஒழுக்கம் உதவாது, நீ அவளை மணந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினள். தலைவன் அதற்கு உடன்படாதது கண்டு, 'நீ அவளை உடன் அழைத்துச் செல்வாயாக' எனச் சொல்லி அவளைத்

---

* உரைநடை கட்டுரையிற் காணலாம்.

(தலைவியை) தலைவனிடம் ஒப்புவித்தாள். தலைவியை வீட்டில் காணாது செவிலித்தாய் 'தலைவி எங்கே?' என்று தோழியை வினவத் தோழி 'தலைவியின் அறியாப் பருவத்தில் தானும் தலைவியும் விளையாடும் போது மதயானை வந்து எதிர்த்து வர, அந்த யானையைத் தன் வேல் கொண்டு கொன்று தலைவியைக் காத்து அருளினன் ஒருவன். பின்னும் ஒருமுறை அவனே (அத்தலைவனே) தலைவி கடல் அலையில் அகப்பட்டுத் திகைக்க அவளை அந்த இடரினின்றும் காத்து அருளினன். அக் காரணத்தால் தலைவி அறத்தொடு நிற்க வேண்டித் தலைவனுடன் புறப்பட்டுப் போய் விட்டாள் என்ற விவரங்களைச் செவிலிக்குக் கூறினள். அது கேட்ட செவிலி தலைவியின் கற்பு நலத்தை வியந்தனள்.

இந்நிகழ்ச்சிகளைச் செவிலி நற்றாயிடம் சொல்ல நற்றாய் வாடி வருந்தினள். அது கண்டு செவிலி தலைவியைத் தேடப் புறப்பட்டாள். தலைவியை அங்ஙனம் தேடிச் சென்றவள் தலைவியும் தலைவனும் தலைவனது ஊரில் போய்ச் சேர்ந்திருப்பார்கள் என வழியில் வந்தவர்களால் அறிந்து திரும்பி வீடு வந்து சேர்ந்தாள். பின்னர், தலைவன் திரும்பி வந்து தோழியிடம் தான் கள்ள ஒழுக்கத்தையே விரும்புவதாகக் கூறத் தோழி மறுத்துப் பல நீதிமொழிகளைக் கூறி மணத்திற்குத் தலைவனை உடம்படும்படி செய்வித்தாள். திருமணம் நிறைவேறிற்று.

திருமணம் ஆனவுடன் தலைவன் ஓதுதற் பொருட்டும், காவற் பொருட்டும் பொருள் தேடும்பொருட்டும், இரு வேந்தற்கு உற்ற பகை தணிவித்தற் பொருட்டும், வேந்தற்கு உதவும் பொருட்டும் பிரிந்து செல்கின்றான். அவ்வமயங்களில் தலைவி பிரிவு ஆற்றாது வருந்தினள். பிரிந்த தலைவன் வேலைகளை முடித்துக் கொண்டு தலைவியிடம் வந்து சேர்ந்தான். சேர்ந்த தலைவன் பின்னர்ப் பரத்தை மாட்டுப் பிரிகின்றான். அதுகண்டு தலைவி வருந்துகின்றாள் தலைவன் வீடு திரும்பத் தலைவி அவன் வரவை மறுக்கின்றாள். அவர்கட்குப் பிறந்த மகனைத் தலைவன் அணைத்து எடுக்க அம்மகன் மூலமாய்த் தலைவியின் சினம் ஆறுகின்றது. அத்தகைய தலைவன் மேகத்திற்கும் கற்பகத்திற்கும் ஒப்பாவான். அவன் கற்றவர்க்கு நற்றுணை. பாணர்க்கு (இசை உணர்வாருக்கு) சுற்றம் ஆவான். சிந்தாமணி போல்வான். சிவன் திருவடிக்குக் கொன்றைப் பூ ஆவான். தக்கோர்க்குச் சங்கநிதி; நட்டார்க்கும், தப்பாது பயன் கொடுத்தலின் விதி ஆவான். உற்றவர்க்கு ஊருணி போல்வான்; யாவர்க்கும் ஊதியம் ஆவான். (வரைவின்றி எல்லார்க்கும் இவன் பெறும் பயன் ஆவான்.) ஊதியம் ஆகலின் அன்பால் அன்றி அருளால் பரத்தையர்க்கும் தலையளி செய்தான் என்பது.

எ. பேரின்பப் பகுதி

தில்லைப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது திருக்கோவையாராதலின், பேரின்பப் பொருள் இந்நூலிற் புதைந்துள்ளது. தலைவி சிவமாகவும் (பரமாத்மா ஆகவும்) தலைவன் உயிராகவும் (ஜீவாத்மா ஆகவும்) தோழி திரு அருளாகவும் கொள்ளப் பெறும். இவ்வுண்மை அறிந்த பெரியோர்கள் இந்நூலை ஒரு ஞானநூல் என்பர். இதனால் அன்றோ 'பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன் ஐந்திணை உறுப்பில் நாற்பொருள் பயக்கும்' 'காமஞ் சான்ற ஞானப் பனுவல்' எனக் குமர குருபர சுவாமிகள் சிதம்பர மும்மணிக் கோவையில் இந்நூலைப் புகழ்ந்துள்ளார். இந்நூலில் உள்ள 400 பாடல்களிற் பல இடங்களில் தெளிவாகவும், சில இடங்களில் மறை பொருளாகவும், பேரின்பப் பொருளைக் காணலாம்.

உதாரணமாகச் சில பாடல்களை இங்கு எடுத்துக் காட்டுவாம்.

பாட்டு எண்	சிற்றின்பம்	பேரின்பம்
1.	தலைவியைத் தலைவன் கண்ணுற்றது.	குருவின் திருமேனி காண்டல்.
5.	தலைவியின் உள்ளக் கருத்தைத் தலைவன் அறிந்தது.	தன்னிடத்தில் சிவத்திற்குக் கருணை யுண்டென்று உயிர் (ஜீவாத்மா) அறிந்தது.
8.	தலைவன் புணர்ச்சி இன்பத்தின் இயல்பு கூறியது.	பெற்ற இன்பத்தை வியந்தது.
10.	தலைவியின் மென்மொழி கேட்கத் தலைவன் விருப்புற்றது.	குருமொழி வேண்டிக் குறை யிரந்துரைத்தது.
18.	காதல் தோழியை மடவரல் (தலைவி) காட்ட மன்னன் (தலைவன்) அறிந்தது.	சிவம் அறிவிக்கத் திருவருளைக் கண்டது.
41.	(தலைவியின்) மொழி பெறுமல் தலைவன் வாடி உரைத்தது.	திருவாய் மலராவிடின் (உயிர்) உய்யேன் என்றது.

81. தன்னோடு தலைவியின் வேற்றுமை இன்மையைத் தோழி தலைவனிடம் கூறி அவனது குறையை நீக்குவேன் என்றது.	தன் வழிச் சிவமே யிருத்தலால் (உயிரின்) குறையைக் கூறிச் சிவத்துடன் கூட்டுவேன் என்று திரு அருள் உயிர் இடம் கூறியது.
|	
115. தலைவன் தந்த தழையைத் தலைவி விருப்புடன் ஏற்றனள் என்று தோழி தலைவனுக்கு உரைத்தது.	தலைவன் பணி சிவத்துக் குவப்பென உயிருக்குத் திரு அருள் உணர்த்தியது.

இவ்வாறு புதைபொருளாகப் பேரின்பப் பொருள் 400 பாடல்களிலும் இருப்பதைத் 'திருக்கோவையார் உண்மை விளக்கம்' என்னும் நூலிற் காணலாம்.

தலைவியைக் கடல் அலை அடித்துக் கொண்டு போன போதும், மத யானை தலைவியை விரட்டி வந்த போதும், சுனைநீரில் வீழ்ந்து தலைவி தத்தளித்த போதும் தலைவன் தலைவியை அந்தந்த ஆபத்தினின்றும் மீட்டனன் என்பது உயிர் (ஜீவாத்மா) (தலைவியை) சிவத்தை மீட்டது எப்படி என்றால் சிவத்தை அடிக்கடி மறந்து போன நிலையில் நின்றும் ஜீவாத்மா (தலைவன்) சிவத்தை மீட்டு நினைவிற்கு கொண்டு வருவதைக் குறிக்கும் போலும். இத்தகைய விளக்கம் எல்லாம் அறிஞர்பால் கேட்டு உணரலாகும்.

அ. மணிவாசகர் வரலாற்று நினைவுப் பகுதி

பாட்டின் எண்

5. அணியும் அமிழ்து மென் ஆவியும் ஆயவன் தில்லைச்சிந்தா மணி.

7. என்னைமுன் ஆள் ஊழுடையான் புலியூர்.

17. தன்பூங்கழலின், துணர்ப் போதெனக் கணியாக்குந் தொல்லோன்.

20. தில்லைச் சிற்றம்பலத்தும் என்சிந்தையுள்ளும் உறைவான்.

22. உளமாம் வகை நம்மை உய்ய வந்து - ஆண்டு.

32. யான் தொடர்ந்து விடா அடிச்சந்த மாமலர் அண்ணல்.

67. மறந்தும் மற்றப் பொய்வான வரிற்புகாது தன்பொற் கழற்கே யடியேன் உய்வான் புகவொளிர் தில்லை நின்றோன்.

73. பொருளா எனைப் புகுந்தாண்டு புரந்தரன் மாலயன்பால் இருளாயிருக்கு மொளி நின்ற சிற்றம்பலம்

76. என் பிறவி கெட்டு, இன்று அழிகின்றது ஆக்கிய தாள் அம்பலவன்.

78. அடிச்சந்தம் மால் கண்டிலாதன காட்டி வந்து ஆண்டு கொண்டு என்முடிச் சந்தமாமலராக்கு முன்னோன்.

79. என்தொல் பிறவி ஏழும் எழுதா வகை சிதைத்தோன் புலியூர்.

114. தெவ்வரை மெய்யெரிகாய் சிலையாண் டென்னை யாண்டு கொண்ட செவ்வரை மேனியன் சிற்றம்பலம்.

115. பாசத் தளையறுத் தாண்டு கொண்டோன் தில்லை அம்பலம்.

122. தன் நறவுண் களிநீயெனச் செய்தவன்.

124. இப்பிறப்பில் அழுந்தா வகையென்னை ஆண்டவன் சிற்றம்பலம்.

126. மிக என் சிரத்தின் உறுகால் பிறர்க் கரியோன் புலியூர்.

129. என் பிறப்புக் கெடத் தில்லை நின்றோன்.

130. தன் சேவடிக்கே ஆய்தந்த அன்பு தந்தாட் கொண்ட அம்பலவன்

140. நினைவித்துத் தன்னையென் நெஞ்சத்திருந் தம்பலத்து நின்று புனைவித்த ஈசன்.

144. பரிவு செய்தாண்டம்பலத்துப் பயில்வோன்.

146. பொதுவினிற்றீர்த் தென்னையாண்டோன்.

151. புலியூரரன் அம்பலத்தாடி குரை கழற்கீழ்த் தூளி நிரைத்த சுடர் முடியோய்

166. அழுந்தேன் நரகத்து யானென் றிருப்பவந் தாண்டு கொண்ட செழுந்தேன்.

185. உள்ளம் உருகி உரோமஞ் சிலிர்ப்ப உடையவன் ஆட்கொள்ளும் அவரில் ஓர் கூட்டந் தந்தான் குனிக்கும் புலியூர்

214. எம்மைப் பிடித்து இன்று ஆண்டு எல்லை தீர் இன்பம் தந்தவன் சிற்றம்பலம்.

224. என் நெஞ்சகத்தே பயிலெனப் பேர்ந்தறியாதவன் தில்லை.

232. பிறவி பெருமற் செய்தோன்.

261. என்னைத் தன் தொழும்பில் கழியா அருள், வைத்த சிற்றம்பலவன்.

277. என்னைத் தன் மொய் கழற்காள் செய்யென்பதே செய்தவன் தில்லை.

279. சுரந்த தன் பேரருளால் தொழும்பிற் பரிந்தென்னை ஆண்ட சிற்றம்பலத்தான்.

286 தில்லை நின்ற மேலன் புகுந்து என் கண் நின்றான் இருந்த வெண்காடு.

289. என்னுடைய வாயும் மனமும் பிரியா இறைதில்லை.

293. மனக்களியாய் இன்று யான் மகிழ் தூங்கத் தன் வார்கழல்கள் எனக் களியா நிற்கும் அம்பலத்தோன்.

298. என் கடைக் கண்ணினும் யான் பிறவேத்தா வகையிரங்கித் தன் கடைக் கண் வைத்த தண் தில்லைச் சங்கரன்.

300. இருந்துதி யென் வயின்கொண்டவன் யானெப் பொழுது முன்னு மருந்து.

338. தென்மாத் திசை வசை தீர்தரத் தில்லைச் சிற்றம்பலத்துள், என்மாத் தலைக்கழல்வைத் தெரியாடும் இறை.

343. நாய் வயினுள்ள குணமுமில்லேனை நல்தொண்டு கொண்ட தீவயின் மேனியன் சிற்றம்பலம்.

346. சுற்றம்பலமின்மை காட்டித் தன்தொல் கழல் தந்த தொல்லோன் சிற்றம்பலம்.

394. திருந்தேன் உ(ய்)ய நின்ற சிற்றம்பலவர்.

மேற் குறித்தவற்றுள் தலைவன், தலைவி கூறியவை.

1. தலைவன் கூறியவை 5, 7, 17, 73, 76, 122, 124, 129, 146, 166, 343, 346, 394 எண்ணுள்ள பாடப் பகுதிகள்.
2. தலைவி கூறியவை 185, 289 என்னும் எண்ணுள்ளன.
3. தோழி கூறியவை 67, 78, 79, 114, 115, 126, 130, 140, 144, 151, 214, 261, 277, 279, 293, 298, 300, 338 என்னும் எண்ணுள்ளவை.
4. பாங்கன் கூறியவை 20, 22, 32 என்னும் எண்ணுள்ளன.
5. செவிலி கூறியவை 224 என்னும் எண்ணுள்ளது.
6. நற்றாய் கூறியவை 232, 286 என்னும் எண்ணுள்ளன.

இவற்றினின்றும் யார் கூறிய கூற்றாயினும் மணிவாசகருக்குத் தில்லைப் பெருமானிடத்தில் உள்ள பக்தி நிலை நன்கு புலப்படுகின்றது, தலைவன் தலைவி, தோழி, பாங்கன் செவிலி, நற்றாய் இவர்கள் ஒவ்வொருவர் வாய்க் கூற்றிலும் தமக்கு உள்ள பக்தி புலப் படும்படி பாடியுள்ளது படிப்போர் மனதை மிகவும் நெகிழ் விக்கும் தன்மையாய் உள்ளது.

1. இறைவன் தன்னைக் கோவை பாடும்படி செய்வித்தது.

1. *நினைவித்துத் தன்னை......ஈசன்* 140

எண் பாடப் பகுதியில் நின்றும் ஊகிக்கக் கிடக்கின்றது.

2. திருவாசகம் திருக்கோவையார் என்னும் நூல்களில் துதிபாடும்படி இறைவர் செய்வித்தது.

'இருந்துதி என்வயின் கொண்டவன்' என்னும் 300 என்ற எண்ணுள்ள பாடற்பகுதியிற் பெறலாகும். பக்கம் 146, 149 பார்க்க.

3. பெருமான் தம் திருவடியை மணிவாசகருடைய சென்னியிற் சூட்டியது.

(சென்னிப் பத்து) 17, 32, 76, 78, 126, 293, 338 என வரும் எண்ணுள்ள பாடற் பகுதிகளாற் பெறப்படும்

4. தம் சுற்றத்தாரால் தாம் ஒருபலனும் அடையாமை
346 ஆம் எண்ணுள்ள பாடற் பகுதியாற் பெறப்படும்.

5. தம்மைத் தமது அடியார் கூட்டத்துடன் இறைவர் சேர்ப்பித்தது 185 எண்ணுள்ள பாடற் பகுதியாற் பெறப்படும்.

6. சிவபெருமானைத் தவிர வேறு தெய்வத்தை மறந்தும் தாம் நினைப்பதில்லை என்பதும் பிற தெய்வத்தைத் தாம் கடைக் கண்ணாலும் ஏத்துவதில்லை என்பதும் 67, 298 இதிலுள்ள பகுதிகள் நின்றும் கருதக் கிடைக்கின்றன.

7. தன்னைக் 'கடவுட் பித்த'ளாக்கினார் பெருமான் என்பது 122 ஆம் பாடலிலிருந்தும் விளங்கும், தமக்குத் திருநீற்றிலுள்ள பக்தியின் அளவு: 151 ஆம் பாடலினின்றும்; இன்னும் இவை விரிக்கிற் பெருகும்.

குறிப்பு: "திருக்கோவையார் பழைய உரையில் 279 ஆம் பாடலின் கீழ்ப் பின்வரும் குறிப்பு உள்ளது."

'தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது மாணாக்கர்க்குச் சுரந்த பெரிய அருளைப் பொறுக்க மாட்டாமையினாலே தானும் வாய்மை மறுத்து என்னை அடிமை கொண்ட திருச்சிற்றம்பலநாதன்."

ஒளிநெறி பிற்சேர்க்கை

பிற்சேர்க்கை க.

திருக்கோவையார் பாடிய வரலாறு

திருவாதவூர் அடிகள் புராணம்

சைவஞான வாசகம் புகல வந்தார்

சீற்றமில் புலியும் பாம்புஞ் சீர்பெற வணங்கு மன்றில்
ஏற்றினன் புலியூர் மேலைச் சிவபதமென்று கண்டார். 513

ஐயரங் குன்றயு நாளி லாடக மன்றி லாடும்
மெய்யர்தங் கருணை யாலோர் வேதியர் வடிவங் கொண்டு
துய்யமுப் புரிநூன் மார்புந் துலங்குபுத் தகமுந் தோன்றச்
செய்யமென் பாத நோவச் சென்றுமுன் னாக நின்றார். 514

முன்புற நின்ற வேத முதல்வரை முகத்தி னோக்கி
இன்புற வாச வூர ரிருமென இருந்த பின்னர்க்
கொன்புனை மறையின் மிக்கீ ரெங்குளீர் கூறு மென்ன.
மன்பெரு வளஞ்சேர் பாண்டி மண்டலத் திருப்பே னென்றார். 515

பாண்டிநா டென்ற பின்னர்ப் பரிவுடன் செறிவு கூறி
ஈண்டுநீர் வருதல் வேண்டுங் காரணம் இயம்பும் என்ன
ஆண்டநா யகன்ற னாணை யாகிய கரும நும்மைக்
காண்டலே யென்று பின்னுங் கருத்துற விதனைச் சொன்னார். 516

ஆதியை மன்று ளாடும் ஐயனை யன்பி னாலே
ஓதிய தமிழின் பாட லுள்ளவை யோதீ ரெண்ணி
மாதுய ரகல வின்னே வந்தன னெழுதல் வேண்டும்
வேதியர் பெருமா னின்று விளம்பிடும் விளங்க என்றார். 519

விண்ணகம் பரவு நாத னிவ்வகை விளம்பச் சிந்தை
நண்ணுமன் புடைய ராகி நற்சடை முடியார் தம்மை
எண்ணருந் தமிழின் பாடல் இயம்பிய வைய ரப்போ
துண்ணெகிழ்ந் துளமெய்ஞ் ஞான வாசகம் உவந்து சொன்னார். 520

அங்கவ ருரைத்த தெல்லா மம்பலத் தாடு மையர்
செங்கையி லேடு வாங்கித் தெளிவுற வரைந்த பின்னர்ப்
பொங்கிய வருளி னாலும் புகன்றிட ரகலத் தையல்
பங்கினர் தம்மைக் கோவை பாடுநல் வேண்டும் என்றார். 521

மன்னிய தவத்தின் மிக்கா ரதற்குள மகிழ்ந்து கூற
முன்னுற விருந்து கோவை யெழுதினர் முடிந்த பின்னர்ப்
பொன்னவிர் வேணி யார்தாம் புத்தகஞ் சேமித் தங்கண்
மின்னென மறைந்தார் சொன்ன வித்தக ரயர்ச்சி கொண்டார். 522

எழுந்தன ரெங்கு மோடி நாடின ரிதென்கொ லென்னு
அழிந்தனர் மன்று ளாடு மாதியென் றறிந்த பின்னர்ப்
பொழிந்தனர் கண்ணீர் எங்கே போயினை யென்று மண்மேல்
விழுந்தவர் பரமா னந்த வேலைவெள் ளத்து ளானார். 523

மெய்த்தவ வாத வூரன் விளம்பிட வெழுது மிந்தப்
புத்தக மன்று ளாடல் புரிந்தவ னெழுத்தா மென்று
முத்தியை யுதவுங் கோவை முடிவிடத் தெழுதிப் பின்னர்ச்
சித்திர மலர்க்கை யாலே திருந்தமைக் காப்புஞ் செய்தார். 525

வெண்பிறை முடித்த வேணி வித்தக ருலகுக் கெல்லாம்
நண்புடை வாத வூரர் நற்றவ முணர்த்த வெண்ணி
எண்பெறு முனிவர் விண்ணோ ரிறைஞ்சுமம் பலத்து வாயில்
வண்படி மீதே யுண்மை வாசக முறையை வைத்தார். 526

வைத்தபின் பூசை செய்யு மந்தணன் வந்து கண்டிப்
புத்தக மிங்கு நண்ணும் புதுமைதை விகமா மென்று
சித்தமங் குருகி நின்று தில்லையுள் ளார்கட் கெல்லாம்
இத்திறங் கூறல் வேண்டு மென்றுமன் றகன்று போந்து. 527

செந்திரு மருவுந் தொல்லைத் தில்லைநன் னகரி லுள்ளார்
தந்திரு முன்பு சென்று சாற்றின னிந்த நீர்மை
அந்தணன் மொழிந்த பின்ன ரதிசய மிதுவென் றோடி
வந்தவர் படிமே லண்ணல் வைத்தபுத் தகங்கண் டார்கள். 528

யாவருந் தம்மு னோடி யெம்மிறை யுறையு மன்றுள்
தேவரும் புகுத லொண்ணாத் தெய்விக மிதுவெ னறெண்ணி
மேவுமன் பதனா லண்ணல் விளம்பிய சைவ நூலோ
தாவுசெந் தமிழோ வென்று பார்ப்பது தக்க தென்றார். 529

தேக்கிய வருளு மன்புஞ் சிறந்தவ ரெல்லாஞ் சொல்லும்
வாக்கினி லொருவன் சென்று மலர்கொடு வணக்கஞ் செய்து
பூக்கமழ் சடையோன் வைத்த புத்தகந் தன்னைச் சேமம்
நீக்கின னேதி னான்முன் னீதிகொ ளகவ னான்கும். 530

திருச்சதக முதலாகச் சிறந்ததமி ழறுநூறும்
விரித்தவகப் பொருட் கோவை விளங்கவொரு நானூறும்
உரைத்தனல்பின் முடிந்தவிடத் துயர்வாத வூரன்மொழி
தரித்தெழுது மம்பலவ னெழுத்தென்று சாற்றினன். 531

கேட்டவர்க ளெல்லோரும் கிளர்புளகங் குறுவேர்வு
காட்டிடவொண் கண்ணீருங் கசிந்துருகு சிந்தையுமாய்
ஈட்டியமெய்த் தவமுடையோ னியம்பியவித் தமிழன்றி
வீட்டுநெறிக் கினிச்சிவநூல் வேறுளதோ வென்றார்கள். 532

பிற்சேர்க்கை உ.

திருக்கோவையாரின் சிறப்பு முதலியவற்றைக் குறிக்கும் ஆன்றோர் பாடல்களும், புராணப் பாடல்களும்

விநாயக வணக்கம்

எண்ணிறைந்த தில்லை எழுகோ புரந்திகழக்
கண்ணிறைந்து நின்றருளுங் கற்பகமே—நண்ணியசீர்த்
தேனூறு செஞ்சொல் திருக்கோவை என்கின்ற
நானூறும் என்மனத்தே நல்கு.

நூற்சிறப்பு

ஆரணங் காணென்பர் அந்தணர்
　யோகியர் ஆகமத்தின்
காரணங் காணென்பர்; காமுகர்
　காமநன் னூலதென்பர்
ஏரணங் காணென்பர் எண்ணர்
　எழுத்தென்பர் இன்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக்
　கோவையைச் செப்பிடினே.

சிறப்பு

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

மாணிக்க வாசகர் பாடலின் சிறப்பு

பெருகும் வையை தனையழைப் பிக்குமே
பிரப்ப டிக்குப் பிரான்மேனி கன்றுமே
நரியெ லாம்பரி யாக நடத்துமே
நாடி மூகை தனைப்பேசு விக்குமே
பரிவிற் பிட்டுக்கு மண்சுமப் பிக்குமே
பரமன் ஏடெழு தக்கோவை பாடுமே
வருகும் புத்தரை வாதினில் வெல்லுமே
வாத வூரர் வழங்கிய பாடலே.

அபியுத்தர்

உருவாருந் தமிழ்ச்சங்கத் தடம்பொய்கைத் தோன்றி
உயர்ந்தோங்கு மெய்ஞ்ஞான ஒளியையுடைத் தாகி
மருவாருங் கிளவியிதழ் நானூ றாகி
மதுப்பொருள்வாய் மதிப்புலவர் வண்டாய் உண்ணத்
தருவாரும் புலியூரின் உலகுய்யக் குனிப்போன்
தடங்கருணை யெனும்இரவி தன்கதிரால் அலருந்
திருவாத வூராளி திருச்சிற்றம் பலவன்
திருவடித்தா மரைச்சாத்துந் திருவளர்தா மரையே.

கோயிற்றிருப் பண்ணியர் விருத்தம்

(நம்பியாண்டார் நம்பி)

வருவா சகத்தினின் முற்றுணர்ந் தோனைவண் தில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண் டேயுமற் றப்பொருளைத்
தெருளாத வுள்ளத் தவர்கவி பாடிச் சிரிப்பிப்பரே.

உபதேச காண்டம் (ஞான வரோதயர்)

வாதவூர் அவதரித்துத் தென்னவன் மந்திரியாய்
வாசிகொளப் பெருந்துறையில் வந்துகுருந் தடியில்
நாதனருள் பெற்றுநிகே தனம்பொன்னால் எடுத்து
நரிகள்பரி யாக்கிவைகை நதி அழைத்துத் தென்னன்
ஆதரவின் அனுப்பவுயர் குருந்தடியில் எந்தை
யாதிதமக்(கு) அருளியபொன் அம்பலத்து செயித்து
மாதவன்சொற் படிகோவை உரைத்தமல னுடன்சேர்
மாணிக்க வாசகர்பொன் மலர்ப்பதம்போற் றிசைப்பாம்.

பிரமோத்தர காண்டம்

சீத வார்பொழில் தில்லைப் பரமனுக்(கு)
ஓது நற்றமிழ்க் கோவை உரைசெய்த
நாதன் மாணிக்க வாசகன் நாண்மலர்ப்
பாத பங்கயம் ஏத்திப் பரவுவாம்.

குமரகுருபர சுவாமிகள் சிதம்பர மும்மணிக்கோவை - 23

ஒருவன் காணு தொளித்திருந் தோயை
வனசப் புத்தேள் மணிநாப் பந்திக்
கவனவாம் புரவியிற் காட்டிக் கொடுத்துப்
பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்
ஐந்திணை யுறுப்பில் நாற்பொருள் பயக்கும்
காமஞ் சான்ற ஞானப் பனுவற்குப்
பொருளெனச் சுட்டிய ஒரு பெருஞ் செல்வ. 23

திருவெங்கை உலா

பூவை விளையாடும் போதில் ஒரு மூவர்
பாவை விழையும் பழமலையான்—கோவை
யெழுதும் திருக்கரத்தான், எய்யாமல் வேத
முழுதும் புகழு முதல்வன். 281, 284

திருவெங்கைக் கோவை

(பாங்கி தலைவியின் அவயவத்து அருமை சாற்றல்)

மந்தா கினிஅணி வேணிப்பிரான் வெங்கை மன்னவ நீ
கொந்தார் குழல்மணி மேகலை நூல்நுட்பம் கொள்வதெங்ஙன்
சிந்தா மணியும் திருக்கோ வையும்எழு திக்கொளினும்
நந்தா உரையை எழுதல் எவ்வாறு நவின்றருளே. 107

சிவஞான பாலைய தேசிகர் பிள்ளைத்தமிழ்

அருந்தமிழ்நா டொருகோடி தவஞ்செயவந்து அதிர்வெள்
அருவிதூங்(கு) உயர்மயிலை வரையின்மர் விளக்கைப்
பரந்துபடு மிகுபாச ஞானமொடு மற்றைப்
பசுஞானங் கடந்தசிவ ஞானியைக்காத் தளிக்க
விரிந்தமறை யொருநான்கு மெழுதுகில மெனவோர்
வீறுடைப்பொற் கொன்றைபுனை விரிசடையோன் எழுதத்
திருந்துதமிழ்க் கோவையொரு நானூறும் உரைத்த
திருவாத வூரனெனுஞ் செழுமலர்க்கற் பகமே.

நால்வர் நான்மணிமாலை

(சிவப்பிரகாச சுவாமிகள்)

நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ !
புனநின் றுருக்கு மதுர வாசக !
கலங்குறு புலனெறி விலங்குறு வீர !
திங்கள் வார்சடைத் தெய்வ நாயகன்
ஒருகலை யேனும் உணரான் அஃதான்று
கைகளோ முறிபடுங் கைகள் காணில்
கண்களோ ஒன்று காலையிற் காணும்
மாலையில் ஒன்று வயங்கித் தோன்றும்
பழிப்பின் ஒன்று விழிப்பின் எரியும்
ஆயினுந் தன்னை நீ புகழ்ந்து ரைத்த
பழுதில் செய்யுள் எழுதினன் அதனால்
புகழ்ச்சி விருப்பன் போலும்
இகழ்ச்சி அறியா என்பணி வானே. 24

இலக்கணக் கொத்துரை ஈசான தேசிகர் (சுவாமிநாத தேசிகர்) அருளியது

பல்காற் பழகினுந் தெரியா வுளவேல்
தொல்காப் பியம்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினு முழங்கும் ஆண்டினும் இலையேல்
வடமொழி வெளிபெற வழங்கும் என்க.

(திருவைக் கோவைக்குங் கூட்டுக)

கம்பர் அந்தாதி 88. (சிவஞான சுவாமிகள்)

திருக்கோவை யாரணனைப் படைத்தே கம்பத்தே மகிழ்வோய்
திருக்கோவை யாருளத் தோரன்பர் கூறிடச் சிற்றம்பலத்
திருக்கோவையார் கரத் தால்வரைந் தாண்டசெல் வா! வருள்கூ
திருக்கோவை யார்படை வேட்கோ. இன்றுற்றுமென் சேல் விழியே.

(நற்றுயிரங்கல்)

திருக்கோவை - இலக்குமிக்கு நாயகனான திருமாலை, ஆரணனை பிரமாவை, படைத்து - தோற்றுவித்து, ஏகம்பத்தே - திரு ஏகம்பத்தில், மகிழ்வோய் - களி கூர்ந்து வாழ்பவரே! உளத்து - மனத்தின் கண்ணே, திருக்கு - குற்றம், ஒவையார் - சிறிதும் பற்றாதாரும், ஒப்பற்ற அடியாரு மாகிய ஓர் அன்பர் - மாணிக்க வாசகர், கூறிட - சொல்ல, சிற்றம்பலத் திருக்கோவையார் - திருச்சிற்றம்பலக் கோவையார் (என்னும் நூலை

திருக்கரத்தினுல் எழுதி, ஆண்ட - அடிமை கொண்டருளிய, செல்வா - சீரியரே! கூதிருக்கோ - குளிர் காற்றுக்கா (அன்றி) வை ஆர் படை - கூர்மை பொருந்திய பாணங்களை உடைய, வேட்கோ - மன்மதனுக்கா, இன்று - இப்பொழுது, எனது, - சேல்விழி - மீன் போலும் நோக்கினை உடைய தலைமகள். ஆற்றும் - சகிப்பள், அருள் - கருணை செய்து அருளுக.

தாண்டவராய சுவாமிகள் இயற்றிய
சிறப்புப் பாயிரம்

மாறனும் புலவரு மயங்குறு காலை
இறையனார் அகப்பொருள் எனப்படும் பனுவலை
முறைமையின் மொழிந்த முதிர்திரு வாக்கால்
ஐந்திணைக் கோவை அலங்கரித்(து) உரையெனச்
சுந்தரத் தாண்டவத் தோன்றலார் பணிப்பக்
கருணையை உன்னிக் கணக்கில்பே ரின்பப்
பொருள்நயம் தழுவிப் புனிதநல் வாக்கால்
திருக்கோவை யுள்ளிடுந் தேவரும் பரவத்
திருக்கோவை யாரினைச் செப்பினர் அஃதை
இருக்கினுஞ் சிறந்ததா ஏற்றெம் பெருமான்
திருக்கரங் கொண்டு தீட்டிய தன்றியும்
அழகிய திருச்சிற் றம்பலம் உடையான்
எழுதியதே எனநெட் டெழுத்துமிட் டருளினன்
ஆதலால் இந்நூல் அரும்பொருட் பயனை
ஓதவுங் கேட்கவும் ஒருவரால் முடியுமோ
காமச் சுவையினைக் கட்டுரைத் திடுதலாற்
காமுகர் காமநூல் எனக்களித் துரைப்பம்
இலக்கியக் கடல் நின்றேறுதற் கீதோர்
இலக்கிய நூல்எனக் கவிஞர்கள் இசைப்பவும்
இலக்கண விதியெலாம் எளிதினிற் பயில
இலக்கண நூல்என இயல்வலோர் இயம்பவும்
அன்பினைப் பெருக்கி அரனடி அளித்தலால்
அன்புநூல் எனமெய் அன்பினர் அறையவும்
வேதமெய்ப் பொருளினை விளங்கஓ துதலால்
வேதமே எனவே தியர்வியந் துரைப்பவுஞ்
சைவசித் தாந்தத் தனிப்பொருள் தருதலின்
சைவா கமமெனச் சைவர்கள் சாற்றவும்,
பலபட இங்ஙனம் பாருளோர் புனைந்து
சொல்நனி விளங்கித் தோன்றும் இந்நூல்.

திருக்கோவையார் பெருமை

(1) எத்திக்கும் போற்றும் திருவாசகத் தேனை ஈந்தபிரான்
தித்திக்கும் இன்பத் திருக்கோவை தந்த திறம்புகலின்
பத்திக்கும் ஆண்பெண் சிவசக்தி யென்று பழகிவளர்
முத்திக்கும் வித்தாக மும்மலம் போக மொழிந்ததுவே.

(2) இன்பச் சிவனை யியல்பாகச் சீவன் இணைந்துவளர்
அன்புப் பொருளைத் திருவாச கஞ்செய் யருட்புலவர்
பண்புற்ற காதற் பழந்தேன் குழைத்துப் பருகிடநாம்
நண்புற்ற சிற்றம் பலக்கோவை தன்னை நவின்றனரே!

(3) யாதிலும் தானும் இறைவனை யான்மா இணைந்துவக்கும்
காதலை யின்பக் கலைச்சிற்ப மாக்கிக் கவியளித்த
வாதவூர் வந்து மதிமந் திரியான வள்ளல்சிவ
போதவூர் போகப் போக வழியொன்று புகன்றனனே.

(சுத்தானந்த பாரதி

பட்டினத்துப் பிள்ளையார் புராணம்

நானூற்று மணிக்கோவை நடம்பயிலெம் பெருமாற்குத்
தேனூற்றும் பொன்னிதழித் தெரியலுமேம் படச்சாத்தி
வானூற்ற முதவுதிரு வாச(க)ம் பேசினர்பாத,
மாநூற்று விலையாது வணங்குதும்யாம் வணங்குதுமே.

சிவராத்திரிப் புராணம்

பெருவாத பித்தகலப் பிணிக்குடையும் உடற்சுமக்கும்
பிறந்தை நீக்கி
ஒருவாத சிவகதியின் உரிமைபெற நறவமலர்
உமிழும் சோலை
மருவாத மனைந்துலவு மன்றுடையாற் குக்கோவை
மாலை சாத்துந்
திருவாத வூரடிகள் அடிகள்படி யுறவணங்கிச்
சென்னி சேர்ப்பாம்.

மச்ச புராணம்

கறைமிடற்றெம் பரற்போற்றிக் கரிபரியா வரவழைத்துக்
கயற்கண் மூங்கை
இறைவனையைப் பேசுவித்துப் புத்தரைவென்(று) அம்பலத்தின்
இனிதின் ஆடும்

பிறைமுடித்த பிரான் எழுதக் கோவைதிரு வாசகப்பேர்
　　பிறங்கு பாடல்
மறைவகுத்த வாதவூர் மாணிக்க வாசகர்தாள்
　　மனத்துள் வைப்பாம்.

விசுவப் பிரம புராணம்

நாதனுர் நரிகள்தமைப் பரியாக்கப், பரிகள்தமை நரிக ளாக்க
ஓதநீர் வையை யின்மண் சுமக்க, அடி பட, எழுத ஊமை பேசத்
தீதருச் சாக்கியர்க ளூமரா கவும்அன்பிற் சிறந்து பாடும்
வாதவூ ரடிகளடிக் கடியவர்க ளடிமுடியால் வணக்கஞ் செய்வாம்.

ஆதிபுரத் தல புராணம்

சகம்பரவும் வாதவூர் தன்னிற் றோன்றிச்
　　சகலகலா நிதியாகித் தமிழ்நா டற்குச்
சுகந்தருமா மாத்தியராய்த் துரகப் பொன்னல்
　　தொழும்புமடித் தழும்பும்வரத் தஞ்ஞா னத்தால்
மகந்தருமா மறைபரவுஞ் சைவ மோங்க
　　மன்னூமை நீக்கிமன்றுண் மதியை வைத்தே
அகமுருகித் தொழுதழுது கோவை பாவை,
　　அரனெழுத வடைந்தவன்ப ரடிகள் போற்றி.

திரு ஆலங்காட்டுப் புராணம்

பொறிமுத லகன்ற இன்பப் பூரணப் புணர்ப்புப் போல,
அறிவகன் றிருவர் கூடிக் கலந்துவே றற்ற இன்பக்
குறிசெயும் அகத்தைக் கோற்றேன் கொழுச்சுவைக் கோவை யாக்கிச்
செறிபுகழ்த் தில்லை சேர்ந்த செம்மல்தாள் சென்னி சேர்ப்பாம்.

உத்த ரகோச மங்கை கழுக்குன்றுங் குருவங் கண்டு
சித்திரக் கோவை பாடித் தில்லையம் பலத்து வாவென்
றத்தன்வா னத்து ரைப்பப் போந்தருந் தமிழ்கள் பாடிப்
புத்தன்பா தையும்வென் றியாரும் போற்றுபொற் பதமடைந்தார்.

திரு ஆலவாயுடையார் திருவிளையாடற் புராணம் 30:
மண்சுமந்த திருவிளையாடல் 51.

திருக்கழுக்குன்றப் புராணம்

வழுக்கின்றித் தன்சிரத்தே வலிதுதிரு வடியிரண்டும்
　　வைத்திட் டானை
ஒழுக்கொன்றும் ஒரு*நாலா யிரமடிமேற் பலவடிவைத்(து)
　　ஓதி னானை.

---

* திருவாசகம் - பாட்டு 658. அடி 2632
திருக்கோவையார் பாட்டு 400. அடி 1600. ஆக அடி 4232.

இழுக்கொன்றும் இல்லாமல் ஏற்றுனை நரிப்பரிமீ(து)
ஏற்றி ஞனைக்
கழுக்குன்றத்(து) அரிபிரமர் காணுனைக் கண்டானைக்
கருத்துள் வைப்பாம்.

சீகாளத்திப் புராணம்

வஞ்சி நுண்ணிடை மால்வரை மங்கைபூண்
துஞ்சு வெம்முலைத் தொய்யி லெழுதிய
கஞ்ச நோவக் கடவு ளெழுதுமச்
செஞ்சு வைத்தமி ழோனடி சேர்குவாம்.

திருக்குறுக்கைப் புராணம்

மன்னும்அருட் குரவனுய்க் குருந்துறையும்
பெருந்துறையில் வதிந்த கோமான்.
கொன்னுமொலி மலிகுதிரைச் சேவகனுய்
மண்சுமக்கும் கூலி ஆளாய்
இன்னுமொரு தரஞ்சொலெனக் கேளாமடி
சொற்றபடி எழுது வோனுய்த்
துன்னும்வகை நெக்குருகு வாதவூர்
அண்ணலடி தொழுது வாழ்வாம்.

சூரைமாநகர்ப் புராணம்

ஆக்குவித் தோனுஞ் செய்யு ளணியுடைத் தலைவன் ருனுந்
தூக்குமுற் றெழுது வோனுஞ் சொற்பொருள் விரிக்கின் ருேனுந்
தேக்குபன் மறைக ளானுந் தெளிதரா ஒருவ னேயே
பாக்குவாய் மலரும் வாத வூரர்தாள் பரசி வாழ்வாம்

திருச்செந்தூர்ப் புராணம்

கொள்ளைவண் டிருந்து விருந்துணச் செழுந்தேன்
கொப்பளித்(து) அலர்ந்தபூங் கொன்றை
துள்ளுதெண் டிரைநீர் முடித்தசெஞ் சடிலச்
சோதிசெங் கரம்பிடித்(து) எழுதத்
தெள்ளுசெந் தமிழிற் கோவைநா னூறும்,
செப்பிய நற்கவி ராசப்
பிள்ளைசெஞ் சரணக் கிரணவா ரீசப்
பிரசநாண் மலரிணை துதிப்பாம்.

செவ்வந்திப் புராணம்

தேனூறும் வாசகங்கள் அறுநூறுந் திருக்கோவை
நானூறும் அமுதூற மொழிந்தருளும் நாயகனை
வானூறும் கங்கைநிகர் மாணிக்க வாசகனை
யானூறு படாதவகை யிருபோதும் இறைஞ்சிடுவேன்.

திருநாகைக்காரோண புராணம்

எழுதிடும் வேலை பூமேல் இருப்பவன் இயற்றப் போக்கி
எழுதுதல் இல்லா நூல்சொற் றினிதமர் தருமா தேவை
எழுதெழு தெனப்பல் பாச்சொற் றியைதரப் பெயரும் ஈற்றில்
எழுதிடச் செய்த கோமான் இணையடி முடிமேல் வைப்பாம்.

திருப்பனைசைப் புராணம்

ஏத மார்பவத் தின்னல் களைந்திடச்
சீத வார்பொழிற் றில்லையுண் மேவிய
பூத நாதர்க்குக் கோவை புனைந்திடும்
வாத வூரன் மலர்ப்பதந் தாழுவாம்.

புள்ளிருக்குவேளூர்ப் புராணம்

வழுதிமனு நெறிசெலுத்து மந்திரியாய்ப் புரவிகொள்ள
வந்த செம்பொன்
முழுதும்வளர் திருப்பணிசெய் திலகுதிரு வாசகமும்
மொழிந்து பாரோர்
தொழுதுசிர மேற்கொண்டு துதிப்பநிறை கோவையார்த்
துறைகள் யாவும்
பழுதுபடா தெடுத்துரைத்த வாதவூ ரன்பர்பதம்
பணிதல் செய்வாம்.

மயூரகிரிப் புராணம்

கன்னலின்சா றடுபாகு தன்னின்முறித் தெடுத்திடும்அக்
காரம் போலப்
பன்னியிடும் ஆரியத்தில் தென்மொழிஇன் புளததனுற்
பாடு கென்ன
அந்நிலையே கோவைதிரு வாசகத்தால் அரன்தன்னை
அன்பிற் பாடும்
தந்நிகரில் மாணிக்க வாசகனுர் திருவடிஎம்
தலைமேற் கொள்வாம்.

மருதூர்ப் புராணம்

பொருந்துறை பிலிற்றுங் கொண்டல் பொலிதடஞ்
சோலை மன்னும்
பெருந்துறை நகரிற் பெம்மான் பெருகுதண்
கருணை வைத்துக்
குருந்துறை தரமுன் தன்னைக் கொடுத்தருட்
டேறன் மாந்தி
அருந்துறை(ப்) பதிகம் பாடும் ஐயர்தாள்
வணக்கஞ் செய்வாம்.

திருவரஞ்சரத்தல புராணம்

தற்பர மாகிஎங்கும் தாணுவாய் நிறைந்தா னந்த
பொற்பொது அதனில் ஆடும் புனிதனுக் கிசைந்த தாக
அற்புதத் தமிழாற் கோவை அறைந்திடும் வாத வூரன்
நற்பதம் தலைமேற் கொண்டு நாவினில் வழுத்து வாமே.

திருவெண்காட்டுப் புராணம்

சிற்றம் பலக்கோவைத் தேன்சொரியும் செம்முகிலை
மற்றெப் பிலாததிரு வாசகத்தின் வாரிதியைக்
கற்றைச் சடையான் கருத்துருக்குங் காதலனைக்
கொற்றத் திருவாத வூரனைக்கை கூப்புதுமே.

வேதாரணிய புராணம்

எந்தை யருளாற் கூடற்பதி வந்தேறி
யெண்ணரிதாம் பரியரசுக் கேற வேற்றி
முந்துதிரு வாசகமா மணிக் குலத்தை
முதுலகோ ரின்புறமா முகத்தாற் றாவி
அந்தமிலைந் திணைதழுவு கோவை நின்றும்
அகமகிழ வரும்பொருளு மவனுக் கீந்து
வந்துபெருந் துறைபுகுந்து மலைபு காத
வாதவூர்த் தமிழ்க்கடலை வணங்கல் செய்வாம்.

(பரஞ்சோதி முனிவர்

வேதாரணிய புராணம்

இருள்சார்ந்த வுயிர் தனதன் பிழைத்தனைய
தமிழ்ப்பாவா லின்ப மாறு
மருள்சாரு மெனவுணர்த்த நரியனைத்தும்
பரியாக்கி யமல மாய

பொருள்சார்ந்து மண்சுமக்கப் புரிந்தணிசேர்
பொருட்கோவைப் பொருளாந் தில்லைத்
தெருள்சார்ந்த வாதவூர்ச் செம்மலடிப்
பொடியாடித் திகழ்வா மன்றே. (அகோரதேவர்)

திருநாகேச்சுரப் புராணம்

பணிமொழிதன் னறிவிச்சை செயலெல்லாம்
மொழிந்திடவே பரிந்து வேண்டி
மணிமிடற்ற னருளன்றி யொன்றறியா
தன்பதனின் மகிழ்ந்து மூழ்கி
அணிமொழியாம் அகப்பொருளும் புறப்பொருளும்
அவனருளால் அமைத்துப் பாடும்
மணிமொழியா ரெனப்பெற்ற வாதவூர்
அடிதளட்டி மனத்துட் கொள்வாம்.

திருக்கோவையார் உரையிற் கண்ட சில

அருஞ்சொற்களும், பொருள்களும்

[எண் : பக்க எண்]

அக்கு - சங்குமணி 376
அகலம் - மார்பு 355
அங்கம் - சதுரங்கம் 187;
மேனி 193;
உறுப்புக்கள் 351
அங்கராகம் - பூசப்படுவன 194
அசும்பு - சிறு திவலை 149;
நீர் 198
அசும்புற்ற கண் - நீர் அரும்பிய
கண் 198
அஞ்சனம் - மை 334
அஞர் - வருத்தம் 155
அடல் - இயல்பு, வெற்றி 297
அடல்களி - வெற்றியுடைத்
தாகிய களிப்பு 297 உரை
அடல்களி - இயல்பாகிய
பேரின்பம், அடுதல் செய்
யாத பேரின்பம் 297
அடலை - துன்பம் 218
அடலையுற்றூர் - ஆட்படுந்
தன்மையைப் பொருந்தா
தவர் 218
அடை - இலை 124;
சேர் 221
அண்டர்கள் - ஆயர்
(இடையர்) 136
அண்ணல் - தலையாயது 256
அணங்கு - துன்பம் 39
அணங்கு - தெய்வத்தை
ஒப்பாள் (பழைய உரை) 283
அணவும் - பொருந்தும் 296
அணி - போலும் 342
(மின்னணி நுண்ணிடை)
அணி - திரள் 342
அணுக்கு - சமீபத்து இருத்தல் 373
அணைமேவி - (1) அணைந்த
கரையைப் பொருந்தி
(2) பஞ்சு அணைமேவுதல் 179
அத்தம் - சுரம் 202;
அரிய வழி 336
அத்தம் - அருஞ்சுரம், அரிய
வழி 336
அத்தன் - உலகத்து உள்ளார்
எல்லார்க்கும் தந்தை 358
அதர் - வழி 157;
சிறுநெறி 168
அப்பு - நீர் 354
அம்பல் - பரவாத களவு 180
அயர்ந்தும் - ஆடியும் 287
அயர்வோன் - விரும்பிச்
செய்பவன் 157
அயில்வேல் - கூரிய வேல் 155
அயின்று - உண்டு 262
அரணம் - மதில் 357
அரம்பையர் - தெய்வமகளிர் 251
அரி - செவ்வரி 209;
சிங்கம் 395
அரில் - பிணக்கம் (பின்னல்) 14
அருக்கு - அருமை 275
அருத்தி - கொடுத்து 257

அருளான் - தாளாண்மையன் 114
அல் - மாலைக்காலத்து இருள் 348
அல்கல் - தங்குதல் 306
அல்கும் - தங்கும் 319, 337
அல்குவர் - சேர்வர் 249
அலந்து - துன்புற்று 190
அலமரல் -
(1) அலமாப்பை உறுதல்
(2) வேதனைப் படுதல் 172
அலர் சடை - விரிந்த சடை 240
அலர் தூற்ற -
(1) புறங்கூற
(2) பூவை மலர்த்த 139
அலவன் - ஆண் நண்டு 155
அவம் - பயனின்மை 173
அவலம் - கவற்சி, (கவலை) 389
கிலேசம் 389 பழைய உரை
அவிய - கெட 286
அழற்றலை - அழல் நுதி 206
அழுங்கல் - இரக்கம் 29
அழுங்கின-(1) ஆரவாரித்தன
(2) கிலேசித்தன 172
அழுங்கு - வருந்தாநின்ற 250
அளவி - அளவு 10
அளை - முழை 149
அறல் - கருமணல் 375
அறை - பாறை 119
ஆடகம் - செம்பொன் 194
ஆதும் - ஆகும் 287
ஆய் மறி - அசைந்த மான் 125
ஆயம் - மகளிர் கூட்டம் 359
ஆர் - ஆலிப்பு 105;
மிக்க மெலிவு 136
ஆர் - (இடையார்) மெலிவு
மிக்க மெலிவு 136
ஆர்த்தர் – நோயுற்றார் 187
ஆர்த்து - ஒலித்து 173
ஆரவாரித்து 295
ஆலும் - ஆடும் 235
ஆவம் - அம்பறாத்தூணி 209
ஆவா - ஐயோ 355
ஆவா - வியப்புக் குறிப்பு 72, 355
ஆழ்சுடர் - விழுகின்ற சுடர்,
அஸ்தமிக்கும் சூரியன் 187
ஆழி - தேர்க்கால் 339
ஆழி திருத்தி கூடல் இழைத்து 186
இசும்பு - வழுக்குதல், ஏற்றி
இழிவு முதலாயின குற்றம் 149
இஞ்சி - மதில் 167
இடந்தலைப்பாடு - இடத்திலே
எதிர்ப்படுதல், தலைவன்
முன்னாட் கூடின இடத்திலே
வந்து தலைவியை எதிர்ப்
படுதல்.
இணங்கு - ஒப்பு 68
இயம் இயவொலி - வாத்திய
ஒலி 384
இயவு - வழி, நெறி 253
இரதம் - இனிமை 57
இராகம் - கதிர்ப்பு நிறம் 194
இரும் தீ - பெரிய நெருப்பு 36
இருவி-கதிர் கொய்த தட்டை 144
இருவின - இருத்தின 281
இலங்க - விளங்க 331
இவர் பரந்த 40, 107, 152
இறந்தார் - கடந்தார் 107
இறப்பு - இறவாணம், தாழ்
வாரத்து மேல் கூரையின்
முன் பாகம் 328
இறால் - தேன் கூடு 252
இறும் - முறியும் 303
இறும்பு - புனை இறும்பு, செய்
காடு-கை செய்து வளர்க்கப்
பட்ட காடு 148
இறை - சிறிது 94, 229
ஈடு - பொய் சொல்லும் நெறி
(பெரிய) வார்த்தை 111
ஈர்ங்கடை - குளிர்ச்சி உடைய
வாயில் (வாசல்) 362 உரை

ஈர்ங்கழல் - நெய்த்த நிறத்தை உடைய திருவடி. குளிர்ந்த திருவடி 153
ஈர்ங்கொடி - இனிய கொடி 28
உக - வார, சிந்த 345
உகல் - உகுதற்கு இடம் (அழிதற்கு இடம்) 42
உங்குவை - உவை 237
உடல்மன் - உடன்ற மன்னர், கோபித்த அரசர் 326
உடைமணி - குழந்தைகளின் அரைமணி 385
உணங்கல் - உணவு 235
உணங்கும் - வாடும் 362
உதர்ந்து - இடந்து 346
உந்திடம் - உவ்விடம் 223
உம்பர் - மேல் 260
உமர் - நுமர் 268
உரவோன் - வலியை உடையவன் 237
உரும் - இடி ஏறு 176
உவவேம் - விரும்பேம் 390
உழை - இடம் 347
உறுவரை - முற்றூட்டு 252
முழு அநுபவம் 257
உன்னலர் - நினையாதார் 287
ஊதை - காற்று 239
ஏய்ப்பாறும் - இளைப்பாறும் 223
எய்யாது - அறியாமல் 262
எல் - ஒளி 60, 192
எல்லி - இரவு 153, 364
எவ்வம் - துன்பம் 358
எழிலி - மழை 159
எழுங்குலை - இளங்குலை 250
எழுமை - ஏழு பிறப்பு 208
எள்குதுமே - பயப்படுவோம் 92
எறிப்பு - விளக்கம் 218

*என் கடைக்கண்ணினும் -
(1) கடை என் கண்ணினும் - கடையாகிய என்னிடத்தே என மொழி மாற்றிப் பொருள் காண்க.
(2) எனது கடையாகிய நிலைமைக் கண்ணும் 298 உரை
என்பல் - என்று கூறுவேன் 207
என்பு - எலும்பு 242, 251, 277, 377
என்றூழ் - கோடைக்காலம் 159
என்னையர் - எந் தந்தையார் முதலிய பெரியவர்கள் 98
ஏ - அம்பு 133
ஏங்கும் - ஒலிக்கும், முழங்கும் 148, 296
ஏதில் - (1) இயல்பு இல்லாத (2) அந்நியமாயிருக்கிற 239
ஏயாப் பழி - தகாத பழி 374
ஏர் - அழகு 121, 196, 296, 329
எழில் 352
ஏரணி - மிக்க அழகு 329
ஏழையர் - மகளிர் 208
ஐந்திணை - குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல்
ஐயுறவாய்-(1) ஐயுற்று 399 உரை
(2) ஐயத்துடன் 399 பழைய உரை
ஐவனம் - (மலைநெல்) தினை 144
ஒக்கல் - சுற்றம் 400
ஒட்டார் - இயையார் 197
ஒரு - ஒரு நஞ்சு, ஒப்பில்லாத நஞ்சு 158

---

* என் கடைக்கண்ணினும் யான் பிறவேத்தா வகை - எனது கடைக்கண்ணும் யான் பிறவேத்தாவகை என நேரே பொருள்காண்டலுமாம். இது பரிதிமாற் கலைஞர் கூறிய பொருளாம்.

ஒருங்கு - கூட 331
ஒருநிலைக் காமம் - ஓரிடத்துள்ள காமம்
ஒல்லை - விரைவாக 214
ஒளிறுதல் - விளங்குதல் 254
ஒறும் - ஒறுக்கும் 253
ஒன்ருதன - ஒவ்வாத 339
ஓக்குவல் - தருவேன் வரைந்து வைப்பேன் 235
ஓகை - மகிழ்ச்சி 160, 384
ஓதி - கூந்தல் 196
ஓலமிடும் - முறையிடும் 329
ஓலுறுத்த - ஆரவாரிப்ப 241
கஞ்சுகம் - சட்டை 15
கட்டங்கம் - மழுப்படை 242
கட்டணி சடை - மகுடமாகக் கட்டப்பட்ட சடை 303
கட்டு - தாங்கி 385
கட்டுவிச்சி - கட்டுப்படுக்குமவள் 284
கட்டுவிச்சி - குறி சொல்பவள், கட்டுப்படுத்தல், கட்டுவச்சியிடம் குறிகேட்டல்
கட்டு - நிகழ்வது சொல்லும் குறி தொல்-பொ-115
கட்டுவிச்சி - திவ்வியப் பிரபந்தம் - இயற்பா - சிறிய திருமடல் 19, (20)
கடம் - சுரம் 271
முறைமை 220
மதம் 297
கடமா - மதமுடைய யானை 247
கடவி - செலுத்தி 136
கடவும் - ஊரும், செலுத்தும் 285
கடறு - பாலைநிலம், அரிய வழி 317
கடன் - இயல்பு 77
முறைமை 105, 272
கடி - வாசனை, புதுமை 139, 325
திருமணம் 236
காவல் 143, 203
கடி - நறு நாற்றம் 325
கடிச்சந்தம் - சிறந்த நிறம் 78
கடிதோட்ட களவு (1) காவலை வாங்கிய களவு 8
கடிந்தவர் - ஓட்டினவர் 297
கடிப்புனம் - காவலை உடைய புனம் 143
கடியும் - ஓட்டும் 293
கடுஞ்சூள் - கடிய சூளுறவு, கடிய ஆணை 289
கடை - வாசல் 385
கண் - இடம் 298
கண்டர் - வீரர் 190, 199
கண்டல் - மரவகை - தாழை முள்ளி 290
கண்ஞர் முழவம் - முகம் அமைந்த் முழவம் 324
கண்படாது - கண்கள் உறங்காது 258
கணமயில் - மயில் இனங்கள் 347
கணி - (1) வேங்கை மரம்
(2) சோதிடன் 139
கணியார் - வேங்கையார் 145
கதி - (ஆண்டு சென்ற) செலவு (ஆண்டு) வரவு 292
கதிர் - கதிர்ப்பு 156;
ஒளி 292
கதிர்த்த - ஒளிவிட்ட 396
கதுமென - கதுமெனல், விரைவுக் குறிப்பு 275, 349
கம்பம் - நடுக்கம் 209
கம்பலை - (தெய்வத்திற்குப் பலிகொடுக்கும்) ஆரவாரம் 159
கயம் தலை - மெல்லிய தலை 382
கரத்தல் - வஞ்சித்தல், மறைத்தல் 356
கரப்ப - கெட 213
கராம் - முதலை 362
கரி - சான்று 177

கரைந்தால் - அழைத்தால் 235
(கரையாய் காக்கைப் பிள்ளாய்)
கல் - மலை 168
கல்லதர்-மலைச்சிறு நெறி 168, 264
கலம் - (1) அணியாபரணம் 197
(2) மரக்கலம் 365
(சிலேடை)
கலர் - (1) தீய மக்கள் 367 உரை
(3) அறிவில்லாதவர் 367
பழைய உரை
கலராயினர் - தீ மக்களாய்
உள்ளார் 257
கலி-புகழால் வரும் ஆரவாரம் 20
கலிங்கம் - (1) துகில் (புடவை)
365 உரை.
(2) கலிங்க தேசம் 365
பழைய உரை (சிலேடை)
கலிப்ப - ஆரவாரிக்க 279
கலுழ்ந்து - அழுது 366
கலை - மேகலை 263
கவ்வை - அலர் 214
கவர் - விரும்பப்படும் 70
கவரும் - பருகும் 317
கவலம் - கவற்சி, (கவலை) 389
கவினை - வண்மை 27
கழல் - வீரக்கழல் 290
கழி - (1) கடற்கழி
(2) கழிதல், கடந்து
நிற்றல் 85
கழி - மிக்க 190, 255
கழி கட்டிரவு - சிறந்த அச்சத்
தைத் தரும் இரவு, நெடி
தாகிய கடுமையைச் செய்
கின்ற இரவு 255
கழுமல் - மயக்கம் 28
கழுமிய - பொருந்திய 393.
கழை - குத்துக்கோல் 111
கள் - தேன் 258, 313
வண்டினுள் ஒரு சாதி 295
கள்ளம் - பொய் 379
களி - உள்ளச் செருக்கு 52
களிமகன் 122
பேரின்பம் 297
களைவயின் - (வருத்தத்தை)
தீர்க்கின்ற இடத்து 254
கற்பகம் - தெய்வலோகக்
கற்பக விருட்சம் 400
கறி - மிளகுக் கொடி 193
கறுத்த - முனிந்த, கோபித்த 209
கனம் - பெரிய 216
கனவு - துயில் 378
காதம் - 10 மைல்
காதரம் - அச்சம் 117, 190, 381
காப்பு - காவல் 196
காமர் - அழகு 352
காயுங்கடம் - கொதிக்கும்
காடு, வழி 241
கார் - கார்காலம், ஆவணி
புரட்டாசி 76, 256, 270,
323, 383
"கொண்மூ சொரிந்தன விரிந்தன்
காந்தள் வெருவரல் காரென"
279
கரிய பருவ மேகம் 301
கால் - (1) இடம்
(2) காற்று 126
அடி 238
காவி - நீலப்பூ 349;
குவளைப்பூ 384
காற்றும் - (1) காலும்
(2) ஒழுகும் 192
(காற்றும் என்பது காலும்
என்பதின் பிறவினை) 192
கான் - நறுநாற்றம் 157
கானல் - கானல் பொய்கை 190
கடற்சோலை 155, 190
கிடை - கிடப்பு 268
கிழவோன் - நாயகன் 247
கிளர - கெடும்படி 226
கிளவி - மொழி 388

கீழும் - கிழிக்கும் 249, 356
கீள்வது - பிளப்பது 247
குட்டன் - பிள்ளை 224
குடுமி - உச்சி (உயர் கயிலைக் குடுமி) 62
குதர் - கோதுகின்ற 369
குரம்பை - யாக்கை 155
சிறுகுடி 251
குரம்பை - சிறுகுடில் 251
குரல் - பூங்கொத்து 119
கழுத்து, தாலி 239
குரவை - கைகோத்தாடல் 127
குரு - நிறம் 44, 156, 166
குருஉக்கமலம் - நிறத்தை உடைய தாமரைப் பூ 221
குலதெய்வம் - நல்லதெய்வம் 29
குலம் - சாதி 123
குலா - (நுதல்) வளைந்த 266
குலாய - பெற்ற 316
குவவின - குவிந்த 108
குழீஇ - திரண்டு 255
குழுமி - திரண்டு 348
குற்ற - குத்தின 283
குறி - பூப்பு நிகழ்தற்குறி 360
கூடம் - மன்றுகச் செய்யப் பட்ட தெய்வக் கோட்டம் 129
கூடலிழைத்தல் :—கண்ணை மூடிக் கொண்டு நிலத்தில் வட்ட மாக ஒரு கோட்டைக்கீறிப் பின்பு கண் திறந்து பார்த்து அக்கோடு தொடங்கிய இடத்திலேயே வந்து கூடி யிருப்பின் தலைவன் வந்து கூடுவான் என்றும், விலகி யிருப்பின் தலைவனும் வில கியே இருப்பான் என்றும் அறிந்து கொள்ளுவதாம்.
" மாடநீண்மருகற்பெருமான்வரில் கூடுநீயென்று கூடலிழைக்குமே"
—அப்பர், திருமருகல் 8.
கூடார் - பகைவர் 161
கூம்ப - குவிய 356
கூர்ஞ் செக்கர் - சிறக்கும் செக்கர் வானையுடைய மாலை 346
கூர்ந்து - சிறப்ப 383
கூழ் - உணவு 322
கூழை - கூந்தல் 362, 375
கெழீஇ - பொருந்திய 135
கெழுமல் - சேர்தல் 37
கெழுமின - மேவின 388
கேழ் - நிறம் 226;
உவமை 269
கேழ்கிளர - நிறம் கெடும்படி 226
கைக்கிளை-ஒரு மருங்கு நிகழும் கேண்மை (ஒருதலைக்காமம்)
கை கோள் — ஒழுக்கம்
கைம்முகம் - கைத்தலம் 356
கொக்கு - (1) மாக்கள் (செந் நாய் குதிரை முதலிய)
(2) மாமரம் 103
கொடி - காக்கை 235
கொடி - சேட்டைக் கொடி பார்க்க.
கொண்டல் - கீழ்க்காற்று 290
கொண்மூ - மேகம் 243, 279
கொந்து - கொத்து 276, 391
கொல் - கொற்றொழில் 387
கொளு - கருத்து
கொற்றம் - வெற்றி 346
கொன் - அச்சம் 175
இறுதி 298
கோட்டம் - வணக்கம் 156
கோடும் - கொள்வேன் 93
கோப்பு - சீர், கோவை 161
அலங்காரம் 196
கோடாய் - செவிலி 230
கோலத்தவிசு-அழகிய சயனம் 238
கோலாப்பிரசம் - வைக்கப் படாத தேன் 110

கோலம் - செவ்வணியாகிய கோலம் 360;
வடிவு 396
கோளி - (1) விரித்து 347
(2) சேர்த்து 318
கோளரி - சிங்கம் 225
சங்கம் - (1) சங்கு
(2) பற்று 85
சங்கநிதி - தொலையாத நிதி 400
சந்தம் - மறை 78
நிறம் 78, 211, 299
சரம் - சரவருஷம் (சரமாரி) 321
சரி - மலைச்சாரல் வழி 156
சரிவாய் - வழி இடம் 156
சலஞ்சலம் - வலம்புரிச் சங்கு 1000 தன்னைச் சூழ்ந்து விளங்கும் சங்கு 377
சாயல் - மென்மை. 235, 351
சால்பு-மன அமைதி (நற்குணம்) 25
சாலும் - அமையும், போதும் 392
சிக்கனவு - திண்ணனவு, இரக்கம் இன்மை 343
சிதைக்கும் - கெடுக்கும் 272
சிந்தாகுலம் - மனக்கலக்கம் 276
சிந்தாமணி - நினைத்ததைக் கொடுக்கும் தெய்வலோக மணி 400
சிவந்த - கோபித்த 209
சிவன் - எவ்வுயிர்க்கும் எப்பொழுதும் நன்மையைச் செய்பவன் 358
சில்லோதி - சில் - நுண்ணிய கூந்தல் 196
சிலம்ப-மலையினை உடையவனே 80
சிற்பம் - நுண்தொழில் 305
சிறை - அணை 258
சிறைப் புறம் - ஒதுக்கிடம், வேலிப்புறம் 137
சின்னப்படும் - பொடிபடும் 384
சின்மொழி - சிலவாகிய மொழியை உடையாள் 343
சீர்த்தி - புகழ் 234
சீலம் - ஒழுக்கம் 27
சுணங்கு - மாமை நிறம் 96
அழகு தேமல் 194, 283
சுணங்கு - அழகு தேமல் 194
சுவல் - கழுத்து. தோளின் மேல் பாகம் 243, 389
சுளியா - வெகுளும் 111
சுற்றம் - ஆயம் 17
சுற்றும் முற்றும் - முழுதும் 43
சூது - சொக்கட்டான் காய் 283
சூர் (சூருறு சோலை)- தெய்வம் பொருந்தும் சோலை 176
தெய்வப்பெண்களில்ஒரு சாதி 182
சூழ் - சூழ்ந்த மாலை 79
சுருண்ட 93
சூள் - ஆணை 289
செகுத்தும் - கெடுத்தும் 287
செம்மலூரன் - தலைமையை உடைய ஊரன் 369
செம்முகம் - வயலிடம் 356
செயிர் - வருத்தம் 191
செல்ல - கழல 263
செல்லல் - இன்னுமை, துன்பம் 50, 181, 192, 254, 274, 280, 300, 348
நோய் 288
செல்லும் - அடையும் 159
செல்வு - இருமுது குரவராற் கொண்டாடப்படுதல் 266
செவ்வி - சிவப்பு நிறம் 363
செழுங்குலை - முதிர்ந்த குலை 250
செழுமிய - வளவிய 393
செறிகடல் - செறிந்த கடல், செறிவு - எல்லை கடவா நிலைமை 179
சென்றுர்-புணர்ந்துபோயினர் 288
சென்று - அடைந்து 24;
போய்ப்பரத்தலால் 291
கழிந்து 362

சேட்டை - உறுப்பைப் புடை பெயர்த்தல் 235
சேட்டைக் கொடி - சேட்டையை உடைய காக்கை 235
(சேட்டையாகிய தெய்வத்தின் கொடி 235)
(சேட்டை - மூதேவி)
சேடு - பெருமை 161
சொற்பதம் - சொல்லளவு 61
சோத்து சோத்தம் - இழிந்தார் செய்யும் (சொல்லும்) அஞ்சலி 173
ஞாங்கர் - மிசை, மேல் 223
ஞெமிய - நெரிந்து ஒடிய 165
ஞெமிர்த்து - முறித்து 254
தக்கின் றிருந்திலன் - தகுதி உடையவனாய் இருந்திலன் 376
தகவு - தகுதி 377
தடங்கண் - பெரிய கண் 345
தடிந்த - குறைத்த 285
தணித்தற்கு - மாற்றுதற்கு 314
தந்து - படைத்து 163
தம்பலம் - வெற்றிலைபாக்கு 396
தமியர் - துணையில்லாதார் 319
தமியோமை - துணையில்லாதோமை 375
தமிழின் துறை - அகமும் புறமும் ஆகிய பொருள் 20
தரக்கிற்கின்றது - தரத் தொடங்குகின்றது 336
தவாமணி - நல்லமணி 68
தரியாமை - ஆற்றாமை 311
தலை - (வேட்கைப்) பெருக்கம் 383
தவல் - கேடு 389
தவிசு - தடுக்குமுதலாயின 238
தவிசு - படுக்கை 303
தழங்கும் - ஒலிக்கும் 158, 196
தழை - மயிலின் பீலி 347
தனம் - (1) கொங்கை (2) பொருள் 365
(சிலேடை)
தாது - செருகு பூ 122
தார் - மாலை 176
தாழ் - தங்கிய - மணம் தாழ் குழல் 125
தங்குதல் 9, 34
மேவும் 298
திமில் - மரத்தோணி 63
திரு - கண்டாரால் விரும்பப் படும் தன்மை நோக்கம் 1
திருத்தகவே - பொலிவுதக 124
திருத்தம் - புண்ணிய நீர் 62
திருத்திவிட்டார் - சீவிவிட்டார் 136
திருந்தும் கடன் - திருந்தின கடப்பாட்டை யுடைய முறைமை 272
திருத்திய - (1) குற்றங்கடிந்து செய்யப்பட்ட, (2) கை புனையப்பட்ட, (3) தீத்தொழிலை நீக்கிய, (4) திருந்தச் செய்யப்பட்ட, (5) மிகவும் உண்டாக்கிய 215, 288
திருமுகம் - பெரியோர் அனுப்பும் கடிதம் (ஓலை), ஆணை ஓலை 327
திவண்டன - விளங்கின 300
திளையாவரும் - திளைத்து வரும் - இடைவிடாது அவ்விடத்துப் பயின்று வரும் 294
திறத்து (அன்னாள் திறத்து) - அன்னாள் இடத்து 213
திறம் - (அருமறையின் திறம்) முறைமை 213
திறல் - வெற்றி 375
திங்கு - குற்றம் 245
தீர்தர - நீங்க 338
துணை மலர் - ஒத்த மலர் 118
துயர்ந்தும் - துயர முற்றும் 287
துயில் பேரும் மயிலினம் - உறக்கம் ஒழிய நின்ற மயில்கள் 160
துரந்து - ஓட்டி 395

துரிசு - குற்றம் 89
துலங்கல் - துளங்குதல் 24
துவளுற்றது - மாய்ந்தது 351
துளங்கும் - நடுங்கா நிற்கும் 270
துறு - நெருங்கிய 313
துறை - களம் (போர்க்களம்) 187
இடம், கடல் 380
துன் அறத் துய்க்கும்-பொருந்துதல் அறத்துரக்கும் 175
துன்றி - நெருங்கி 279, 317, 328
துன்னுமை - வாராமை, அடையாமை 89
துன்னி - கிட்டி, நெருங்கி, சேர்ந்து 317, 328
துனிவரும் நீர்மை - துன்பம் வரும் தன்மை 332
தூங்க - இருக்க 293
இடையறாது நிற்ப 320
தூண்டா விளக்கு - தூண்ட வேண்டாத விளக்கு (மணி விளக்கு) 244
தூரல் (தூர்க்காதே) தூராது ஒழிய. அழிக்காதே 185
தெம்முனை - பகைமுனை 306
தெவ்வர் - பகைவர் 114
தெருட்டின் - தெளியும்படி வார்த்தை சொல்லில் 270
தெவ்வம் - பகைவர் 304
தெளி - ஒளி 16
தெறுக - வெகுளுவாளாக, (கோபிக்க) 289
தேம்பல் - தேய்தல் 165
தேம்பிணை - தேனையுடைய தொடை 38
தேர் (கடித்தேர்)-நறுமணத்தை (வண்டுகள்) ஆராயும் 216, 323
தேர் - ஆராயும் 323
தேன் - வண்டு 322
தேன் முதிர் வேழம் - தேன் போலும் சாறு முதிர்ந்த கரும்பு 369

நைதல் - புனையப்படுதல் 60
நொக்கு - திரண்டு 324, 347
தொடுகடல் - தோண்டப் பட்ட கடல் 248
தொடை - அம்பு, அம்பு எய்தல், பாணம் 274
தொண்டு - தொண்டர் 302
தொத்தி - கூடி 172
தொத்து - கொத்து 121
திரள் 246
தொலைத்து - வென்று 46
தொழும்பு - தொண்டு 261
- அடிமைத்தனம் 267, 279
தோடு - மலர் இதழ் 161
தோயம் - நீர் 207
தோன்றல் - தலைவன், முல்லை நிலத் தலைவன் 290
புதல்வன் 389
நகை - பல் 267
நண்ணார் - பகைவர் 315
நயந்து - விரும்பி 162
நரல் - நாதம், ஒலி 119
நல்லார்கள் - மகளிர் 359
நவம் - புதிதாக 358
நவில் வேல் - பயிலப்பட்ட வேல் 171
நள்ளார் - பகைவர் 357
நன்மை - காதன்மை, சிறப்புடைமை 174
நன்று - பெரிதும் 288
நாகு - கன்று, இளங்கன்று 346
நாட்டம் - கண் 156
நாண்மதி - உவாவான நாளின் மதி 108
நாப்பண் - நடுவே 116, 162, 321
நாரி - பெண் 265
நிணப்பலி - நிணமாகிய (மாமிசமாகிய) பலி 235
நிவந்த - உயர்ந்த, ஓங்கிய 95
நிறை - ஐம்பொறிகளையும் அடக்குதல் 31

நிறைவு - அறிவோடு கூடிய ஒழுக்கம் 266
நீடு - நீட்டித்து, காலம் நீள 345
நீர் - நீர்மை 123, 345
நுதிக்கோலம் - முன் கோலம் 360
நூக்கும் - தள்ளும் 161
நொடிவார் - சொல்லுவார் 139
நொதுமலர் - ஏதிலர், அயலார் 275
நோக்கம் - கண் 275
பகடு - யானை 237
பசும்பனிக்கோடு - குளிர்ந்த பனியை உடைய பிறைச் சந்திரன் 149
பட - கெட 297
படரும் - செல்லும் 213
படர்தல் - படர்தலுற்றூர் - போக நினைந்தார் 314
படாம் - போர்வை 154
படாமுலை - விழாத முலை 258
படி - உலகம் 291
நிலம் 305
படிச்சந்தம் - ஒப்பு 32
படிறு - கள்ளம் 390
பணங்கள் - படங்கள் 235
பணி - பாம்பு 304, 330, 359
பணிலம் - சங்குமுத்து 63
பணிவோள் - குற்றேவல் செய்வாள்; வணங்குகிறவள் 302
பழைய உரை
பணைத்த - பெருத்த 194, 242
பதன் - செவ்வி 323
பந்தார் விரலியர் - பந்து பயின்ற விரலார் 391
பந்தி - நிரை இடம் 99
குதிரை முதலி யன கட்டும் இடம் 305
பயலன் - கூற்றை உடையான் 240
பயிர்ப்பு - பயிலாத பொருட் கண் வந்த அருவருப்பு 12
பயில் - விடாது நிகழும், வாழ்கின்ற 170
போலும் 362
பயோதரம் - கொங்கை 194, 242
பரம் - எப்பொருட்கும் அப்பாலானவர் 251
பரல் - பரற்கல், பருக்கைக் கல் 206, 228
பராகம் - பொடி 194
பரிசகம் - சித்திரசாலை 78
பரிசினம் - தன்மையை உடையேம் 390
பரிசு - தன்மை 185
இயல்பு 304
முறைமை 286
பரிந்து தான் ஆளும் வாய்மை மறுத்து, அன்புகூர்ந்து 279
பழங்கண் - துன்பம் 329
பழனங்கள் - தடாகங்களை உடைய மருத நிலம் 249
பன்னும் - ஆராயும் 131
பனிவரும் கண் - கண்ணீர்வரும் 332
பாசடை - பசிய இலை 124, 203
பாண்டில் - கிண்ணம் 249
பாந்தள் - பாம்பு 324
பாம் - பாவும், பரந்த 164
மாயின - பரந்த 234
பாய் - பரந்த 355
பாவித்து 40
பரப்பி 228
பாய்கடம் பரந்த பொய்கை 203
பார்ப்பு - பறவைக் குஞ்சு 318
பாரித்து - பரப்பி 324
பாரிப்பு - ஒருப்பாடு, ஒருமைப்பாடு 132
பால் திகழும் பரிசினம் - பால் புறப்படும் தன்மை உடையேம் 390
பாலித்து - பாதுகாத்து 318
பாவியர்கள் - குறிப்பை உடையவர்கள் 364
பாறு - (1) பருந்து, கழுகு (2) மரக்கலம் 85

பித்தி - பேதை 242
பிரசம் - வைக்கப்படாத
தேன், கோலாப்பிரசம் 110
பெருந்தேன் 299
பீடு - வலிமை 299
புகை-யோசனை தூரம், நான்கு
குரோசம் (குரோசம் 2½
மைல்) உரை 308
புடை - பக்கம் 221
புத்தேளிர் - தேவர் 321
புரிசை - மதில் 167
புரிதல் - மிகுதல் 89
புரிந்து - விரும்பி 19
புரை - போன்ற, உயர்ந்த 299
புல் என்ன - பொலிவழிய 40
புல்லங்கள் - தழுவுதல்,
புல்லுதல் 358
புலம்பாய் - தனிமையாய் 355
புலம்புற்று - துன்புற்று 172
புலிப்பல் குரல் - புலிப் பல்லை
உடைய கழுத்து 239
புறவு - இளங்காடு,
புறச்சோலை 166
புனம் - பொழில் 38
புனை இறும்பு - செய்து
வளர்க்கப்பட்ட காடு 148
புனைந்து - விரைந்து 328
பூசிப்பதே-கொண்டாடுவதே 396
பெயர்ந்தும் - பின்னும் 287
பெருவார்த்தை-வெளிப்பட்ட
காலத்துப் பெரும்பழியைத்
தருவது 134
பேதுற - மயங்க 377
பை - படம் 199
பையுள் - நோய், மயக்கம் 19, 345
பொக்கணம் - பை 242
பொங்கிருள் - மிக்க இருள் 210
பொடியா - தோன்றா 104
பொத்திய - மூடிய 242
பொம்மென் இருள் - செறிந்த
இருள் 395
பொருப்பு - பக்க மலை 293
பொழில் - உலகம் 160, 393
பொருது - (1) தாங்காது
(2) வெகுண்டு 367
பொறை - பொறுத்தல் 278
பாரம், பொறுமை 353
பொறையாட்டி - பொறுமை
உடையவள் 353
பொன் - இரும்பு 346
போதரவு-போகை, பேணுகை 318
போது - பேரரும்பு 174
போர்க்கடலே - கரை பொரு
தலை உடைய கடலே 183
போர்முனை - போரை உடைய
பாசறை 316
போரும் பரிசு - போதரும்
பரிசு - இடைக் குறை 82
போழ - பிளவுபடுத்த, அழிக்க 43
பௌவம் பணி மணி - முத்து 304
மங்குல் - ஆகாயம் 177
மடங்கல் - சிங்கம், புலி 75
மடங்குதல் - தத்தம் காரணங்
களின் ஒடுங்குதல் 75
மடநடைப்புள்-மென் நடையை
உடைய மாடப் புறா 328
மடல் - தாழம்பூ. இதழ் 218
மடுக்கோ - செலுத்துவேனோ 63
மடுத்து - சேர்த்து, அமிழ்த்து
குத்தி 245
மணந்தவர் - கலந்தவர் 323, 326
மண் உழையாவும் அறிதில்லை
மன்னன் - பூமியிடத்துள்ளா
ராய எல்லாராலும் அறியப்
படுகின்ற தில்லையிலுளனா
கிய மன்னனது, என்றது,
மலரணிடத் தெனவே
தெற்கே யுள்ளார்க்கல்
லாது தில்லையைத் தொழ
வொண்ணுமையின் வடக்
குள்ளார் மலரை யேந்தித்
தில்லையிற் சென்று தொழ

மாட்டாமையால், வணங்குவரென்பது கருத்து; அல்லது பாம்பும் புலியும் முதலாயின மலரிட்டுத் தொழத் தில்லையுள் வெளிப்பட்டா னென்றுமாம் 347.

பழைய உரை

மண்டலம் - சந்திரன் 177
மத்தகம் - நெற்றி 106
மது - (1) தேன், (2) வாயுறல் சிலேடை) 365
மதுகரம் - வண்டுகள் 295
மம்மர் - மயக்கம் 83
மம்மர் - (1) வருத்தம், (2) மயக்கம் 193
மருங்குல் - இடை 359
மருப்புத் திருத்தி விட்டார் - மருப்பைச் சீவிவிட்டார் 136
மரை அதள் - மான் தோல் (பள்ளி) 398
மல்லல் - வளம் 77, 161, 368
மலயம் - பொதியின் மலை 336
மலைத்து - மாறுபட்டு 25
மலைவோன் - சூடுவோன் 255
மழவிடை - இளைய ஏறு (புதல்வன்) 398
மறுகு - ஊரின் தெரு 328
மறைக்கும் பரிசுகள் என் - மறைக்கும்படி என் தான் 291
மா - கரிய 38
கருமை 102
மான் நோக்கம் 41, 200
பெரிய 193, 333
மாட்டி - மாள்வித்து, தள்ளி 284
மாட்டேம் - அறியேம் 358
மாத்து - பெருமை 373
மாதிரம் - திசைகள் 352
மாது - அழகு மட அழகு 316
மாந்தி - பருகி 356
மால்பு இயற்றும் வேய் - மூங்கிலேணி 133
மாழை - பேதைமை, மாவடு 61
மானம் - அளவை பிரமாணம் 335
மானும் - ஒக்கும் 130, 187
மிகுபதம் - ஆற்றுமை மிக்க அளவு 395
மிகை - ஒருவர் உள்ள மிகுதி 314
மிடைந்த - நெருங்கிய 314
மிலைத்த - சூடிய 25
முகை - போதுகளால் உண்டாகும் நறுநாற்றம் 314
முதுக்குறை - அறிவு 232
முத்தம் - (1) பல், 365
(2) முத்து (சிலேடை) 365
முத்தன் - இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன் 358
முதுக் குறைந்தாள் - அறிவு முதிர்ந்தாள், 294
முரம்பு - கல் விரவி உயர்ந்திருக்கும் நிலம் 202, 237
முற்றூட்டு - உழுவரை பார்க்க கலித்தொகை - முல்லை 11 பார்க்க
முழுவி - முத்தமிட்டு, முழுகுதல் 227
முழவு - குடமுழா 157
முழுவி - முலை முழுவி. முலையை முத்தங்கொண்டு 227
முறி - தளிர், கொழுந்து இலை 163
முறுவல் - புன்சிரிப்பு 227
முன்றில் - முற்றத்தில் 63
முற்றம் 239
முன்னவன் - உலகத்திற்கு முன் உள்ளோன் உரை 312
முன்னி - முற்பட்டு 16
எதிர்ப்பட்டு 121
முனகர் - நீசர், அறிவு இல்லாதவர் 217
முனை - வெம்முனை - கொடிய போர் 218, 250
மூதெயில் - முதிய ஊர் 212
மூவர் - அரி, அயன், இந்திரன் 337

மெய்ப்பாடு - புறத்துக் கண்ட தோர் பொருள் காரண மாக நெஞ்சின்கட் டோன் றிய விகாரத்தின் விளைவு
மெய்ப்பாடு-எண்வகை; நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், உவகை, வெகுளி என்பன.
மேதகவு - தக்க ஒழுக்கம் 244
மை - கருமை 199, 386
இருள் 262
மொய்-செறிவு, பெரியது 169, 262
வலிமை 81, 277
நெருங்கிய 366
மோட்டங் கதிர்முலை - பெரிய, அழகிய கதிர்ப்பை உடைய முலை 156
யாய் - மாதா 289, 291
தாய் 374
யாவையுமாம் ஏகம்-பராசக்தி 71
யாழுடையார் - கந்தருவர் 7
வட்கார் நிரை - பகைவர் கூட்டம் 152
வட்கி - கூசி 116
வடிவு - அழகு 139
வண் - வளவிய 295
வண்டானம் - (1) நீர்க்கோழி, - (2) நாரை வகை 189
வம்பு - (1) காலம் அல்லாத காலத்து மழை (2) புதுமை 159
வயம் - வலிமை 176
வேட்கை 383
வரம்பு - எல்லை 251
தகவு, தகுதி 377
வருத்தம் - விளையாட்டு 62
வல்சி - உணவு 253, 264
வல்லை - விரைய 368
வலக்காரங்கள் - விரகுகள், (தந்திரம்) 227
வள்துறை - வளவிய கடல் 380

வள்ளி - (1) வள்ளிக் கொடி (2) குறிஞ்சிநிலப் பெண் 128
வள்ளை - உலக்கைப் பாட்டு 221
வளாய் (வளாய்தல்)-விரவுதல் 69
வன் - பெரிய 237
வன்புறை - வற்புறுத்தும் சொற்கள் 16
வன்னி - வன்னித் தளிர், தீ 317
வாங்கு - வளைந்த 46
வாம் - வாமம் - அழகு 263, 344
வாய் - இடம் (சரிவாய்) 156, 347 366
வாய்தரு - வாய்ந்த 42
வாய்தலின் - இடம் தருமாயின் 80
வாவல் - வௌவால் 375
வார் - நீண்ட 366
வார்கழல் - நீண்ட கழல் 293
வாள் - ஒளி 153, 183
படை 301
வாளரிக்கண் - வாள்போலும் செவ்வரி படர்ந்த கண் 225
வான் அரமங்கையர் - அரமங்கையரின் மேலாகிய உருப்பசி, திலோத்தமை முதலாயினர் 371
வான்கழி - (1) சிவலோகம் (2) ஆகாயத்தைக் கடந்து நிற்றல் 85
விண்டு - பிளந்து 24
விடலை - (1) பாலைநிலத் தலைவன், (2) ஆண்மகன், வீரன் 218
வித்தகம் - சதுரப் பாடு 106
விதிர், விதிர்த்து - நடுங்கி 102
விம்மிக்கலுழ்ந்து - பொருமி அழுது 366
வியல் - அகன்ற 277
ஒத்து, இயைந்து 301
விரிநீர் - கடல் 317

வில்லி - காமன் 364
விலங்கல் - மலை 310
விழுத்துணை - சிறந்த துணை 106
விழுமலை - சிறந்த மலை 265
விள்ளும் - நீங்கும் 185
விளர்ப்ப - வெளுப்ப 70
வீ - பறவை - பரிதி மால்
கலைஞர் குறிப்பு 370
வீங்கும் - பெருகும் 158
வீதல் - கெடுதல், சாதல் 309
வெதிர் - மூங்கில் தண்டு 243
வெண்சுடர் - மதி 336
வெரீஇ - அஞ்சி 255
வெருவரல்-அஞ்சவேண்டாம்,
பயப்படாதே 279
வெள்கி - நாணி 26
வெறி - நறு நாற்றம் 125, 152,
256
வெறுப்ப - துன்புற 243
வேய் - மூடிய 119
வேரி - கள், மது 265, 292
வேயாது - சூடாது 374
வை - கூர்மை 233, 386
வைகல் - தங்குதல் 305

திருக்கோவையார்

கொளு அருஞ்சொற்பொருள் அகரவரிசை

[எண் : கொளு எண்]

அயர்வு - வருத்தம் 11
அயலுரை - அப்பால் வந்து உரைத்தல் 137
அரத்தம் - சிவப்பு 372
அரத்த வேல் - சிவந்த வேல் 377, 399
அரவக்கழல் - ஆரவாரிக்கும் கழல் 154, 155
அரவரு நுண்ணிடை - பாம்பின் படம்போன்ற அல்குல் சேர்ந்த நுண்ணிடை 81
அரவன் - பொன்திகழ் அரவன் - அழகிய சிறந்த பாம்பை உடையவன் 354
அழலுறுகோதை விழுமுறு பேதை - அக்கினியைச் சேர்ந்த மாலைபோல் வாடிய நாயகி 274
அழுக்கம் - வெறுப்பு 391
அழுக்கம் - வருத்தம் 157, 360, 391
அழுங்க - கவலைப்பட 335
அழுங்கல் - துக்கம் 29
அழுங்கல் சென்றது - மயக்கம் அடைந்தது 313
அழுங்கியது - வாடியது 276
அழுங்குதாய் - கிலேசிக்கின்ற தாய் 249
அளவு அளாயவள் - மிகவும் கலந்தவள் 165
ஆடற்குரவு - அசைந்த குரவு 241
ஆதரம் - அன்புடைமை 197
ஆயிழை பங்கன் - உமாதேவி பங்கனாகிய மகாதேவன் 246
இகல் அடுவேல் - மாறுபட்டாரைக் கொல்லும் வேல் 260
இணர்த்தார் - கொத்துமாலை 344
இகுளை - தோழி 307
இவ்வாறு இயங்கல் - இவ்வழியில் வாராதே கொள் 128
இழுக்கம் - குற்றம் 157
இன்னல் - துயரம் 287, 347
உரத்தகுவேல் - வலிபெற்ற வேல் 352
உழையர் பக்கத்தே நின்றவர் 364
ஊசல் - ஊஞ்சல் 16
ஏவ்வம் - கிலேசம் 284
ஐ அரிக்கண்ணி - அழகிய வரி படர்ந்த கண்ணை உடையவள் 49
ஐயர் - அண்ணன்மார் 136
ஒத்தது ஒவ்வாது - பொருந்தவும், பொருந்தாமலும் 263
ஓப்படுத்தது - பரிகரித்துக் கொள்ளென்று கையடை ஆக்கியது 213
கட்டு - கட்டுவித்திக்கு உரைத்த கட்டு வைத்தல் 283
கட்டுரைத்தது - சொன்னது 370, 371
கட்டுவித்தி - கட்டுப்படுக்கும் அவள் 285
கடம் - காடு 219, வழி, 222, 237, 238

கடம் - ஓங்கழற் கடம், மிக்க அழலுள்ள காடு 341
கடம் - வல் அழற்கடம் வலிய அழலுடைய காடு 342
கடி வாசனை (நாற்றம்) 113
கடி - கல்யாணம் 300
கடியாமாறு - கல்யாணம் ஆகும்படி 135
கடும் கடம் - அரிய காட்டுவழி 247
கரந்துறை கிளவி - கரந்து சொல்லும் வார்த்தை 50
கலம்புனை கொம்பர் - ஆபரணங்களை அணிந்த வஞ்சிக் கொம்பை ஒப்பவள் 206
கலைவளர் அல்குல் - மேகலை அணிந்த அல்குல் 392
கழுமல் - வருத்தம், மயக்கம் 28, 142, 329
கன்னிமான் இளையமான் 384
கால்கொண்டது - தொடங்கினது 283
குடகடல் - மேல்கடல் 187
குணகடல் - கிழ்க்கடல் 187
குரவரு குழலி - குரவம் பூவை ஒக்க நாறுகின்ற கூந்தல் 156
கையறுகிளவி - செயலற்றுச் சொன்னது 175
கையாறு - செயலற்ற ஒழுக்கம் 177
(குலம்புரி) கொம்பர் - அழகிய தாய் விரும்பத்தக்க வஞ்சிக் கொடியை ஒப்பாள் 251
கோடாய் - செவிலித்தாய் 226, 230, 234, 236, 2[illegible]8, 282
கோதை - மாலை 121
சிலைமானண்ணல் - சிலைத்தொழில் விறல் மாட்சிமைப்பட்ட நாயகன் 53
சின்மொழி - மெத்தென்ற வார்த்தை 183
சுரம் - அரியவழி 218
சூழிருங்கூந்தல் - சுற்றிக் கட்டப்பட்ட அளகத்தினை உடையவள் 275, 345
செஞ்சுடர் - சிறந்த அழகிய விளக்கு 356
செவ்வியிலள் - பக்குவி அல்லள் 97
சேட்சி - தூரம் 201
சேட்படுத்தது - நீளம் பார்த்துச் சொன்னது 98
சேட்படுதற்கு - தூரத்தன் ஆக்குவதற்கு 101
தடம் - தடாகம் 202, 203
தடவரை - பெரியமலை 151
தணந்தது - பிரிந்தது 182
தணப்பது - பிரிவது 315
தாமம் - மாலை 174
திணை - நிலம் 336
துணைக்கார் - விரைந்து செல்லும் மேகம் 348
தெருட்டியது - தெளிவித்தது 275, 326
தேம்படு கோதை - தேன் துளிக்கும் மாலையை உடையவள் 213
தொடர்ச்சி - இடைவிடாது வருதல் 60
தொடி - நிறத்தொடி - நிறமுடைத்த அழகிய வளை 290
தொடுத்தன விடுத்து - இனம் முறையார் அடுக்கிச் சொல்கின்ற பொருள்களைக் கொடுத்து 267
தோன்றல் - பிள்ளை 389
நடுங்க நாடியது - நடுங்கும்படிச் சொல்லியது 72
நயப்பித்தல் - விரும்ப இருப்பது 82
நயந்தபின் - உடன்பட்டபின் 90
நாண நாட்டியது - நாணும்படி செய்தது 67
நீடாய் - நற்றாய் 226, 230

நீடாவாடியது - நீட்டிப்ப வாடியது 394
நெறிகுழல் :—(1) தாழ்ச்சியை உடைய கூந்தல் 122
(2) நெறித்தலை உடைய அளகம் 125
நொடிக - விரைவாயாக 135
படைத்து மொழி கிளவி - சிட்டித்து உரைக்கும் சொல் 195 225
பண்புனை மொழி - பண் பொருந்தின சொல் 140
பணி - பாம்பின் படம் 12
பணை - மருதநிலம் 249
பதி - (1) ஊர் (2) நாயகன் 147
பதியின் சேட்சி - ஊரின் 'தூரம்' 201
பயிர்ப்பு - பயிலாத பொருள் 12
பராயது - வேண்டிக் கொண்டது 232, 235
பரிவு - வருத்தம் 190
பருவரல் பரிசு - துன்பத்தின் இயல்பு 13
பருவரல் - மிகவும் பெரிய கிலேசம் 145, 149, 253
பழங்கண் - வருத்தம் 313
பாறு - பருந்து, படகு 85
பிணி மலர்த்தார் - கட்டப் பட்ட மலர்மாலை 12
பீடு இவர் கற்பு - பெருமை மிக்க கற்பு 358
புரிதருகுழல் - நெறித்த கூந்தல் 216
புரியாழ்ப் பாணன் - விருப்பத் தக்க யாழினை உடைய பாணன் 387
புலம்பியது - வருந்தியது 278, 334
பெருமை நாட்டத்தவள் - பெரிய கண்ணை யுடையவள் 198
பொதும்பர் - சோலை 20
மகிழ் தூங்கு உளம் - மகிழ்ச்சி மிக்க உளம் 307
மடத்தகை - மடப்பத்தால் தகுதி உடையவள் 119
மணித்தாழ் குழலி - நீலமணியை ஒத்த கூந்தல் 340
மதர் அரிக்கண்ணி - நல்ல நிறம் பரந்த கண்களை உடையாள் 396
மயல் - மயக்கம் 281
மல் - வளப்பம் 354
மலைதல் - சூடுதல் 255
மலைமா னண்ணல் - மலை யொத்த நாயகன் 54
மறைப்புறக்கிளவி - மறைத்துப் பிறிது ஒன்றைச் சொல்லு கின்ற வார்த்தை 144
மறைத்த பின் - கரந்த இடத்து 105
மாண நாட்டிய பேதை - மாட்சிமை உடைத்தாய்ச் சொல்லப்பட்ட நாயகி 69
மால் - பெருமை 283
மா விரதியர் - பெருவிரதம் பூண்டவர்கள் 242
மாழை நோக்கி - குளிர்ந்த நோக்கினை உடையாள் 282
மான்தேர்வழி - புரவி பூட்டிய தேர் சென்ற வழி 185
மானவேல் - வீரவேல் 75
மிகுகழி காதல் - மிகவும் சிறந்த அன்பு 258
மிகுபதம் - மிக்க செவ்வி 395
முன்னுவது கண்டு - எதிர் கொண்ட படியைக்கண்டு 322
முனைவன் - முனை செய்யும் அரசன், இறைவன் 329
வண்ணம் - வடிவு 109
வரவுற்றது - வந்தது 346
வரைதரு கிளவி - வரைய வேண்டுமென்கிற வார்த்தை 262
வரைவு கடாய - வரைவை உயர்த்திச் சொன்ன 129

வரைவு கடாயது - வரைவை வற்புறுத்திச் சொன்னது 131
வரைவு கடாவி - வரைந்து கொள்ளும்படியை முடுக்கி 257
வழக்கு - வழங்கும் இயல்பு 204
வன்கறை - குருதிக்கறை 276
வன்புறை - வலியுறுத்தும் வார்த்தை 16
வன்புறை அழிந்தவள் - வலியுறுத்தல் இழந்த நாயகி 276
வாடா வூடல்-குறையாஊடல் 394
வாரம் - அன்புடமை 357
வான்தகை மடந்தை-பாலியத் தகைமைப்பாட்டை உடைய நாயகி 389
* வியல் - அகலம் 277
விரை - திவ்யகந்தம் 259
விளைவிலள் - விளைவை அறியாள் 104
விழுத்தகை - விழுமிய தகுதி உடைய 360
வீங்கு மென்முலை - பொழுதுக் குப் பொழுது விம்முகின்ற முலை 148
வெரீஇ - பயப்பட்டு 289
வெருவரு - பயப்படுகிற 289
வெறித்தலை - வெறியாட்டு இடம் 289
வெறிப்பூ - நறுநாற்றத்தை உடைய பூ 64
வைவேல் - கூரிய வேல் 382

---

* "வியலென் கிளவி அகலப் பொருட்டே"—தொல் - சொல்.